# கற்பக மலர்

கா.பொ.இரத்தினம்

811.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF PERADENIYA
18-7-2001
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF PERADENIYA
18-7-2001
★ LIBRARY ★

534281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கற்பக மலர்

தமிழ் மறைக் கழகத் தலைவர், 'தமிழ்ச் சான்றோர்'

**பேராசிரியர் கா. பொ. இரத்தினம்,**

பி.ஏ. (ஆனர்சு) இலண்டன்,

எம். ஏ., பி. ஓ. எல்., (சென்னை).

(மு. நா. பாராளுமன்ற உறுப்பினர், இலங்கை.)

534281

காந்தளகம்

4, முதல்மாடி, ரகிசாகட்டிடம்,
834, அண்ணா சாலை,
சென்னை—600 002

213, காங்கேயன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பேராசிரியர் கா. பொ. இரத்தினம்
கற்பக மலர்
திருக்குறள் கட்டுரைகள்
உரிமை : ஆசிரியருக்கு
வெளியீடு : காந்தளகம், சென்னை-2
முதற் பதிப்பு : ஆவணி, 1986
தமிழ் மறைக்கழக வெளியீடு 4
விலை : உரூபா. 12-50
தி. ஆ 2017

## காந்தளக வெளியீடுகள்

1. எனது யாழ்ப்பாணமே
2. ஈழத் தமிழர் இளமை
3. தமிழீழம் நாட்டெல்லைகள்
4. பறவைகளே
5. கந்தபுராணம்—உற்பத்தி காண்டம்

அச்சிட்டோர் :
ஸ்ரீகோமதி அச்சகம்
41, சூரப்ப முதலி தெரு
திருவல்லிக்கேணி
சென்னை-600 005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF PERADENIYA
18-7-2001
LIBRARY

# அணிந்துரை

கலைமாமணி
**திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள்**
இயக்குநர், திருக்குறள் நெறிபரப்பு மையம், சென்னை,

"கற்பனையில் சொல்லப்படும் "கற்பக மலர்", என்ற தலைப்பு, இந்த நூலுக்கு எப்படிப் பொருத்த மாகும்?" என்று எண்ணிக்கொண்டு, பக்கங்களைப் புரட்டினேன்; படித்துக்கொண்டு வந்தேன்; அந்தப் பாடல் வரிகள் என் கண்ணில் படுவதற்குள், **பேராசிரியர் கா. பொ. இரத்தினம்** அவர்களின் நுட்பமான ஒரு விளக்கம் எனது நெஞ்சில் நுழைந்து கொண்டு விட்டது. அந்த ஒரு நுட்பமே, "பேராசிரியர் இரத்தினம் அவர்கள் உண்மையிலேயே ஓர் இரத்தினம்" என்பதற்குப் போதுமான சான்றாகும்.

தேவருலகைப் புராணங்களின் படைப்பு எனக்கூறி இப்பொழுது மக்கள் ஒதுக்குகின்றனர். சமயக் கொள்கைகளுடனும் புராணக் கதைகளுடனும் முட்டிக் கொள்ளாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தேவருலகை ஒரு கற்பனை எனக் கொண்டால், மனிதன் மண்ணுலகக் குறை நீக்கி, முழு இன்பத்தை முட்டின்றிப் பெறுதற்குரிய உலகமாகத் தேவருலகைப் படைத்தான் எனலாம். இன்பத்தை நாடும் மனிதனுடைய முனைப்பு, கற்பனை செய்த ஒப்பற்ற உலகு தேவருலகு. மண்ணுலகத் திலே பல வழிகளில் அல்லலுற்ற மனித உள்ளத்தின் கற்பனையின் உச்சப் படைப்பு அது.

இதுதான் உயர்திரு இரத்தினம் அவர்கள் தேவ ருலகத்தைப் பற்றி நமக்கு எழுதிக் காட்டியுள்ள நுட்பம்.

இந்தக் கருத்தைப் பலமான அடிப்படையாகக் கொண்டு, திருவள்ளுவரின் உயர்ந்த எண்ணங்களை வெளிப்படுத்தும் இந்தப் புத்தகத்துக்குக் "கற்பக மலர்" என்று பெயர் சூட்டியிருப்பது மிகவும் பொருத்தமேயாகும் என்பதை அறிந்து, பேராசிரியர் இரத்தினம் அவர்களை நான் பெரிதும் பாராட்டு கிறேன்; **அவரது "நுண்மாண் நுழைபுலம்" கண்டு வியக்கிறேன்.** புதுமையாகச் சிந்திக்கும் அவரது போக்கு, குறளாசிரியர் கருத்துக்களுக்கு வலிவு சேர்ப்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மக்களால் திரித்து உணரப்படும் பல செய்திகளை ஆசிரியர் இரத்தினம் அவர்கள், தம் கட்டுரைகள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். **காலங்காலமாகத் தவறாக மக்கள் மனத்தில் படிந்துவிட்ட மாசுகளைப் போக்கும் முயற்சி யில் பேராசிரியர் இரத்தினம் அவர்கள் ஈடுபட்டு, இந்த நூலில் வெற்றி கண்டிருக்கிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

''கள்ளும் காமமும்'' என்ற கட்டுரையில், 'காமம்' என்பதற்கான அவருடைய தெளிபொருள் விளக்கம் மிக்க அருமை. ''அன்பின் ஐந்திணைக் காதல்'' என்பதையே வள்ளுவர் காமம் என்ற சொல்லால் சுட்டியுள்ளார் என்று கூறி, ''கள்ளினும் சிறந்தது காதல்'' என்பதை வள்ளுவரின் சொற்களைக் கொண்டு, கட்டுரை வன்மையோடு திருவாளர் இரத்தினம் அவர்கள் நிறுவியும் உள்ளார்.

இதுபோலவே பேராசிரியரின் கட்டுரைகள் யாவும் தேவையான விளக்கங்களைத் தந்து, அறிவுக்குத் தெளிவு பயப்பனவாய் உள்ளன.

''விதியும் விடா முயற்சியும்'', ''ஐந்து தூண்கள்'', ''காந்தியமும் வள்ளுவமும்'', ''அம்பும் வேலும்'', ''சம உடைமைக்கு வழி'', ''கனியும் கருக்காயும்'' என்பன போன்ற **எழுத்தோவியங்கள் — இருட்டுக்கு ஒளியாகும்; மயக்கத்துக்கு மருந்தாகும்.**

திரு. இரத்தினம் அவர்கள் இலங்கை மண்ணில் தமிழுணர்ச்சியை வேரூன்றச் செய்த பெருமக்களில் ஒருவர். தமிழ்மறைக் கழகத்தின் சார்பில் அவர் ஆற்றிய அரும் பணிகளைத் தமிழகம் நன்றாக அறியும். பல மாநாடுகளை நடத்திப் பார்புகழும் சிறப்பைப் பெற்றவர் அவர்.

தமிழகத்திற்கு அவர் வந்த பிறகும், தமிழுக்கு அவர் ஆற்றும் தொண்டு, இந்த நூல்மூலம் தொடர்கிறது. **அவருடைய தமிழ்த் தொண்டு வென்று, தமிழகத்தில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புதிய புகழை அவருக்குப் பெற்றுத்தரும் என்று உறுதியாக நம்புகின்றேன்.

இந்தக் "கற்பகமலர்" நாடெல்லாம் பரவி மணந்து சிறந்த பயன் நல்குதல் வேண்டும் என்ற எனது விழைவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை, திருக்குறளார் வீ. முனிசாமி

6-9-86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முன்னுரை

வேலணையில் நடைபெற்ற தமிழ்மறைக் கழகத்தின் இருபதாவது திருக்குறள் மாநாட்டில் 29–5–80 இல் வெளியிடப்பட்ட **தமிழ்மறை விருந்து** எனும் எனது நூலின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டேன்: "தமிழ் மறை பற்றி நான் எழுதிய கட்டுரைகள், திருக்குறள் மாநாடுகளில் நிகழ்த்திய தலைமை உரைகள் முதலியனவற்றில் ஒரு பகுதியே தமிழ்மறை விருந்து எனும் பெயருடன் இந்நூலாக உருவாகியுளது. மற்றைய பகுதி **கற்பக மலர்** எனும் பெயர் பூண்டு விரைவில் மலரும். இந்த இரண்டு நூல்களிலுமுள்ள கட்டுரைகள், கவிதைகளிற் பல இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா முதலிய நாடுகளிலுள்ள தமிழ் ஏடுகளிலும் சிறப்பு மலர் களிலும் வெளிவந்தனவாகும்."

**கற்பக மலர்** எனும் இந்த நூல் ஒரு பாடலையும், ஐந்து உரைகளையும், ஒன்பது கட்டுரைகளையும் கொண்டுளது. இவற்றுட் சில கட்டுரைகள் புதிதாக எழுதப் பட்டன.

தமிழ்மறை விருந்தினை வெளியிட்ட பொழுது இலங்கையிலிருந்த அரசியற் சூழ்நிலைக்கும் இப்பொழு துள்ள அரசியற் சூழ்நிலைக்கும் பல வேறுபாடுகள் உள. அப்பொழுது நான் பாராளுமன்ற உறுப்பினனாக இருந் தேன். எதையும் எவ்விடத்திலும்பேசும் உரிமை இருந்தது. 1976 இல் வெளியிடப்பட்ட "தடுப்புக் காவலில் பத்து நாள்கள்" எனும் எனது நூலில் இந்த உரிமையை விரித் துக் கூறியுளேன். அந்தக் கூற்றை ஈண்டுத் தருதல் இயை புடைத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எவர் முன்னிலையிலும், எவ்வித அச்சமுமின்றி விரும்பிய எதனையும் கூறும் வாய்ப்பும், வன்மையும், எதனையும் கண்டிக்கும் துணிவும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. தேசிய அரசுப்பேரவையில் பிரதம அமைச்சர் தொடக்கம் எல்லா அமைச்சர்களையும் தட்டிக் கேட்கும் வாய்ப்பும், அமைச்சர்களும் அவர்களுடைய பொறுப்பி லுள்ள உத்தியோகத்தர்களும் செய்யும் தவறுகளையோ அநீதிகளையோ அஞ்சாமலும் அசையாமலும் எடுத்துக் காட்டி இடித்துரைக்கும் உரிமையும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு." இதுதான் அந்தக் கூற்றாகும்.

நான் பாராளுமன்றப்பதவியைத் இப்பொழுது துறந்து விட்டேன். இலங்கை முன் எப்பொழுதும் காணாதனவும் 1983ஆடியில் நிகழ்ந்தனவுமான தமிழினக் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு, முதலிய கொடிய வன் செயல்களின் போது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தால் பாராளு மன்ற உறுப்பினர் பதவியை மட்டுமன்றிக் கட்டுப் பாடற்ற பேச்சுரிமை, எழுத்துரிமை, செயலுரிமைகள் யாவற்றையுமே நாம் இழந்துவிட்டோம். தமிழ் ஈழம் குறித்து எழுதுதல், பேசுதல், செயற்படுதல் முதலியன யாவும் சட்டத்தால் வலிந்து தடுக்கப்பட்டுள.

இப்பொழுது தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத் தால் தமிழ் ஈழம் முழுவதும் போர்க்களமாகி விட்டது. ஆயிரக்கணக்கில் எம் மக்கள் சிங்களப் படைகளாற் கொல்லப்படுகின்றனர். எங்கும் இரத்த ஆறு ஓடுகிறது. இறைமையை இழந்து உள்ளம் குமுறிக் கொதித்துத் துன்பக்கடலில் மூழ்கி இன்னலுறும் சூழ் நிலையில்

**"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கங் கடிந்து செயல்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனுந் தமிழ்மறையே இந்நூலையும் இதனை அடுத்து வேறு சில நூல்களையும் வெளியிடுதற்கு என்னை ஊக்கு கின்றது.

தமிழ்மறை விருந்திலும் இந்தக் கற்பகமலரிலும் சில கருத்துக்களும் குறள்களும் ஒரு முறைக்கு மேலும் காட்சி யளிக்கலாம். அவற்றின் உள்ளங்கவர் ஆற்றலுடன், கால இடையீடு, ஊர் இடையீடு, சூழ்நிலைத்தாக்கம் முதலி யனவே இதற்குக்காரணங்களாகும் என்பதையும் கூறல் இன்றியமையாதது. இக்கட்டுரைகளும் உரைகளும் 1943 தொடக்கம் 1984வரையுமுள்ள நாற்பதாண்டுகளுக்கு மேற் பட்ட காலப்பகுதியை அளாவியனவாகும்.

இந்நூலுக்கு அணிந்துரை நல்கிய தமிழக அரசின் திருக்குறள் நெறிபரப்பு மைய இயக்குநர், கலைமாமணி திருக்குறளார் வீ. முனிசாமி அவர்களுக்கும் இந்நூலை வெளியிட்ட காந்தளகம் பதிப்பகத்தார்க்கும் என் நன்றி உரியது.

வேலணை, **கா. பொ. இரத்தினம்**
10. 3. 86

UNIVERSITY OF PERADENIYA
18-7-2001
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | அவனி காணா அருமருந்து | 7 |
| 2. | கற்பக மலர் | 9 |
| 3. | வள்ளுவர் வாய்ச்சொல் | 14 |
| 4. | இறக்கும் வரை | 28 |
| 5. | தலை அறம் | 36 |
| 6. | கள்ளும் காமமும் | 42 |
| 7. | விதியும் விடாமுயற்சியும் | 47 |
| 8. | ஐந்து தூண்கள் | 58 |
| 9. | காந்தியமும் வள்ளுவமும் | 71 |
| 10. | அம்பும் வேலும் | 80 |
| 11. | சமஉடைமைக்கு வழி | 91 |
| 12. | கனியும் கருக்காயும் | 99 |
| 13. | பாராளுமன்றத்தில் | 119 |
| 14. | ஒரு குறளே போதும் | 148 |
| 15. | திருக்குறளும் மொழிபெயர்ப்புக்களும் | 163 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அவனிகாணா அருமருந்து

ஊசியினால் மருந்தேற்றி உடல்நோய் தீர்ப்பர்
உள்ளத்து நோய்தீர்க்க ஒன்றுங் காணார்!
தேசிழந்து சோர்வடைந்து தேய்ந்த உள்ளம்
திட்பமுற உயர்வதற்குத் திறமை மிக்க
மாசிணையாப் பெருமருந்து மனத்துக் கென்றே
மாண்புடைய வள்ளுவனார் மதித்துத் தந்த
ஆசிணையாத் தமிழ்மறையே அவனி காணா
அருமருந்தாம் இதன்திறனை அளப்போர் யாரே!

இரவினிலே சூழ்ந்திட்ட இருளைப் போக்க
இலங்குகின்ற மின்விளக்கிற்கு எல்லை உண்டோ?
கரவினுடன் பொறாமையுங் காழ்ப்புங் கொண்டு
கயமையாற் பிணிப்புண்டு கலங்கும் உள்ளம்
விரவிடும்பேர் இருள்தன்னை விரட்ட வல்ல
வெளிச்சத்தைப் பரப்புமொரு விளக்கு நல்லோர்
பரவிடுஞ்செந் தமிழ்மறையே படித்துப் பார்த்துப்
பகருங்கள் இதற்குநிகர் பாரில் உண்டோ?

அறந்தழைக்க அரசிருத்தி அழகு செய்ய
அன்பென்னும் அணிபூட்டி, அருளை நாடிச்
சிறந்தமணி முடியாகச் சிரத்திற் சூட்டிச்
செல்வம்நற் கல்வியுடன் செழித்துப் பொங்க
மறந்தவிர்த்து நல்வாழ்வு மக்கள் வாழ
மண்ணுலகை விண்ணுலகாய் மாற்றிக் காட்டிப்
பிறந்தபயன் இங்குபெறப் பிறர்சொல் லாத
பெருநெறியைத் தமிழ்மறைதான் பேசும் அன்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF PERADENIYA
18-7-2001
LIBRARY

# கற்பக மலர்

திருக்குறளைப் படித்தார் ஒரு புலவர். அதனை மீண்டும் மீண்டும் அவர் படித்தார். அதன் அருமை பெருமைகள் யாவும் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

புற்றீசல்கள் போலத் தோன்றி மறையும் நூல்களும், சில நாடுகளிற் சில காலத்து விளங்கிப் பின் மறையும் நூல்களும் அவர் கண்முன்னே தோன்றின. "திருக்குறள் இவற்றைப் போன்றதன்று, என்றும் நிலைத்து நிற்கும் பெருநூல்; காலங்கடந்த நூல்" என்று அவர் உணர்ந்தார்.

அப்புலவர் பெருமான் பல நூல்களைப் பயின்றவர். சில நூல்கள் அவரை எவ்வகையிலும் கவரவில்லை. சில நூல்கள் புதுமையுடையனவாயிருந்தன. சில முறை படித்தவுடன் அவற்றின் புதுமையுங் குறைந்தது. அவற்றை மீண்டும் படித்தற்கு நாட்டம் உண்டாகவில்லை. ஆனால், திருக்குறளைப் படிக்கப் படிக்கப் படிக்குந்தோறும் உள்ளத்தைப் பிணித்துப் புதுப்புது உணர்ச்சிகளை உண்டாக்கும் அதன் புதுமையைக் கண்டார். சொல்லுக்கடங்காத அதன் சொல்லழகிலும் பொருளழகிலும் திளைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திருக்குறளில் நுழைய நுழையத் தெவிட்டாத இன்பம், தொடுமணற் கேணியில் நீர் ஊறுவது போல் ஊறுவதை அவர் பட்டறிவு வாயிலாக உணர்ந்தார்; இன்று போல் அஃது என்றும் இன்பம் நல்கும் என்று எண்ணினார்; துன்பத்தை நீக்கி இன்பமாக வாழு தற்கு அது வழிகாட்டும் என்று அறிந்தார்.

சில நூல்கள் தோன்றிய ஊருக்குள்ளே மட்டும் சிறைப்பட்டுக் கிடக்கும். சில நூல்கள் எம்மொழி களில் தோன்றினவோ அம் மொழிகளைப் பேசும் மக்கள் வாழும் நாடுகள் எங்கும் பரக்கும். இவற்றைப் போலன்றிப் பல மொழிகளிலே புகுந்து பல நாடு களிலே வாழும் சிறப்பு—உலக நூலாக விளங்கும் உயர்வு—திருக்குறளுக்கு உண்டு என்பது அவர் நெஞ்சினை உறுத்தியது. திருக்குறளுக்கு இணையான இலக்கிய நூல் இவ்வுலகில் இல்லை என்று உணர்ந் தார்.

திருக்குறளிலுஞ் சிறந்த நூல் இனித் தோன்றாது எனுங்கருத்தும் அவர் உள்ளத்திலிடங் கொண்டது. படிப்போர் எத்தன்மையராயினும் விரும்பிப் போற்றத்தக்க ''திரு'' நிறைந்த நூல் திருக்குறள் என்று அவர் முடிவு செய்தார்; இத்தகைய நூல் தெய்வ நூலே என்று போற்றினார்; இந்நூலைத் தந்த திருவள்ளுவர் புகழ் என்றும் நிலைத்து நிற்கும் என்று கண்டார்; வள்ளுவரைப் புலவர்க்கு அரசன் என்று கொண்டாட விழைந்தார்.

இத்தகைய வியப்புக்குரிய திருக்குறளிலுள்ள கருத்துக்கள் திருவள்ளுவருடைய வாயிலிருந்து பிறந் தனவா? பிறரிடமிருந்து பெறப்பட்டனவா? என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர் ஆராய்ந்தார்; "வள்ளுவன் வாய்ச்சொல்" என்றே முடிவு செய்தார்.

வாழத் தெரியாது தளர்ந்து வழுக்கி வழுக்கி விழும் மக்களுக்கு ஊன்றுகோல் போல உதவும் வாய்ச் சொற்கள் அவை என்பதையும்[1], சாதி மத வேறுபாடு களின்றி யாவர்க்கும் ஒத்தனவாய், அன்பு இழை யோடும் தன்மையனவான அவை உண்மைப் பொருளை உணர்த்தும் வாய்ச்சொற்கள் என்பதை யும்[2], தமிழ்க் குலத்தின் தலைமகன் திருவள்ளுவர் என்பதையும், அவருடைய வாய்ச்சொல் தமிழ்க் குலத்தின் பெருமையைக் காட்டுகிறது என்பதையும்[3] எடுத்துக்காட்டுதற்கு அவர் உள்ளந் துடித்தது.

சில சொற்களினாலே பெரும் உண்மைகளை விளக்கிய திருவள்ளுவருடைய திருக்குறளின் திறத் தைச் சில சொற்களாலேயே சுருக்கமாக உரைக்க முனைந்தார் அப்புலவர்.

அவருடைய உள்ளத்திலே "இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்ற துணர விரித்துரை யாதார்" எனுந் திருக்குறள் நிழலிட்டது. கற்றதை—உணர்ந்ததை—

---

(1) "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்"—தமிழ் மறை—415.

(2) "இன்சொலால் ஈரமளைஇப் படிறிலவாஞ் செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்"—தமிழ் மறை—91,

(3) "நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங் குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்"—தமிழ் மறை—959.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உரைத்துருவாக்கப்பட்ட திருக்குறளை ஒருமலரென்று கூறலாம் எனக் கருதினார். அரும்பிப் போதாகி மலர்ந்து வாடும் இயல்புடையன இவ்வுலக மலர்கள். எனவே, இவற்றைத் திருக்குறளுக்கு உவமையாகக் கூறல் பொருத்தமற்றது. ''காகிதமலர், சித்திரமலர், பொன்மலர்......'' எனச் செயற்கை மலர்களையும் அவர் ஒருகணம் எண்ணினார். ''சுருங்குவன, மங்குவன, மணமில்லாதன, தேன்சொட்டாதன...'' என்று மறுகணம் அவற்றையும் ஒதுக்கினார் அவர்.

பின்னர் அவருடைய உள்ளம் மண்ணுலகை விட்டுத் தேவருலகிற் புகுந்தது. தேவருலகைப் புராணங்களின் படைப்பு எனக்கூறி இப்பொழுது மக்கள் ஒதுக்குகின்றனர். சமயக் கொள்கைகளுடனும் புராணக் கதைகளுடனும் முட்டிக் கொள்ளாமல் தேவருலகை ஒரு கற்பனை எனக் கொண்டால், மனிதன் மண்ணுலகக் குறை நீக்கி, முழு இன்பத்தை முட்டின்றிப் பெறுதற்குரிய உலகமாகத் தேவருலகைப் படைத்தான் எனலாம். இன்பத்தை நாடும் மனிதனுடைய முனைப்புக் கற்பனை செய்த ஒப்பற்ற உலகு தேவருலகு. மண்ணுலகத்திலே பலவழிகளில் அல்லலுற்ற மனித உள்ளத்தின் கற்பனையின் உச்சப் படைப்பு அது. இறப்பை நீக்குதற்கு அமிழ்தமும் விரும்பியவற்றை விரும்பியவாறு உடனே கொடுக்கக் காமதேனு, கற்பகதரு முதலியனவும் படைக்கப் பட்டன.

விண்ணுலகம் புக்க புலவருள்ளம் கற்பக மலரைக் கண்டது. இம்மலர் உலகத்து மலர்களிலுள்ள குறைகளின்றி விளங்கும் புதுமையான மலர். இஃது என்றும் வாடாது; எப்பொழுதும் புதியதாகத் தேன்பிலிற்றி மணம் வீசித் திகழுமியல்புடையது. எனவே இத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தெய்வத்திரு மலரே திருக்குறளுடன் ஒப்பிடத்தக்க சிறப்புடையதென்று உணர்ந்தார் அவர்.

''என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க் – குன்றாத
செந்துவரிக் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்''

என்று திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றித் தாம் கொண்ட உணர்ச்சி, கருத்து முதலிய எல்லா வற்றையும் அமைத்து அழகு ததும்பப் பாடினார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இவர் சுருக்க மாகப் பாடி வலியுறுத்திய இக்கருத்துக்கள் பல வற்றைத் திருக்குறளினைப் பற்றி எழுதிய உருசிய அறிஞர் திரு. அலச்சாந்தர் பயாதிகோசிக்கி விரித்து ரைத்துளர் என்பதை அறியும் பொழுது இப்பாட்டுப் பொன் போற்பொதிந்து போற்றத்தக்கதாகிறது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வள்ளுவர் வாய்ச்சொல்*

தமிழ்மறையாம் திருக்குறளுக்குப் பத்துப் பெயர்களும் திருவள்ளுவருக்குப் பத்துப் பெயர்களும் உண்டென்று முன்னர் அறிஞர்கள் கணித்தார்கள். இப்பொழுது மேலும் பல பெயர்களாலே தமிழ்மறை வழங்கப்படுகிறது. இவற்றுள் வள்ளுவர் வாய்மொழி என்பது பெரு வழக்கிலுள்ளது. திருவள்ளுவ மாலைப் பாடல்களிலும் இப்பெயர் பயின்று வந்துளது. ''வள்ளுவர் வாய்ச்சொல்'' என்பது திருவள்ளுவ மாலையில் ஒரு வெண்பாவிற் காணப்படுகிறது. இந்த வள்ளுவர் வாய்ச்சொல் என்பதையே தமிழ்மறையைக் குறித்தற்குயான் தெரிந்தெடுத்துளேன். வாய்மொழி எனுந் தொடர் திருக்குறளில் இல்லை. ''வாய்ச்சொல்'' எனுந்தொடர் மூன்று குறள்களில் உள்ளது. இவற்றுடன் ''இறந்தார்வாய் இன்னாச் சொல்'' எனவும், ''வாய்ச்சொற்கள் என்ன பயனுமில'' எனவும் இரண்டு குறள்கள் கூறுகின்றன.

மக்கள் வழுக்கல் நிறைந்த வாழ்வுப் பயணத்தில் வழுக்கி விழும் பொழுது அவர்களை விழாமற் காப்ப

---

* கொழும்பு வானொலியில் 6-3-1947 இல் நிகழ்த்திய உரையைத் தழுவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தற்கு ஓர் ஊன்றுகோல் வேண்டும். மக்களுக்குச் சிறந்த ஊன்றுகோல் ஒன்றை உருவாக்கிக் கொடுத்துளர் திருவள்ளுவர். இந்த ஊன்றுகோலைப் பிடித்துக்கொண்டு வழுக்கி விழாமல் நம்பிக்கையுடனும் துணிவுடனும் வாழ்வுப் பயணத்தைச் செய்யலாம். தமிழ் மறையே இந்த ஊன்றுகோல். இதனை வள்ளுவரே கூறியுளர்.

"இழுக்கல் உடைஉழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல் "

உயிரைக் கொடுத்தும் ஒழுக்கத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறும் வள்ளுவரிலும் சிறந்த ஒழுக்கமுடையார் பிறருளரா? இது வாய்ச்சொல்லைக் கொண்ட முதலாவது குறளாகும்.

"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு."

இது செம்பொருளைக் காண்பதை விளக்குகிறது. செம்பொருள் என்பது மெய்ப்பொருள்—உண்மைப் பொருள்—பரம்பொருள். இதனைக் கண்டு உரைத்தவர் திருவள்ளுவர். எனவே அவருடைய தமிழ்மறை செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்லாகின்றது. செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்லைப் பற்றிக் கூறும் குறளைப் படித்து மகிழ்வோம்.

"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்."

இஃது இரண்டாவது வாய்ச்சொல். நிலத்தின் தன்மையை அதில் முளைத்த முளையைக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறியலாம். இதைப் போலக் குலத்தின் திறனை அக்குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல் காட்டும் என்பதை,

> "நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
> குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்"

எனுங் குறள் விளக்குகிறது. இக்குறளில் உள்ள வாய்ச் சொல் திருக்குறளிலுள்ள மூன்றாவது "வாய்ச்சொல்" லாகும். இக்குறளைப் பாடிய வள்ளுவர் உயர்ந்த குடியினர் என்பதை அவருடைய வாய்ச்சொற் களாகிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களும் நிலைநாட்டுகின்றன.

எனவே தமிழ்மறை ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்—செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்— குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல் எனப் போற்றப் பட வேண்டிய பெருமையைப் பெற்றுளது.

அன்றியும், சொல்லின் திறனும் வகையும் நன்கு தெரிந்தவர் வள்ளுவர். சொல்வன்மை எனும் அதிகாரத்தில் சொல்லின்ஆற்றலை அவர் தெளிவாகக் கூறிவிளக்கியுளர். வெல்லுஞ் சொல் இல்லாத சொல்லை ஆளவேண்டுமென விதித்தவரும் அவரே யாவர். எனவே, அவருடைய வாய்ச்சொல்லாம் திருக்குறள் வெல்லுஞ் சொற்களையே கொண்டுளது. இதில் ஒரு சொல்லைத் தானும் நீக்கி அதனிடத்தில் அதனை வெல்லுஞ் சொல் ஒன்றை இடமுடியாது. அவருடைய வாய்ச்சொல் எதனையும் பிறர் வாய்ச் சொல் வெல்லமுடியாது.

இத்தகைய பெருமைக்குரிய திருவள்ளுவரையும் அவருடைய தமிழ்மறையாகிய திருக்குறளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கேள்வியளவிலேனும் அறியாதவர்கள் தமிழராக இருக்க முடியாது. ஏன்? தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் என்றும் அழியாப்பெரும்புகழை ஈட்டிக்கொடுத்த பெரியார் திருவள்ளுவரே யாதலின் என்க. உலகம் முழுதுமே அவருடைய தமிழ்மறையைப் போற்றுகின்றது. ஆங்கிலம், பிரெஞ்சு, சேர்மன், உருசிய மொழி, சீன மொழி முதலிய மொழிகள் பலவற்றில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த மொழி பெயர்ப்புக்கள் வாயிலாகத் திருக்குறளைப் படித்தறிந்த பிறநாட்டு மக்கள் திருவள்ளுவரைப் பாராட்டுகிறார்கள். எனவே, தமிழ் மக்களாகிய நாம் அவருக்குச் செய்யத்தக்க கைமாறுண்டா? திருக்குறளின் உலகப் புகழைக் கண்டு இன்ப வெள்ளத்திற் படிந்த பாரதியார்

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு''

எனப்பாடிப் பரவசமடைந்தார். திருவள்ளுவர் தமிழ்நாட்டுக்கு மாத்திரம் உரியவரல்லர்; அவர் ஓர் உலகப் புலவர் அவருடைய திருக்குறள் உலகம் முழுவதற்கும் உரித்தான நூல்.

இத்தகைய பெருமை நிறைந்த திருக்குறளில் என்ன கூறப்படுகிறது? எனும் வினாவுக்கு என்ன கூறப்படவில்லை? எனும் வினாவே பொருத்தமான விடையளிக்கிறது. ஏனெனில் எல்லாப் பொருள்களும் இதில் உள; இல்லாத பொருள் ஒன்றுமில்லை யாதலி னென்க. திருக்குறளின் சிறப்பையும் தலைமையையும் நன்கு புலப்படுத்தத்தக்க பல கதைகள் தமிழ்நாட்டில் வழங்குகின்றன. அவற்றுள் ஒன்று ஈண்டுப் பொருத்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சென்னை அரசினர் திராவிட மொழிகள் ஒவ்வொன்றிலுமுள்ள சிறந்த ஒரு நூலை அச்சிட்டு வெளிப்படுத்த எண்ணினர்; தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகளிற் றேர்ந்த புலவர்களைத் தனித்தனி அழைத்துச் சிறந்த ஒரு நூலைக் கூறும்படி கேட்டனர். அவ்வாறழைக்கப்பட்ட தமிழ்ப்புலவர் ஒருவர் திருக்குறளே சிறந்த தமிழ் நூல் என்று கூறினார். உடனே "காரணம் யாது?" எனும் வினாவெழுந்தது. "எல்லாப் பொருளும் இதில் உள" எனப் புலவர் விடையிறுத்தார். இவ்வாறு தலைகால் தெரியாமற் புகழ்வது "கர்நாடகப் புலவர்" மரபென் றெண்ணிக்கொண்டு, "கல்லைப் பற்றியும் திருக்குறளிற் கூறப்படுகிறதா?" என்று அவர்கள் கேட்டனர். "ஆம், இரண்டு இடங்களில் "கல்" வருகிறது.

> "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
> கருமமே கட்டளைக் கல்."

> "வீழ்நாள் வழிபடாமை நன்றாற்றின் அஃதொருவன்
> வாழ்நாள் வழியடைக்குங் கல்"

எனுந் திருக்குறள்களைப் பாருங்கள்" எனப் புலவர் கூறினார். பரிகாசமாகக் கேட்டவர்கள் வெட்கித் தலைகுனிந்து திருக்குறளைச் சிறந்த நூலென ஏற்றுக் கொண்டனர் என்பர்.

தமிழிலேயுள்ள சிறந்த நூல்களைச் சேர்த்தெண்ணும் தனி வெண்பாக்கள் எல்லாம் திருக்குறளை நடுநாயகமாக வைத்தே உரைக்கின்றன. தேவருடைய குறளின் சொற்களையும் கருத்துக்களையும் எடுத்தாளாத புலவர்கள் இல்லை எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திருவள்ளுவ மாலை எனும் நூலிலுள்ள வெண் பாக்கள் திருக்குறளைப் பல கோணங்களில் நோக்கிப் பார்த்துப்பல சிறந்த திறனாய்வுகளை வெளிப்படுத்து கின்றன. இம்மட்டுமா? திருக்குறளை வடமொழி வேதங்களோடு ஒப்பிட்டுக்காட்டி அவற்றிலும் பார்க் கத்திருக்குறளிற் காணப்படும் பல தனிச் சிறப்புக் களையும் புலவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி''

என மனோன்மணீய ஆசிரியர் உருகி உருகிப் பாடினார்.

உலகத்து மக்கள் யாவரும் தம் வாழ்க்கையினை இன்பமாக வாழ விரும்புகின்றனர். துன்பம் நேரிட் டாலும் அதனாற் சலிக்காது அதனைவென்று இன்ப மாக வாழும் வழியைத் திருக்குறளைப் போல் இலகு வாகவுந் தெளிவாகவும் எடுத்துக் காட்டும் நூல் வேறு ஒன்றுமில்லையெனல் மிகையாகாது. எந்தக் குடியிற் பிறந்தாலும், எந்த நாட்டில் வாழ்ந்தாலும், எந்தத் தொழிலைச் செய்தாலும் எப்பொழுதும் இன்பமாக வாழும் நெறியையே திருக்குறள் வகுத்துக் காட்டு கின்றது.

மக்களுக்குள் உயர்வு தாழ்வு கிடையாது. "யாதும் ஊரே யாவருங் கேளிர்'' என்னும் சமத்துவக் கொள்கையே தமிழ் மக்களுடைய தனிக் கொள்கை. இக்கொள்கையை நன்கு விளக்கிக் கடைபிடிக்கச் செய்தற்கே திருக்குறள் எழுந்தது. மனக்கவலையை மாற்றும் மருந்து தனக்குவமை இல்லாதான் தாளே என அஃது அறுதியிட்டு உரைக்கின்றது. மனிதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மிருகமாக-அசுரனாக-வாழாது, மனிதனாக - அமர னாக-வாழும் வகையை அதுகாட்டுகிறது.பொறாமை, அழுக்காறு, தீயொழுக்கம்,பேராசை,கோபம் முதலிய சமுதாய அரக்கர்களை வதைக்கும் வழியைப் போதிக் கிறது; குடிகள் கூடி அமைதியாக இன்பமுடன் வாழும் முறையையும் அவற்றைக் காக்கும் அரசியலின் தன்மைகளையும் அஃது எடுத்து விளக்குகிறது.

சுயநலமே மக்களை ஆட்டி அலைத்துச் சமுதாயத் தையும் நாடுகளையும் நசுக்கும் பெரிய அணுக்குண் டாகும். இந்தச் சுயநலத்தைக் கடிந்து, மனிதன் பிறர் நலனுக்குமாக வாழவழிகாட்டுகிறது திருக்குறள். அதன் எப்பகுதியைப் பார்த்தாலும் சுயநல ஒறுப்பும் பிறர்நல உழைப்புமே தோற்றமளிக்கின்றன. சுய நலத்தை வேரோடறுத்துக் களைய வல்லது அன்பெ னும் அருமருந்தேயாகும். திருக்குறள் ஒரு பெரும் அன்பூற்று. வள்ளுவர் மக்கள் உய்ய வகுத்துக் காட்டும் நெறி அன்பு நெறியே. அன்பேமக்களுடைய உயிர்நிலை என்பதே அவருடைய வாய்ச்சொல்லின் உயிர்நிலை. அன்பில்லாதவர்கள் பிணத்துக்குச் சமனாவார்கள் என்பதை வள்ளுவர் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு,"

"அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று."

எனுங் குறள்களை நோக்குங்கள்.

வையத்தில் வானக வாழ்வினை வாழ்வதற்கு— "வாழ்வாங்கு" வாழ்வதற்கு—நல்லவண்ணம் வாழ்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தற்கு அன்பு இன்றியமையாதது. இத்தகைய அன்பை யாவரிடத்துங் காட்டி அன்பு வாழ்வு வாழ்வதற்கே மனிதன் பிறந்தான் எனப் பறையறைகிறது திருக்குறள்.

பிறர்க்கின்னா செய்யாமையே—அகிம்சையே— காந்தி அடிகளுடைய அறநெறியாகும். அகிம்சைக்கு அடிப்படையாயிருப்பதும் அன்பே. அன்பின் குழந்தையே அகிம்சை எனலும் சாலும். காந்தியடிகளுடைய உயரிய கொள்கைகளும், சீரிய வாழ்வும் வள்ளுவர் வகுத்த அன்புநெறியிலே அமைந்து விளங்குகின்றன. திருக்குறளுக்கு இப்பொழுது இலக்கியமாக விளங்குபவர் அடிகளார் என்பதனை யாவரும் ஏற்றுக் கொள்வர்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்".

எனக்குறளில் வள்ளுவர் புலப்படுத்தும் அகிம்சையின் மாண்பைக் கண்டு நாம் வியப்படைய வேண்டியிருக்கிறது.

ஒருவன் தமக்குத் தீமை செய்தால் அவனைத் தண்டித்தல் வேண்டும் என்று எண்ணுவது சாதாரண மக்களின் இயல்பு. "தன்னைக் கொல்லவரும் பசுவையும் கொல்" என்பது சாத்திரம் என்றும் அவர்கள் பறையறைவார்கள். ஒருவன் செய்த தீமையைப் பொறுக்க வேண்டும் எனக் கூறுபவர் சிலரே. ஆனால், வள்ளுவர் ஒருவன்செய்த தீமையை மறந்துவிடவேண்டுமென்றும், அவன் நாணத்தக்கதாகப் பெரிய நன்மையைச் செய்தே அவனைத் தண்டிக்க வேண்டுமென்றுங் கூறுவதை அறியும் பொழுது எவருடைய உள்ளமும் துள்ளிக் குதிக்குமன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்" என்பதும்.

"பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று"

என்பதும் அவருடைய வாய்ச் சொற்கள். பிறர் தீமை செய்தாலும் அவர்களுக்கு நன்மை செய்கிறவர்களே பேரறிஞர்களாவரர். இத்தகைய சான்றோரே சிறந்த நாகரிகம் நிறைந்தோர் என்பதை வள்ளுவர் உள்ளங்கை நெல்லிக்கனிபோற் பல குறள்களில் விளக்கியிருக்கிறார்.

"அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்றாக்கடை?" எனவும்

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?"

எனவும் சுடச்சுட வினவுகிறார்.

இனி இக்காலம்இரண்டாவதுஉலகப் பெரும்போர் முடிந்தகாலம். பகைவர்களை அடக்கி உலகத்திலே சமாதானத்தை நிலைநிறுத்தப் பேரரசுகள் முயலும் அவிமயம். இந்நேரத்தில் உண்மையான அமைதியை உலகில் நிலைநாட்ட விரும்பின் வள்ளுவருடைய கூற்றின்படி நடந்தேயாக வேண்டும்.

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அ∴தின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

"கண்ணோட் டமெனுங் கழிபெருங் காரிகை
உண்மையா லுண்டிவ் வுலகு"

"நண்பற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற் றுராதல் கடை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனும் அறிவுரைகளை இங்கிலாந்து அமெரிக்கா, உருசியா முதலிய வல்லரசுகள் மனத்திற் பதித்துக் கொண்டே தங்கள் கருமங்களையாற்றல் வேண்டும். சமாதான உடன்படிக்கைகளிலும் இழப்பீடு பெறும் முறைகளிலும் பழம் பகைமையைப் பாராட்டித் தோற்ற நாடுகளை ஒடுக்க முனைந்தால் உலகில் ஒரு போதும் அமைதி நிலைத்திருக்காது. பகைவரிடத்தும் வெறுப்புக் காட்டாது அன்பு பூண்டு அவர்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்பதை வெற்றியடைந்தோர் இனியாகுதல் தங்கடனாகக் கொள்வார்களாக.

உலகப் போர் முடிந்தது, போர்த் தொழிலில் ஈடு பட்டிருந்த பலர் ஒருவகையான தொழிலையும் செய்ய முடியாது அலைகின்றனர். வேலையில்லாத் திண்டாட்டம் உலகமெங்குமே தாண்டவமாடத் தொடங்கியிருக்கிறது. இத்திண்டாட்டத்தை ஒழிப் பதற்கு வள்ளுவர் கூறும் வழியைக் கேளுங்கள்.

''வேலையில்லையே என்று சோம்பித் திரிபவர் களைப் பார்த்து நிலம் என்னும் பெண் சிரிக்கிறாள்'' என நகைச்சுவை ததும்ப அவர் கூறுகிறார். இந்தக் கோழைகள் நிலத்தைப் பண்படுத்திப் பயிரிட்டு வாழாலாமன்றோ!

**"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலமெனும் நல்லாள் நகும்''**

எனும் செய்தியையே இப்பொழுது எங்கும் பரப்ப வேண்டும். ஆகாயத்திற் பறந்தாலும், கடலுக்குள்ளே புகுந்து திரிந்தாலும், வேறெந்த அரிய செயலைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்தாலும் உயிருடன் வாழ்வதற்குப் பயிரிட்டே உணவைப் பெறல் வேண்டும். ஆகையால் உழவுத் தொழிலுக்குப்பணிந்தே உலகம் நடக்க வேண்டுமென் பதை நயமாக,

''சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை''

எனுங் குறள் கூறுகிறது.

இவ்வுலக வாழ்வின் பயன் யாது? உயிருக்குக் கிடைக்கும் இலாபம் யாது? இவற்றை அடைய வாழும் முறையாது? எனும் வினாக்களுக்குச் சமய நூல்களும் பிற அற நூல்களும் பலவகையான விடைகளைக் கூறி மக்களை மயங்க வைக்கின்றன. ஆனால் வள்ளுவரோ எட்டுச் சொற்களில் விடை தருகிறார்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு"

என்கிறார்.

ஈதலையும் இசைபட வாழ்தலையும் மேற்கொள் வதற்கு மனம் வாக்குக்காயம் எனும் முக்கரணங்களும் தூய்மையுடையனவாயிருத்தல் வேண்டும். இவை தூய்மை பெறாவிடில் அன்பு வாழ்வை இவ்வுலகில் வாழ முடியாது. ஆகையால் இவற்றைத் தூய்மை செய்தலே அறநெறி என வள்ளுவர் இடித்திடித்துக் கூறுகிறார். மனத்தில் மாசின்றி, இனிய சொற்களைப் பேசி, ஈதலைச் செய்பவர்கள் இவ்வுலகில் அமரராக வாழலாம். ''இன்பமே என்றுந் துன்பமில்லை'' என அவர்கள் முழங்கலாம். திருக்குறளில் மாத்திரமன்றி மற்றைய சிறந்த தமிழ்நூல்களிலெல்லாம் கொடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறந்த அறமாகப் போற்றப்படுகிறது. "ஈதல் அறம்" என்றார் ஔவையாரும்.

இவ்வாறு ஈதலை வலியுறுத்திக் கூறுவது நாட்டில் ஒரு வகையான சமதர்மக் கொள் கையை நிலை நாட்டுவதற்கேயாகும். பொருள் மிகப்படைத்தவர்கள் மேலும் மேலும் ஈட்டித்திரட்டி வைக்காது, பிறருக்கு வரையாது கொடுப்பார்களா யின் அவர்கள் வதியும் நாட்டில் ஒரு பகுதியிற் பொருள் குவிந்திருக்க மறுபகுதியில் வறுமைதாண்டவ மாடாதன்றோ! முதலாளிகள் — தொழிலாளிகள், செல்வர்கள்—ஏழைகள் எனும் பிளவுகள் தோன்றி நாடு கலக்கமுமடையாது.

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

என்று ஈதலை வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகின்றாரே! ஈதல் வேண்டுமென்றால் இரப்பவர்களும் இருந்தாற் றானே அதனைச் செய்யலாம்; யாவரும் இரக்கத் தொடங்கினால் நாட்டில் வறுமையன்றி வேறென்ன மிகும் எனச் சிலர் கேட்கலாம்.

ஆனால் வள்ளுவருடைய கருத்து நாட்டில் சமத் துவத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதன்றி வேறன்று; மேலும்

"நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"

என ஈதலை நல்லதென்றும், இரத்தலைத் தீயதென் றும் முரண்படுவது போற்றோன்ற அவர் கூறுவதை


534281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஊன்றி உணர்வார்க்கு நாட்டின் பொருளாதார நிலையைச் சமப்படுத்தி எல்லாப் பழிபாவங்களுக்கும் அடிப்படையான பசிப்பிணியை நீக்குவதே அவர் நோக்கம் என்பது தெற்றெனப் புலனாகும். உலகத்திலேயுள்ள தீமைகளுக்கும், துன்பங்களுக்கும் மூல காரணமாயிருப்பது மக்கள் பலர் போதிய உணவின்றி வாடி வருந்தச் சிலர் மாத்திரம் பொருளைக்குவித்துக் குபேரர்களாக வாழ்வதே என்பது பொருளாதார நூல் வல்லுநர்கள் யாவரும் ஒருமுகமாக உரைக்கும் உண்மையாகும். இந்தச் சிக்கலான நிலையை அடியோடு மாற்றுவதற்காகவே தமிழ்ப் புலவர்கள் ''ஈதற்குச் செய்க பொருளை'', ''செல்வத்துப் பயன் கொடுத்தலே'' என எப்பொழுதும் கூறிக்கொண்டு வருகிறார்கள். இதனாலேயே வள்ளுவர்,

> "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்றுள் எல்லாம் தலை."

என்று ஈதலறத்திற்குத் தலைமை இடங்கொடுத்தார்.

சுருங்கக் கூறின், செல்வர்களைக் கொடுக்கும் பண்பையுடையவர்களாக்கவும் உடல் வலியுடைய வறிஞர்களை ஈதலின் பெருமையை அறிந்து இரக்க முற்படாது தாமும் முயற்சி செய்து பொருளீட்டிச் செல்வராகிக் கொடுத்தலை மேற்கொள்ளவுஞ் செய்வதற்கே வள்ளுவர் ஈதலைப் போற்றியும் இரத்தலைப் பழித்துங் கூறினார் எனலாம்.

திருக்குறளைத் தத்தம் சமயநூல் என எல்லாச் சமயத்தவர்களும் கொண்டாடுகின்றனர். மற்றைய சமய நூல்கள் எல்லாம் பெரும்பாலும் வாழ்க்கையையும் சமயத்தையும் பிரித்துச் சமயத்தைப் பற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூறுகின்றன. இதனால் அவற்றைப் படிப்பவர்கள் சிலர் இக்காலத்தில் இப்படி வாழ முடியாது; இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு இவை பொருத்த மற்றவை என ஒதுக்கி வைத்து விடுகிறார்கள். பலர் வாழ்க்கையினையே நடத்தத் திண்டாடும் நமக்குச் சமயத்தைப் பற்றியறிந்து நடக்க எப்படி முடியும் என்றெண்ணிச் சமய நூல்களைத் திரும்பிப் பார்ப்பது மில்லை.

மக்களுடைய இம்மனப்பான்மையை வள்ளுவர் நன்கறிந்தவராதலின் சமயத்தை வாழ்க்கையோடு சேர்த்துக் கூறியிருக்கிறார். வாழ்க்கையே சமயம்; சமயமே வாழ்க்கை என்பதையே மக்களறிவுக்குட் படுத்தி அவர்களுடைய வாழ்வில் சேர்த்துக் காட்டு கிறது தேவர் குறள். ஆகவே சுருங்கக் கூறின், தனக்குவமை இல்லாதான் தாளைச் சேர்ந்து, மனக் கவலையை மாற்றி, அறன்கடைப்படா வாழ்வினை யும், பிறன் கடைப்படாச் செல்வத்தையும் பெற்று, மக்கள் வையகத்தில் அமரராக வாழுதற்குரிய அன்பு நெறியையே திருக்குறள் உலக மக்களுக்குப் போதிக் கின்றது என ஒருவாறு கூறலாம். இந்த அன்புநெறியே வள்ளுவர் வாய்ச் சொல் காட்டும் வாழ்க்கை நெறியும் சமய நெறியுமாகும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறக்கும் வரை...

"பாடசாலைகளிலோ, பல்கலைக் கழகங்களிலோ கற்று முடிந்தவுடன் கற்றலை நிறுத்திவிடக் கூடாது. இளமைப்பருவம் மட்டும்தான் கல்விக்குரிய பருவம் என்று எவரும் எண்ணக்கூடாது. இறக்கும்வரையும் கற்கவேண்டும்" என்று வள்ளுவர் வற்புறுத்துகின்றார். இறக்கும்வரையும் கற்கவேண்டும் என்று முதலிற் கூறிய திறப்பாடும் இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறிய பெருமையும் திருவள்ளுவருக்கே உரியன.

கல்வி கற்றவர்களுக்கு, ஏனையோருக்கில்லாத தனிப்பெருமை ஒன்றுண்டு. கற்றோருக்கு எந்த நாடும் சொந்தநாடாகும், எந்த ஊரும் சொந்த ஊராகும் என்ற இந்தப் பெருமையை வள்ளுவர்கூறி மக்களைச் சாந்துணையும் கற்குமாறு தூண்டுகின்றார்.

> "யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு."

கற்றவர்களுக்குப் பிற நாடுகளும் பொருள் கொடுத்தும், வரவேற்பு நல்கியும் சிறப்புச் செய்வார்களாதலின் கல்விபோலச் சிறந்தது பிறிது இல்லை என்று பரிமேலழகர் வள்ளுவர் கூற்றை விளக்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சில ஆண்டுகளுக்கு முன்னர் பல்கலைக்கழகப்பட்டம் பெற்ற அறிஞர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து பல தொழில்களில் ஈடுபட்டனர். படித்துப் பட்டம் பெற்ற பலர் இப்பொழுதுஇலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வேறுபல நாடுகளிலிருந்தும் பிற நாடுகளுக்குச் சென்று அந்நாடுகளிலே தங்கள் கல்வித் தகைமைக்கேற்பப் பல தொழில்களைச் செய்கின்றனர். இவர்கள் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, கயானா, நைசீரியா,மலேசியா, புறூணை முதலிய பல நாடுகளில் பெரும் ஊதியம் பெற்று மதிப்புடன் பணியாற்றுகின்றனர்.

கல்வி கற்றவர்களுக்கு-சிறப்புத் துறைகளில் நன்கு பயின்றவர்களுக்குத் தம் நாடுகளில் மட்டுமன்றிப் பிற நாடுகளிலும் மதிப்பும் பணிபுரியும் வாய்ப்பும் உண்டு என்பதை நாம் இன்றும் நன்கு அறிகின்றோம்.

கற்றோர் பிற நாடுகளில் பெறும் இச்சிறப்பினை மூதுரை, பழமொழி முதலிய நூல்களும் எடுத்து விளக்கியுள.

''மன்னனுக்குத் தன்றேச மல்லாற் சிறப்பில்லைக்
கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பு"

என மூதுரை கூறுகின்றது.

''ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை —அந்நாடு,
வேற்றுநா டாகா தமவேயா மாயினால்,
ஆற்றுணா வேண்டுவ தில்''

இது பழமொழிச் செய்யுள்.

ஒவ்வொருவரும் ''அறிவறிந்த'' மக்களாகினால் மக்கள் வாழ்வு சிறப்படையும் என்ற அடிப்படைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொள்கையினையே திருக்குறள் அழுத்தந் திருத்த மாக உரைக்கின்றது. இதுதான் திருக்குறள் முழுவதிலும் இழையோடியுள்ள உயிர்நிலைக் கருத்து. இதனை உடன்பாட்டு முகத்தானும் எதிர்மறை முகத்தானும், பொதுவகையானும் சிறப்பு வகையானும் திருக்குறள் வலியுறுத்துகின்றது.

கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை முதலிய அதிகாரங்களில் கல்வியின் சிறப்பும், கல்வி கேள்வி களாற் பெறப்படும் அறிவின் சிறப்பும் படிப்போர் கேட்போர் உள்ளங்களை ஈர்க்கும் முறையிலே தீட்டிக் காட்டப்பட்டுள.

ஒருவனைப் பார்த்து ''நீ ஒரு மிருகமடா'' என்று கூறினால் அவன் எவ்வளவு கோபம் கொள்வான்? எவ்வளவு துன்பம் அடைவான்? இதற்குக் காரணம் என்ன? ஒரு மனிதனை மிருகம் என்று கூறுவதால் அவனை இழிவு படுத்துகின்றோம்; பழிக்கின்றோம்; இழிவுக்கும் பழிப்புக்கும் எல்லையிட்டுக் காட்டு கிறோம். எல்லோர்க்கும் நன்கு விளங்கும் இழிவுரை இது. இதனாலேயே மக்களை இழித்துரைக்க விரும்பு வோர் ''மாடு'' ''கழுதை'' ''குரங்கு'' ''எருமை''...... என்று அவர்களை விலங்கினங்களாக்கிப் பேசுகின்ற வழக்கு உண்டாகி நிலைத்துளது.

கற்றோருக்கும் கல்லாதோருக்கும் உள்ள வேறு பாட்டை மக்கள் உள்ளத்திற் பதிக்க விரும்பிய வள்ளுவர் எல்லோருக்கும்தெரிந்த இந்த இழிவுரையை நன்கு பயன்படுத்துகின்றார்.

கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் உள்ள வேறுபாடு மக்களுக்கும் மிருகங்களுக்குமுள்ள வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாட்டைப் போன்றது: கற்றவர்கள் மக்களைப் போன்றவர்கள்; கல்லாதவர்கள் விலங்குகளைப் போன்றவர்கள் என்கின்றார் அவர்.

> "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றாரோடு ஏனை யவர்"

என்பது அவர் வாக்கு.

ஒன்றின் பெருமையை நன்கு உணர்ந்தால் மட்டுமே மக்கள் அதனைப் பெற முயல்வார்கள். எனவே கல்வியின் பெருமையைப் பலவகையாக வள்ளுவர் விளக்குகின்றார்.

மக்கள் தங்கள் உடலிலுள்ள உறுப்புக்களிற் கண்ணையே சிறந்த உறுப்பாகப் போற்றுவர் "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்று நான்மணிக் கடிகை உரைக்கின்றது. கண்பார்வையால் அடையும் பயன்களை யாவரும் நன்கு அறிவர். எதை இழக்க விரும்பினாலும் கண்ணை எவரும் இழக்க விரும்பார். எனவே, கல்லாதவர் மிருகத்தைப் போன்றவர் என்று கூறியதால் மட்டும் கல்வியின் சிறப்பை நன்கு உணர முடியாதவர்களுக்குக் "கல்விதான் மக்களுக்குக் கண்" என்றும் அறிவுறுத்துகின்றார் வள்ளுவர்.

> "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
> கண்ணென்ப வாழு முயிர்க்கு."

கல்விதான் கண் என்றால், முகத்தில் கண்கள் இருக்கின்றனவே இவை வாழ்வுக்குப்பயன்படுமன்றோ என்றும் சிலர் கருதலாம். இவர்களுக்கு வள்ளுவர் பெருமான் கூறுவது யாது? கற்றவர்களே கண்ணுடையவர்கள். கல்லாதவர் முகத்தில் இருக்கும் இரு கண்களும் புண்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

அறிவுக் கண் எவ்வகையிலும் ஊறுபடாது. ஆனால் முகத்துக் கண் நோய் முதலியவற்றால் துன்பஞ் செய்யும் ஊனக் கண்ணாதலின் அதனைப் புண் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

கல்வியிலும் செல்வமே சிறந்தது; செல்வத்தால் மட்டுமே சிறந்த வாழ்வு—இன்பவாழ்வு வாழமுடியும். செல்வத்தைப் போல, வாழ்வுக்கு வேண்டியவாய்ப்புக் களைக் கல்வி கொடுக்காது. எனவே, கல்வி கற்பதை விடுத்துச் செல்வத்தைத் தேடமுயல்வதே நல்லது. இந்த வாதம் அன்றும் இருந்தது;இன்றும் இருக்கிறது எனினும், கல்விக்கும் — செல்வத்துக்கும், அறிவுடை மைக்கும் — பொருளுடைமைக்கும் உள்ள இந்த "மோதல்" இன்று பெரிதாகவுள்ளது.

வேலையில்லாது திண்டாடுவோரும், வறுமை யாலே துடிப்போரும் பெருகும் இக்காலத்திலே கல்வி யினையா பொருளினையா மக்கள் மதிப்பார்கள். ஐந் தாண்டு பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெறு தலையோ, ஐந்தாண்டில் ஐந்து இலட்சம் ரூபா ஈட்டு தலையோ இன்று மக்கள் விரும்புவர், "பொருள் வேண்டும், பெரும் பொருள் வேண்டும், விரைவில் வேண்டும் எவ்வழியிலேனும் வேண்டும்" என்பதே இன்றைய மக்களின் இதயத்துடிப்பு.

கல்விக்கும் அறிவுக்கும் உரிய மதிப்புக் கொடுக்கா மல், பொருளுக்குப் பெருமதிப்புக் கொடுக்கப்பட்ட மையால் இன்று உலகத்திலே போட்டி பொறாமை பூசல்கள் தாண்டவமாடுகின்றன. சமவாய்ப்

பின்றிச் சமவாழ்வின்றிச் சமுதாயம் அல்லற் படுகின்றது. தனிஉடைமையும் பொது உடைமையும் போரிடுகின்றன. உழைப்பவன் ஓட்டாண்டியா கின்றான்; உழைக்காதவன் குபேரனாகின்றான். இத் தகைய சமுதாய அமைப்பு மாற்றம்பெற வேண்டு மெனின் பிறரின் நோயைத் தம் நோய் போல-பிறரின் வறுமையைத் தம் வறுமை போலக் கொள்ளும் அறி வுடையார் பெருக வேண்டும். பொருளுடைமைக்குக் கொடுக்கும் மதிப்பிலும் அறிவுடைமைக்கு மிகுந்த மதிப்புக் கொடுக்க வேண்டும். இந்தப் பேருண்மையை மக்கள் மனத்திற் பதியச் செய்வதற்கு வள்ளுவர் பெருமான் பெரிதும் முயன்றுளர்.

அறிவு உடையவர்களே எல்லாச் செல்வமும் உடையவர்கள், அறிவில்லாதவர் எச்செல்வ முடைய வரெனினும் ஒன்றும் இல்லாதவரே என்று உரைத்து அவர் அறிவுச் செல்வத்துக்குத் தலையிடம் கொடுக் கின்றார். அறிவோடு சேராத பொருட் செல்வத்தைச் செல்வமன்று என்று அவர் கூறுகின்றார். கற்றவர்கள் அடைந்த வறுமையிலும் கல்லாதவர்கள் பெற்ற செல் வம் துன்பந்தருவது என்றும் தெருட்டுகிறார்.

பகைவராலும் அழிக்க முடியாதது கல்விச் செல்வம்; பெற்ற பின் இழக்காத செல்வமும் கல்வியே யாகும். கொடுக்கக் கொடுக்கக் குறையாமல் மேலும் மேலும் பெருகும் செல்வம் கல்வியேயாகும். தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க ஒருவனுக்கு உதவும் செல்வமும் கல்வியே யாகும். கல்வியின் ஈடிணையற்ற இப்பெருமைகளை, ''கேடில் விழுச்செல்வம்'' என்ற தொடரில் காட்டுகிறார் திருவள்ளுவர்.

**''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.''**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

''கேடில் விழுச்செல்வம் கல்வி'' என்றுரைத்துப் பொருட் செல்வம் கேடுள்ள செல்வம் என்பதையும் அவர் புலப்படுத்துகிறார். ''கேடில் விழுச் செல்வம்'' என்று வள்ளுவர் சுருக்கிக் கூறியதனைப் பின்வரும் நாலடியார்ச் செய்யுட்பகுதி விரித்து விளக்குகிறது.

''வைப்புழிக் கோட்படா வாய்த்துஈயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்''

பொருட் செல்வத்தைக் குறுக்கு வழிகளிலும் பழி நிறைந்த வழிகளிலும் சேர்க்கலாம். கோடி உரூபா பரிசுள்ள ஒரு சீட்டுப்போட்டியில் ஒருவன் அப்பரிசைப் பெற்றால் அவன் உடனே செல்வனாவதை இன்று காண்கிறோம்.

கல்விச் செல்வத்தை உடனே பெறல் முடியாது. ஏழையானாலும் பொருள் உடையவன் ஆனாலும் பாடுபட்டுப் படிப்படியாகக் கற்றுத்தான் கல்வியைப் பெறலாம். பொருளை ஈட்டுவதும் காப்பதும் துன்பத்துடன் கூடியன, அதனை இழந்து விட்டால் ஒருவன் அடையும் துன்பத்துக்கு எல்லையில்லை. கல்வியைக் கற்றுவிட்டால் அதுஎப்பொழுதும்-இறக்கும்வரையும்- இன்பத்தையே நல்கும், இம்மையில் மட்டுமன்றி அடுத்த ஏழுபிறப்புக்களிலும் கல்வி உதவும் எனவும் வள்ளுவர் கூறிக் கல்விச் செல்வத்தின் நிலைபேற்றினை வற்புறுத்துகின்றார்.

கல்வியைத் தொடர்ந்து கற்க வேண்டும்-இறக்கும் வரையும் கற்க வேண்டும்—என்பதை மணற்கேணியில் ஊறும் நீரை நம் கண்முன் நிறுத்தி வள்ளுவர் விளக்குந்திறன் வியப்புக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மணற்கேணியை இலகுவாகத் தோண்டலாம் யாரும் தோண்டியும் பார்க்கலாம். தோண்டிக் கொண்டு போக நீர் ஊறத் தொடங்கும். நீர் ஊறத் தொடங்கிய மட்டத்திலிருந்து தோண்டத் தோண்ட, தோண்டும் அளவுக்கு நீர் ஊறும். இதனைப் போலவே கல்வியை மேலும் மேலும் கற்கக் கற்கும் அளவுக்கு அறிவு பெருகிக் கொண்டு போகும். இதனை எடுத்துரைக்கும் குறளை யாவரும் உள்ளத்தி லிருத்தல் வேண்டும்.

''தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.''

கற்கும் கல்வியை அரைகுறையாகக் கற்காமல் ஆழமாகக் கற்க வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார் வள்ளுவர். எல்லாவற்றையும் கற்கவும் முடியாது. எனவே, கற்க வேண்டியவற்றைத் தெரிந்து ஐயந்திரி யறக் கற்கவேண்டும் எனக்கற்கும் முறையையும் அவர் விளக்கியுளார். கற்றபடி வாழவேண்டுமெனவும் அவர் வற்புறுத்துகிறார்.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'' என்பதவர் கட்டளை.

மக்கள் இறக்கும் வரையும், கற்கவேண்டியவற்றைத் தொடர்ந்து நன்கு கற்க வேண்டும் என்பதை வற் புறுத்தி, அறிவுடைய மக்கள் சமுதாயத்தை உருவாக்கு தற்கு வள்ளுவர் வழிவகுத்துளர்.

□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தலை அறம்

உலகத்திலேயுள்ள உயிர்கள் யாவும் வாழுதற்கே முயன்று கொண்டிருக்கின்றன. உயிர் வாழ முயலுதலும் இனப்பெருக்கமுமே எல்லா உயிர்களுக்கும், உரிய அடிப்படைத் தொழில்களாகும். உயிர் வாழ்வதற்கு உடலை ஓம்புதல் வேண்டும். உடலுக்கு உணவு வேண்டும். எனவே உணவே உயிர் வாழ்வுக்கு இன்றியமையாதது. இதனாலேயே தமிழ்ச் சான்றோர்கள் 'உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்'' எனக் கூறினர். இந்த உணவைத் தேடி உண்ணுதலே உயிர்களின் முதலாவது தொழிலாகவிருக்கின்றது. ஆறு அறிவு படைத்த மக்களேயன்றிக் குறைந்த அறிவுடைய பிற உயிர்களும் உணவைப் பெறுதலையே நோக்கமாகக் கொண்டு வாழ்வதை நாம் நன்கு காண்கிறோம்.

உணவைப் பெறும் முயற்சிகளுக்குரிய காலம் சுருங்கச் சுருங்க மக்களுக்கு ஓய்வு நேரம் கிடைத்தது. இந்த ஓய்வு நேரத்திலே அவர்கள் தம் இன்ப வாழ்வுக்கு வேண்டிய பிற வாய்ப்புக்களையும் கலைகள் முதலியவற்றையும் விருத்தி செய்தனர். எனினும் சமுதாய வாழ்வு மலர்ந்து மக்களின் கூட்டு வாழ்க்கை நிலைத்த பண்டைக் காலத்தில் உணவே பெருஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செல்வமாகக் கருதப்பட்டது. பயிர்விளையும் நிலமும், பால் தரும் பசுவும் சிறந்த செல்வப் பொருள்களாகப் போற்றப்பட்டன.

மக்கள் பெருகிச் சமுதாய வாழ்வு பல துறைகளில் விரியச் சிறப்பு வாய்ப்புக்களைப் பெற்ற சிலரிடம் உணவும் பிற பொருள்களும் நிறைந்தன. அவ் வாய்ப்புக்களைப் பெறாதவர்களிடம் உணவு குறையத் தொடங்கிற்று. மக்களின் தேவைகள் பல்வகையாகப் பெருகின. இதனால் உணவு உடை உறையுள் இவற்றைத் தேடி உரிமையாக்குதலிற் பெரும் போட்டிகளும் பூசல்களும் உண்டாகின. சிலர் செல்வராயும் பலர் வறியவராயும் ஆகினர். இந்த ஏற்றத்தாழ்வுகள் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பரவி முதலாளி—தொழிலாளி எனவும் பொருள் உடையவர்கள்—பொருளற்றவர்கள் எனவும் மக்க ளிடையே பிரிவுகளை உண்டாக்கின.

உழைத்து உழைத்து உருக்குலையும் மக்கள் போதிய உணவு பெற முடியாது வாட, இவர்களின் உழைப்பிலே சிலர் கொழுக்கத் தொடங்கினர். அடிப்படைத் தேவைகளான உணவு உடை உறையுள் என்பன இன்றி மக்கள் பலர் அவலப்பட, பிறரைச் சுரண்டிச் சேர்த்த பொருளாற் சிலர் இந்திரபோகந் துய்த்தனர். ஏழைகள் உடுக்க ஒரு முழத் துண்டு ஆடைக்குத் தானும் வழியின்றி அலையச் செல்வர் களின் வீட்டுக் கதவுகளும் பலகணிகளும் ஆடை அணி களைச் சுமக்கும் கொடுமையான நிலை உலகில் உருவாகிற்று. இந்தக் கொடுமையைக் கண்டு கொதித்த மக்கள் இது முதலாண்மையால்—சிலரிடம் செல்வம் குவிந்திருப்பதால்—உண்டாகிறது என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உணர்ந்தனர். இச்செல்வத்தைப்பங்கிட்டு எல்லோரும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற கருத்து மக்கள் உள்ளங்களில் மலர்ந்தன. சமஉடமை, பொதுஉடமை என்ற கொள்கைகள் உருவாகின. சமத்துவம், சம வாய்ப்பு, சமவாழ்வு எனுங் குரல்கள் எங்கும் முழங்கத் தொடங்கின.

உலகத்து மக்களிற் பலருடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கும் மனிதப் பண்பு உடையவர்கள் இந்தக் குரல்கள் நியாயமானவை, இயல்பானவை, இன்றியமையாதவை என்பதை ஏற்றுக் கொள்வர்.

மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்தி இன்ப வழிகாட்டத் தோன்றிய சமயங்களும் இன்று வலியற்று விட்டன; மக்களிடையே உயர்வு தாழ்வு களை நிலைநிறுத்த வாய்ப்பளித்து விட்டன; சில நிலை நிறுத்துதற்கும் முயன்றுள. பட்டினியால் வாழும் மக்கள் பரமனை நினைக்க மாட்டார்கள்; உண்ண உணவில்லாத மக்கள் உயர் ஞானத்தைத் தேட மாட்டார்கள். மக்கள் வாழ்வுக்கு முதலில் உணவு வேண்டும். உணவு கிடைத்த பின்னரே மக்கள் பிறவற்றை நினைப்பார்கள் என்பதை இந்த உலகமே இன்றும் நன்கு உணரவில்லை.

எந்த மதமும், எந்தக் கொள்கையும், எந்த அரசும் மக்களுக்கு வேண்டிய உணவை அளிக்காவிடின் நிலைத்து நிற்க முடியாது. இந்த உண்மையினை ஓரளவுக்குப் புலப்படுத்துவதாலேயே சமஉடைமை, பொது உடைமைக் கொள்கைகள் மக்களைக் கவரு கின்றன. எனினும், இக்கொள்கைகளையுடைய நாடு களும் இன்னும் உயிர் வாழ்வுக்கு முதலில் வேண்டியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உணவுதான் என்பதையும் அதைப் போதிய அளவு பெற்றபின்னரே மக்களின் பிற தேவைகளைக் கருத வேண்டும் என்பதையும் முற்ற முழுதாக எண்ண வில்லை. பகிர்ந்து உண்ணுதற்குரிய நல்வழியையும் அவை முழுதாகக் கைக்கொள்ளவில்லை.

மக்கள் சம வாய்ப்புப் பெற்றுச் சம வாழ்வு என்னும் இலக்கை நோக்கிச் செல்லுதற்கு முதலில் உணவிலே சம உடைமை உண்டாக வேண்டும். ஒரு நாட்டிலே உள்ள மக்கள் யாவருக்கும் போதிய உணவு கிடைக்கவேண்டும். உயிர் வாழத் துடிக்கும் மக்களின் முதற்றேவை உணவு. இதைப் பகுத்துண்டு உயிர் களைக் காத்தலே முதலில் மக்களின் நல்வாழ்விலே நாட்டங் கொள்ளுவோர் செய்யவேண்டியது. இதனைத் திருவள்ளுவர் அறங்கள் யாவற்றிலும் தலையான அறம் என்றுவற்புறுத்தி உரைத்துள்ள அருமைப் பாடு அறிந்து வியக்கத்தக்கது.

''பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை''

என்பது அவர் திருவாக்கு.

மக்கள் இவ்வாறு நடக்கவேண்டும், இவ்வாறு நடத்தல் கூடாது என்று விதியும் விலக்கும் கூறும் நூல்கள் யாவற்றையும் அற நூல்கள் எனலாம். சமயம், பொருளாதாரம், அரசியல் முதலியன பற்றிய நூல்கள் மக்களுக்கு விதிகளையும் விலக்குகளையும் வகுத்துரைக்கும் பொழுது அவையும் அறங்களையே கூறுகின்றன.

இந்த அறங்கள் சில குழுவினருக்கும், சில சாதியினருக்கும், சில கட்சியினருக்கும்,சில நாட்டினருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தனித்தனி உரியனவாயும் உலகத்து மக்கள் யாவருக்கும் பொதுவானவையாகவும் இருக்கும், பொதுவான அறங்கள் தவிர்ந்த ஏனையன ஒரு காலத்துக்குமட்டுமே பொருத்தமானவையாகவும் ஒன்றோடு ஒன்று முரண்பட்டவையாகவும் இருத்தலுமுண்டு. பொதுவான அறங்கள் மக்களினத்தின் அடிப்படை வாழ்வைப் பற்றியனவாயிருப்பதால் இவையாவராலும்போற்றப் படுகின்றன. இந்த அறங்களுக்குள்ளே தலையான அறம்-முதலறம் உணவைப்பகுத்துண்டு உயிர்களைக் காத்தலே என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். இதன் முதன்மையை வலியுறுத்துதற்கு வள்ளுவர் "நூலோர் தொகுத்த அறங்களிலெல்லாம் இது தலையான அறம்" என்றுங் கூறினார்.

எனவே, சமத்துவம், சமதர்மம், சமஉடைமை முதலிய கொள்கைகள் உணவைப் பகிர்ந்து உண்ணு தலை வற்புறுத்தும் பொழுது அவை புதியதொரு கருத்தைக் கூறவில்லை. உலகந் தோன்றிய காலந் தொடக்கம் வாழ்வுக்கு இன்றியமையாத பொருளாக இருந்துவரும் உணவின் முதன்மையைத் திருவள்ளுவர் புலப்படுத்தியிருப்பதையே அவை நினைவூட்டுகின்றன.

உணவை மிகுதியாகச் சேர்த்த ஒருவன் தான் மட்டும் வயிறு புடைக்க உண்டு மிகுதியைத் தேக்கினால் உணவு கிடைக்காத மக்கள் பட்டினியால் வாட வேண்டும். இதனாலேதான் உணவைப் பகிர்ந்து உண்டு பிறரையும் காப்பாற்றுதல் வேண்டுமென வள்ளுவர் கூறி, உணவு பகிர்தலையும் மக்களைக் காத்தலையும் சேர்த்து உரைக்கின்றார். பிறவற்றைப் பகிராவிடினும் உணவைப் பகிர்தல் இன்றியமையாத தென்பதையும் இதனாலேதான் மக்களைக் காக்கலாம் என்பதையும் அவர் அழகுறப்புலப்படுத்தியுளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனவே, ஒரு நாட்டிலுள்ள மக்களைக் காக்கும் பொறுப்பு வாய்ந்த அரசு முதலில் மக்களின் பசியை நீக்க முயலவேண்டும்; உணவு போதாமலிருந்தால் அதைப் பெருக்குதலையும் பிரித்து அளித்தலையுமே தலையாய கடமையாகக் கொள்ளுதல் வேண்டும். உணவுக் குறையை நீக்காமல் ஏனைய தேவைகளை நிறைவாக்க அரசு முயலுதல்கூடாது. இன்று ஐக்கிய நாடுகள் சபையும் உலகத்திலுள்ள அரசுகளும் திருவள்ளுவர் கூறும் இத்தலையான அறத்தைக் கருத்திற்கொண்டு உழைத்தல் வேண்டும். உண்ண உணவின்றி வாடும் மக்களுக்குப் பஞ்சணை மெத்தையோ, கைக்குக் கடிகாரமோ, முகத்துக்குத் தூளோ தேவையில்லை. எனவே, பல நாடுகளிலுமுள்ள பொருளை முதலிற் பசி தீர்க்க-உணவைப் பெருக்கப் பயன்படுத்தல் வேண்டும். இதனையும் திருவள்ளுவர் சிறப்பாக எடுத்துக்காட்டியுளர்.

> "அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
> பெற்றான் பொருள் வைப்புழி"

என்பது அவர் வாய்மொழி.

இன்று உலகில் பசியால் வாடுவோர் தொகையாகவுளர்; உலகிலே பெரும்பாலான மக்கள் போதிய உணவின்றி வாடுகின்றனர். எனினும் பொருளைத் திரட்டியவர்கள் முதலில் உணவைப் பெருக்கமுயலாது தேவையற்றவற்றையும் பெருக்கமுயல்கின்றனர். இந்த மடமை விரைவில்அகல வேண்டும். "அழிபசி" தீர்த்தற்கு உணவைப் பெருக்குதலே பொருளுடையாரின் முதல்நோக்கமாயிருத்தல் வேண்டும். இவ்வாறு பெறும் உணவைப் பகிர்ந்துண்டு மக்களைக் காத்தலே நிலையான தலையான பேரறம் என்று வள்ளுவர் கூறுவதை இனியாகுதல் உலகம் உணர்ந்து தொழிற்பட்டால் மக்கள் வாழ்விலே மகிழ்ச்சியும் நிறைவும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# *கள்ளும் காமமும்

''கள்ளும் காமமும்'' - இந்தத் தொடரைப் படிக்கும் அன்பர்களிற் பலருக்குக் காமம் என்பதைப் பற்றி என்ன எண்ணம் தோன்றும்? கொலை களவு, கள் போன்ற பெரும் பாதகங்களை ஒத்தது காமம் எனும் எண்ணமே இக்காலத்திற் பெரிதும் தோன்றும். மது- மாது என இதனை இணைத்துப் பழிப்பதும் நாடறிந்ததொன்றாகி விட்டது. எனவே, காமம் என்றால், அது கள்ளோடும் சேர்த்து எண்ணப்பட்டால், நெறி முறை தவறிய ஆண் பெண் உறவு எனுங் கருத்தே முதலில் உள்ளத்தில் காட்சி அளிக்கும்.

இத்தொடரில் உள்ள காமம், கள்ளோடு ஒத்த இழிவுடையதாக இக்காலத்தில் கருதப்படும் காமம் அன்று. அன்பின் ஐந்திணைக்காதல் என்பதையே இங்கு காமம் உணர்த்துகிறது. திருவள்ளுவர் தம் தமிழ் மறையில் காமத்துப் பாலில் கூறும் உயர்ந்த சிறந்த தமிழ் நெறியாகிய காமமே இஃது என்பதை முதலில் நினைவூட்டுதல் இன்றியமையாதது. இவ்வாறாயின் இத் தூய காமத்தை மயக்கும் கள்ளுடன் ஏன்

---

* மலேசிய வானொலியில்பெப்புருவரி 1964இல் நிகழ்த்திய உரையைத் தழுவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இணைத்துப் பேசுகிறீர்கள் எனும் வினா எழுதல் இயல்பே. நான் இணைக்கவில்லை; திருவள்ளுவரே இணைத்துத் தந்திருக்கிறார்.

திருக்குறளில் காமத்துப்பால் காவியச் சுவை ததும்பி வழியும் சுனையாக மிளிர்கிறது. இப்பாலில் திருவள்ளுவருடைய கற்பனைத் திறன் சுடர் விட்டொளிர்கிறது. காதலர் உள்ளத்தெழும் நுண் உணர்ச்சிகளைச் செவ்விய கூரிய தீந்தமிழ்ச் சொற்களினால் தீட்டிக் காட்டும் அவருடைய திறப்பாடு கற்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. சிறு கடுகைத் துளைத்து அதனுள்ளே பெரு மலையைப் புகுத்திக் காட்டுதல் போலச் சிறு சொற்களுள்ளே பேருணர்ச்சிகளைத் திருவள்ளுவர் பொதிந்து காட்டுகிறார்.

இக்காமத்துப் பால் அகப்பொருள் பற்றிய தென்பதை யாவரும் அறிவர். அகப்பொருள் இலக்கியங்கள் யாவும் குறிஞ்சி, முல்லை முதலிய நிலங்களின் காட்சிகளையும் காலை, மாலை கார் கூதிர் முதலிய பொழுதுகளின் நிகழ்ச்சிகளையும் நிலைக்களனாகக் கொண்டு காதலரின் உணர்ச்சிகளை வரைந்து காட்டும் மரபைத் தழுவியன. காமத்துப் பாலோ இந்த மரபைக் கைவிட்டுப் புதுமுறை ஒன்றை வகுத்து வெற்றி ஈட்டியுளது. எவ்வகையான நிலைக்களனையும் அமைக்காமல் திருவள்ளுவர் காதலரின் உணர்ச்சிகளைத் தீட்டிக் காட்டிப் புலவர்களையும் திகைப்படையச் செய்துளர்.

இந்தப் புது முறையில் அவர் காமத்தியல்பைப் புலப்படுத்தியதைப் போலத் தெளிவாகவும் நுட்பமாகவும், நாகரிகமாகவும் வேறெவரும் புலப்படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வில்லை. இந்த அருமையினைத் திருக்குறளைக் கற்றுணர்ந்த பிற நாட்டவரும் பாராட்டியுளர். தமக்கென வகுத்துக் கொண்ட இத்தனிமுறையில் வெற்றி அடைதற்கு அவர் புலமை உத்திகள் பலவற்றைக் கையாண்டிருக்கிறார். இவ்வுத்திகளில் ஒப்பீட்டு முறையும் ஒன்றாகும். கள்ளுடன் காமத்தைஒப்பிட்டுக் காமத்தின் தனிச் சிறப்புக்களை அவர் விளக்குந் திறனை ஈண்டு ஆராய்வோம்.

மக்கள் களிப்பை நாடும்இயல்புடையர். களிப்பை நல்கும் பொருள்கள் பலவுள. இவற்றுள்ளே தலையிடம் பெறுவது கள். கள்ளைக் குடித்து வெறித்துச் சுவை கண்டோர் அதனை இலகுவிலே கைவிடார். இவர்களுடைய ''கட்காதல்'' பிறகாதல்களை விஞ்சி நிற்கும். கள்ளை உண்டு களிக்கக் களிக்க மேலும் மேலும் குடிக்குமாறு இந்தக் கட்காதல் தூண்டும்.

வயிற்றிலே கள்ளுக் கூடக் கூட மேலும் மேலும் குடிக்கும் பேராவலும் அதற்கேற்பக் கூடும். வெறி ஏறித் தம்மை மறக்கும் நிலை உண்டாகும் வரையும் இந்தக் குடிக்கும் ஆவல் தீராது. குடிக்க ஆசையூட்டி, குடிக்கத் தொடங்கியவுடன் மேலும் மேலும் குடிக்கும் ஆவலைத் தூண்டிக் குடிப்பவரைத் தம்மை மறக்கச் செய்யும் உச்ச நிலைக்கு ஆளாக்கும் கள்ளினுடைய இப்பேராற்றலுடன்,களிப்பை உண்டாக்கும் வேறெப் பொருளும் போட்டியிட முடியாது.

இத்தகைய பேராற்றல் வாய்ந்த கள்ளை மனத்திலே நினைப்பதால் இன்பம் பெற முடியுமா? குடித்தாலன்றி நினைத்தால் மட்டும் கள்ளினால் இன்பம் பெற முடியாது. ஆகவே, நினைத்தாலும் பெருமகிழ்ச்சி தருவது ஒன்றுண்டானால் அது களிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பூட்டுவதில் கள்ளிலும், சிறந்ததாக இருக்குமன்றோ! ''அப்படிப்பட்ட தொன்று உண்டு. அதுதான் காமம்'' என்கிறார் வள்ளுவர்.

''உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது''

காமம் தரும் மகிழ்வைத் ''தீராப் பெருமகிழ்வு'' என்று வள்ளுவர் கூறுவதால், கள்ளினால் வரும் மகிழ் வின் எல்லையும் சிறுமையும் நன்கு புலனாகின்றன.

உள்ளத்தாற் கருதுவதால் பெற முடியாத இன்பத்தைக் கண்ணாற் பார்ப்பதால் பெறுதல் கூடும். உள்ளத்தாற் கருதியவுடன் இன்பம் நல்கும் பொருள் முதலாம் தரமானது. கண்ணாற் காணும் பொழுது இன்பம் தரும் பொருள் இரண்டாந்தர மானது. இந்த இரண்டாந்தரத்தையாகுதல் கள் சேர்ந்துளதா? கள்ளைக் காண்பதால் வெறிகொண்டு களிக்க முடியுமா? அதைக் குடித்தால் அது ''வேலைசெய்யும்'',வெறியை உண்டாக்கும். ஆனால், காதலரோ ஒருவரை ஒருவர் கண்டவுடனும் களிப்புக் கொள்வர். காண்பதாற் களிப்புக்கொள்ளும் இந்த இரண்டாந்தர ஆற்றலும் காமத்துக்குண்டு; கள்ளுக் கில்லை என்று கூறுகின்றார் வள்ளுவர்.

"உண்டார்கண் அல்லது அடுநறுக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று."

இந்த இரண்டு குறள்களிலும் கூறிய முதற்றர மான சிறப்பையும் இரண்டாந்தரமான சிறப்பையும் ஒரு குறளில் இணைத்துக் கூறி, கள்ளுக்கும் காமத்துக் கும் உள்ள வேற்றுமையை மீண்டும் வள்ளுவர் வற்புறுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"உள்ளக் களித்தலும் காணமகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்துக் குண்டு" என்பது அக்குறளாகும்.

இந்த மூன்று குறள்களுடன் மேலும் இரண்டு குறள்களில் கள்ளினை உவமையாகக் காட்டுகிறார் வள்ளுவர். கள்ளுண்டு களிப்பவனுக்குக் களிக்குந் தோறும் கள்ளுண்டல் இனிதாகும். இதனைப்போலக் காமம் அவராகப் பரவுந்தோறும் தனக்கு இனிதாகின்றது எனத் தலைமகன் தோழிக்குக் கூறுகின்றான்.

"களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படும் தோறும் இனிது."

தலைவனும் தலைவியும் மேற்கொண்ட களவொழுக்கத்தைப்பிறர் அறிந்துதூற்றுதல் அலர் எனப் படும்.

கள்ளை உண்டு களிப்பவர்கள் மக்களால் இழிக்கப் படுவர். நாணம், ஒழுக்கம், நிறை, உணர்வு முதலானவற்றை அவர்கள் இழந்துவிடுவர். இதனை அறிந்தும் கள்ளுண்டு களிப்போர் மேலும் மேலும் கள்ளினை விரும்புவர். "எங்களுக்கு நின் மார்பு இன்னாதனவற்றைச் செய்கிறது. எனினும் கள்ளுண்டு களிப்போர், கள்ளினை விரும்புதல் போல அந்த மார்பை யாம் மேலும் மேலும் விரும்புகிறோம்", என்று தோழி தலைவனை நோக்கிக் கூறுவதைப் பின்வரும் குறள் எடுத்தியம்புகிறது.

"இளித்தக்க வின்னா செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு."

காமத்தின் சிறப்பியல்புகளை விளக்குதற்கு வள்ளுவர் களிப்பை நன்கூட்டுவதெனக் கருதப்படும் கள்ளினுடன் அதனை ஒப்பிட்டுக் காட்டும் நுட்பம் நுனித்தறிந்து மகிழ்தற்குரியது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF PERADENIYA
8 2001
LIBRARY

# விதியும் விடாமுயற்சியும்

"எல்லாம் என்னுடைய விதி, நானுந்தான் எவ்வளவோ முயன்றேன், ஒரு பலனுங் கிடைக்க வில்லை. இனி என்ன செய்கிறது, எல்லாம் விதியின் செயல்", என்று ஒருவர் தம் விதியை நொந்து கொள்கிறார். இவர் தம் தொழிலைச்சிறிது முயன்று செய்தார்; விரைவிற் பலன் கிடைக்குமென்று எண்ணினார். பலன் கிடைக்கவில்லை. தம் தொழிலை முற்றாகச் செய்து முடிக்கும் மனத்திட்பம் இல்லாமை யால் தளர்ச்சியும் சோர்வும் அடைந்து தம்முயற்சியை இடையில் விட்டுவிட்டுத் தம் தோல்விக்குத் தம் விதியே காரணம் என்று எண்ணி இவர் அமைதி அடைய விரும்புகிறார்.

"என்ன செய்கிறது என்ரை பிள்ளைக்கு நல்ல விதி இல்லை. அவனோடு படித்தவர்கள் உத்தியோகங் கூடப் பார்க்கிறாங்கள். இவன் எத்தனை தரம் சோதனை எடுத்துப் போட்டான். நானும் எத்தனை கோயிலுக்கு நேர்ந்து பார்த்திட்டேன். விதி யாரைத் தான் விட்டது". இது,கல்லூரிக்கு ஒழுங்காகச்செல்லா மலும்,பாடங்களை ஒழுங்காகப் படிக்காமலும்,திரைப் படங்கள் பார்ப்பதிலும் நண்பர்களோடு ஊர் சுற்றுவ திலும் காலத்தைக் கழித்துத் திரிந்ததால் பலமுறை தேர்விற் சித்தியடையத் தவறிய மாணவன் ஒருவனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

டைய தாயாரின் கூற்று. மகன் நன்கு படிப்பதில்லை. அதனாலேயே அவன் தேர்விற் சித்தியடையவில்லை என்பதை உணர முடியாத தாய் மகனுடைய நிலைமைக்கு விதியிலே பழி போடுகிறாள்.

"அன்றெழுதியவன் அழித்தெழுதுவானா? எல்லாம் தலை எழுத்துப்படித்தான் நடக்கும். நானும்தான் எவ்வளவோ செய்து பார்த்திட்டேன், சாண் ஏற முழம் சறுக்குது. கடனுக்கு மேல் கடன் வரும் என்று சாத்திரியுஞ் சொல்லியிருக்கிறான்'' என்பது தம் வரவுக்கேற்பச் செலவு செய்யும் பழக்கமில்லாத ஒருவருடைய கூற்று. இவருக்கு வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்தாற் கடன்படத்தான்.வேண்டும்என்பது தெரியாததன்று. தாம் செய்யும் பிழைக்குத் தம்மை நோகாமல் தம் விதியை நொந்து தப்பிக் கொள்ளப் பார்க்கிறார்.

"அவங்கள் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவங்கள். நாங்கள் உயர்ந்த சாதியினர்.அவங்களுக்கும் எங்களுக்கும் சமத்துவமா? அவங்கள் எங்களைப் போலக்கோயிலுக்குள் வரலாமா? அவங்களின்ரை விதியாலே அவங்கள் தாழ்ந்த சாதியிலே பிறந்தாங்கள். எங்க விதியாலே நாங்கள் உயர் சாதியிலே பிறந்தோம். அவங்க அவங்க விதிப்படிதான் நடக்கும்'' என்று ''வைதிகக் குடுக்கை'' ஒருவர் நியாயம் பேசுகிறார். தீண்டாமை பாராட்டுதல், சாதி வேற்றுமை போற்றுதல் முதலிய சமுதாயக் கொடுமைகளை நிலைத்திருக்கச் செய்வதற்கும் தம்மை உயர்த்துவதற்கும் இவர் விதியைப் பயன்படுத்துகிறார்.

இவ்வாறு விதியைச் சாட்டித் தப்பவோ அமைதியடையவோ முயல்பவர்களும் தங்கள் பிழைகளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சோர்வுக்கும் சோம்பலுக்கும் சுரண்டலுக்கும்சுயநலத்துக்கும் விதியினாலே திரையிட எண்ணுபவர்களும் நம் இனத்திலே பலருளர். இதனாலே பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வாழ்ந்துவரும் தமிழினம் தனி அரசும் தனிச் சிறப்புமின்றி அடங்கி ஒடுங்கி அல்லற் பட்டு வாழ்கின்றது.

இந்த விதியின் விளையாட்டுக்குக் கணக்கில்லை. விதி என்று ஒன்று உண்டா என்பவர்களும், எல்லாம் விதியின் செயல் என்பவர்களுமாக இரு திறத்தினர் உளர். "விதி உண்டு; ஆனால் விதியை மதியால்—உழைப்பால்-வெல்லலாம். வெல்லுதற்கு விடாமுயற்சியுடன் உழைக்கவேண்டும்" என்பதே வள்ளுவர் கூறும் அறிவுரை.

இப்பொழுது மக்களிடையே அறிவும் ஆராய்ச்சியும் பெருகியுள. தோல்வி மனப்பான்மையும், சுரண்டற் பழக்கமும், குருட்டு வைதிகக் கொள்கையும் உடையவர்களே இன்று விதியைத் தம் கொடுமைகளுக்குப் பயன்படுத்த முயல்கின்றனர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்—திருவள்ளுவர் காலத்திலும் இந்த விதி பற்றிய கருத்து மக்கள் வாழ்வினைப் பெரிதும் தாக்கிற்று. இதனாலே வள்ளுவர் தம் நூலிலே "ஊழ்" என்று ஓரதிகாரத்தைச் சேர்த்தார். முப்பத்தெட்டாம் அதிகாரமாகிய இந்த ஊழ் எனும் அதிகாரத்தில் அவர் விதியினைப்பற்றிக் கூறியுளார். ஊழ், விதி, நியதி, முறை, பால், தெய்வம் உண்மை என்பன ஒரு பொருட் சொற்கள்.

நல்வினை தீவினைகளைச் செய்தவனை அவ் வினைகளின் பயன் சென்றடையும் நியதியே ஊழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனப்படும். ஒருவினை செய்தால் அதற்குப் பயன் உண்டு. இஃது இயற்கையான நியதி. இதனை யாவரும் நன்கு உணரலாம்.

ஒருவன் நஞ்சை உண்டால் அதன் பயனாக இறக்கிறான். ஒருவன் நிலத்தைப் பண்படுத்தி மிளகாய்ப் பயிரை நட்டுப் பாதுகாத்து நன்முறையில் வளர்த்தால் அதன் பயனாக மிளகாயைப் பெறுகிறான். ஒருவனுடைய தந்தை நட்டு வளர்த்த தென்னை மரங்களின் பயனை அவனுடைய மகன் பெறுகிறான். எனவே, ஒருவினைக்குப் பயன் உண்டென்பதும், அப்பயன் உடனேயும், சிறிது காலத்தின் பின்னும், நெடுங் காலத்தின் பின்னும் கிடைக்கும் என்பதும் புலப்படுகின்றன.

முன்செய்த வினையின் பயன்களை இப்பொழுது ஊட்டும் முறைமையே ஊழ் எனப்படுகிறது. இவ்வாறு ஊட்டுதல் இப்பிறப்பிலும் மறுப்பிறப்பிலும் தொடர்ந்து நிகழும் என்பர். மறுபிறப்பில் நம்பிக்கை இல்லாதவர்கள் இப்பிறப்பில் பயன் பெறலை எவ்வாற்றானும் மறுத்தல் முடியாது.

இத்தகைய விதியின் இயல்பையும் ஆற்றலையும் திருவள்ளுவர் மிகச் சிறப்பாக எடுத்து விளக்கியுளர். மக்கட்குலத்தின் வாழ்வியலைச் செம்மைப்படுத்துதற்கு-வாழ்வாங்கு வாழும் முறைமையைக் காட்டுதற்குத் திருக்குறளை ஆக்கித்தந்த அவர் விதிக்கு இவ்வளவு பெருமை கொடுக்கிறாரே என்று அறிஞர்கள் எண்ணத்தக்க முறையில் விதியின் ஆற்றலை அவர் எடுத்து உரைத்துளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்"

என்று கூறி, ஊழிலும் பெருவலியுடையது ஒன்றுமில்லை என்று அவர் முடிவு செய்கிறார். இவ்வளவில் வள்ளுவர் அமைந்து விட்டரா? இதுவா அவருடைய முடிந்த முடிபு? இவ்வளவில் வள்ளுவர் நின்று விட்டால் அவரை இன்றும் உலகம் போற்றுமா?

மக்கள் எண்ணத்தில் ஓர் திருப்பத்தை உண்டாக்குதற்கே வள்ளுவர் விதியின் வலியை அழுத்திக் கூறினார். இத்தகைய விதியைவெல்லும் வழியை மக்கள் மனத்திற் பதித்தற்கே-அவ்வழிக்குப் பெருமை கொடுத்தற்கே-விதியைப் பெருவலியுடைய தாக்கிக் காட்டினார்.

முப்பத்தெட்டாம் அதிகாரத்தில் உயர்த்திக் கூறிய விதியை அவர் அறுபத்திரண்டாம் அதிகாரத் திலே தோல்வியடையச் செய்கிறார். விதியின் வலிமை பற்றித் தாம் கூறியதை அவர் மறவாமல் அத்தகைய வலிமைபடைத்த விதியையும் மனிதன் விடாமுயற்சி யால் தோற்கச் செய்யலாம் என்பதை

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்."

எனுங் குறளிற் பொதிந்துளர். இளைக்காமல் களைக் காமல் இடையறாது முறையாக முயல்பவர் ஊழை யும் புறங்காண்பர் என்பது இக்குறளின் கருத்து. விதியை விடாமுயற்சியால் வெல்லலாம் என்று அவர் கூறுகிறார்; "ஊழையும்" எனுஞ் சொல்லிலுள்ள "உம்" எனுஞ் சொல்லினுள் முப்பத்தெட்டாவது அதிகாரத்தில் ஊழின்வலிமை பற்றிக் கூறிய யாவற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

றையும் பொருந்து அவ்வலிமையை விடாமுயற்சியால் அழித்து விடலாம் என்று இக்குறளால் நிறுவி, விடா முயற்சியை ஊழினும் வலியுள்ளதாக ஆக்கிக் காட்டு கிறார். ''பாட்டுக்கேற்ற பலனுண்டு'' என்று கரு தாமல், அவ்வினைக்கு இவ்வினையாம் என்று கூறி உய்வினை நாடாதிருந்த காலத்தில் விடா முயற்சியால் விதியையும் வெல்லலாம் என்று குரல் எழுப்பிய வள்ளுவர் வாக்கை இன்றும் நாம் போற்றிஒழுகினால் வறுமையின்றி வாட்டமின்றி எண்ணியதை எண்ணிய வாறு பெற்று வாழலாம்.

விதிப்பயனை முயற்சியால் வெல்லலாம் என்பதை வாழ்க்கையிலே நாம் காணலாம். கொடிய நஞ்சை யுண்ட ஒருவனுக்கு எவ்வித மருந்துங் கொடுக்கா விட் டால் அவன் இறந்து விடுவான். ஆனால், உடனே அவனுக்குத்தக்க மாற்று மருந்து கொடுத்தால் அவன் உயிர் பிழைப்பானன்றோ! ஒரு வீட்டில் ஓரிடத்திலே தீப்பற்றி எரியும் பொழுது அதனைப் பார்ப்போர் ஒன்றுஞ் செய்யாதிருப்பின் அந்த வீடு முழுவதும் எரிந்து சாம்பலாகி விடும். அவர்கள் எல்லோரும் உடனே அத்தீயை அணைக்க முயன்றால் அவ்வீட்டை முழுதும் எரியாமல் காக்கலாமன்றோ! இவ்வாறே தீவினைப் பயன்களைக் குறைத்தற்கும் நல்வினைப் பயன்களைப் பெருக்குதற்கும் முயிற்சியினால் முடியும்.

வாழ்விலே சிறப்பு அடைதற்குத் தடையாக மக்களிடையே உண்டாகும் விதிபற்றிய பயத்தை நீக்கி அவர்களுக்கு விடாமுயற்சியின் பெருமையை வள்ளுவர் இதுபோன்ற பல குறள்களிலே எடுத்துக் காட்டியுளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்."

என்பதனையுங் காண்க.

விடாமுயற்சியினால் விதியைவெல்லலாம்; எந்தத் தொழிலையும் செய்யுந் தகுதியையும் பெறலாம். எனவே ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ளவர் அந்தத் தொழிலிற் சிறந்து ஓங்குதற்கு உரிய வழி விடாது முயலுதலேயாகும். ஒரு தொழிலைச் செய்யத் தொடங்கும் பொழுது அதனை நன்கு செய்தற்கு வேண்டிய தகுதி-ஆற்றல்-பெருமை ஒருவருக்கு இல்லாமலிருக்கும். இதனாலே சோர்வடைந்து விதியைச் சாட்டித் தொடங்கிய தொழிலை இடையில் விட்டுவிடல் கூடாது. அத்தொழிலை மேலும் மேலுஞ் செய்யச் செய்ய—விடாது முயல அத்தொழிலைச் சிறப்புறச் செய்தற்கு வேண்டிய பெருமை அவருக்கு உண்டாகும். இந்நிலை வந்தபின் அவர் தொழிலால் உயர்ந்தவராக உலகத்தால் மதிக்கப்படுவார்; போற்றப்படுவார். வாழ்வின் சிறப்புக்குத்-தொழிலின் வெற்றிக்கு-விதியை வெல்லுதற்கு- ஒப்பற்ற வழி விடாது முயலுதலே-உழைப்பேயாகும்.

"அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

அறுபத்திரண்டாம் அதிகாரமான ஆள்வினையுடைமையில் மட்டுமன்றி வேறும் பல அதிகாரங்களிலும் திருவள்ளுவர் ஊழை உருக்குலைத்து உழைப்பையே அரியணை ஏற்றியுளர்; "தலை எழுத்தை", "தலைமேலுள்ள அயன் கையெழுத்தை" அழித்து எழுதும் வழிவகைகளை உள்ளம் உவகையில் திளைக்கத் தக்க முறையில் விளக்கியுளர். மனமொழி மெய்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தீமை செய்யாமையும், என்றும் எப்பொழுதும் அயராது அஞ்சாது அசையாது தூங்காது உழைத்தலுமே தமிழ்மறையின் — வள்ளுவர் வாய்ச்சொல்லின் குறிக்கோள்கள். பிறருக்கும் தனக்கும் ஒருவன் செய்யவேண்டியன இவையேயாகும். சமுதாயவாழ்வு சமவாழ்வாக மலர்ந்து சிறந்துஉயருதற்கு இன்றியமையாதன இவையேயாகும்.

இதனாலேயே பிறர்க்கு இன்னாசெய்யாமையைப் பல அதிகாரங்களில் மீண்டும் மீண்டும் வற்புறுத்தியதைப்போல உழைப்பின் உயர்வை—விடாமுயற்சியின் வெற்றியை அவர் எடுத்துரைத்துளர். மடியின்மை, இடுக்கண் அழியாமை, ஊக்கமுடைமை, வினைத்திட்பம் குடிசெயல்வகை, பொருள்செயல் வகை, தெரிந்து வினையாடல், உழவு முதலிய அதிகாரங்களைப் படிப்பவர்களின் உள்ளத்தில் ஊழ் இடங்கொள்ளாது.

''அசைவில்லாத ஊக்கம் உள்ளவனைச் சென்றடையும் வழியைக் கேட்டுச் செல்வம் தானாகவே சென்றடையும்'' என்று வள்ளுவர் உறுதி கூறுகிறார்.

> ''ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
> ஊக்கம் உடையான் உழை.''

மக்கள் பாடுபட்டுத் தேடும் செல்வம், ஊக்கமுடையவனைத்தானே தேடிச்சென்றடையும் என்றால் உழைப்பின் பெருமையை உள்ளத்தில் இருத்துதற்கு இதனிலும் சிறந்த கூற்றுண்டா?

பெண்கள் ஒருவனைப் பார்த்துச் சிரித்தால் அதனிலும் அவனுக்கு இழிவு வேறில்லை எனலாம். ''எங்களிடம் ஒன்றுமில்லை யாம் வறியவர் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூறிக்கொண்டு சோம்பியிருப்பவர்களைப் பார்த்து ஒரு பெண் சிரிக்கிறாள்'' என்று வள்ளுவர் கூறிச் சோம்பல் உடையவர்களையும் முயற்சி செய்யுமாறு—நிலத்தைப்பயன்படுத்தி உழைக்குமாறு தூண்டுகிறார். நகுகின்ற பெண் நிலம் எனும் நல்லாளே. நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்பவர் செல்வத்தை ஈட்டுகின்றனர். இதைப் பார்த்தும் அவ்வாறு செய்யாது சிலர் சோம்பியிருப்பதைக் கண்டு நிலம் சிரிக்கிறது. உழைக்க வழியில்லையே என்றுமடிந்திருப்பவர்களுக்கு உழைப்பாலே பொருள் கொடுக்க நிலம் இருக்கிறது. எனவே, எவரும் தம்வறுமைக்குக் காரணம் விதிஎன்று எண்ணிக்கொண்டு இரக்கக் கூடாது என்பதை வள்ளுவர் 'நல்லாளின் நகை' மூலம் வற்புறுத்துவது உழையாமல் உலகில் எவரும் இருக்கக்கூடாது எனும் அவருடைய கொள்கையை நன்கு விளக்குகிறது.

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்."

"இருப்பாரைக் காணின்" என்னும் சொற்றொடரை "இரப்பாரைக் காணின்'' எனக்கொண்டு மணக்குடவர் உரை எழுதியுளர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்".

இக்குறளில் தனது குடியை உயர்த்தும்முயற்சியில் ஈடுபட்டுள்ள ஒருவனுக்கு உதவி செய்தற்கு ஆடையை இறுக்கிக் கட்டிக் கொண்டு தெய்வம் முன்னுக்கு நிற்கும் என்றுகூறி, முயற்சி உடையவனுக்குத் தெய்வம் துணை போகும் என்பது நிலைநாட்டப் பட்டுள்ளது. முயற்சியுடையவனுக்குத் தெய்வம் துணைக்கு வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்ற இக் கூற்றால் விதியின் சிறுமையையும் விடா முயற்சியின் பெருமையையும் யாவரும் நன்குணரலாம்.

ஒருவனுடைய உயர்வு அவனுடைய உள்ளத்திலே தோன்றும் உயர்ந்த எண்ணங்களையே பொறுத்துளது என்பதை வள்ளுவர் வற்புறுத்துவது போல வேறு எவரும் வற்புறுத்தல் முடியாது.

இக்காலத்திலே "ஆகாயக்கோட்டை கட்டப்படாது", "அளவுக்கு மிஞ்சி ஆசைகொள்ளப்படாது" "எல்லாம் அளந்த அளவு தான்"......இவ்வாறு பல கூறி மக்களின் எண்ணங்களைக்கட்டுப்படுத்தி-மட்டுப்படுத்தி மதியை மயக்குவதை எல்லோரும் அறிவர். இதற்கு மாறாக வள்ளுவர் உள்ளுவதை எல்லாம்-எண்ணுவதை எல்லாம் உயர்ச்சியைக் கருதியே எண்ணுக; உயர்வானவற்றையே எண்ணுக என்று இடித்துரைக்கின்றார். உயர்ந்தவற்றை எண்ணினால் அவையாவும் நிறை வேறுமா என்ற ஐயமும், இதனால் மனச் சோர்வும் உண்டாதல் இயல்பு. இவற்றை நீக்குவதற்கும், எண்ணிய உயர்ந்த எண்ணங்கள் யாவும் நிறைவேறாவிடினும் அந்த உயர்ந்த எண்ணங்கள் எம் உள்ளத்தை விட்டகலா என்று அவர் ஆறுதல் கூறுகிறார். எண்ணங்கள் உள்ளத்தை விட்டகலாதிருப்பின் அவை மேலும் மேலும் முயலுமாறு தூண்டி வெற்றியினை விரைவிலீட்டுமன்றோ!

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

உயர்ந்த எண்ணங்களுடன் உள்ளமும் ஊக்கமுடையதாக இருத்தல் வேண்டும். ஊக்கமில்லாத உள்ளத்தர் உயர்வு பெற முடியாது. உள்ளத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஊக்கத்தின் அளவுக்கே ஒவ்வொருவரும் உயர்வடைய லாம். இந்தப் பேருண்மையை வள்ளுவர் பெருமான் நாடோறும் காணும் காட்சி ஒன்றினைக் காட்டி விளக்குகிறார். இது யாவரும் இலகுவில் விளங்கிக் கொள்ளத்தக்க காட்சி.

குளங்களிலும் பொய்கைகளிலும் உள்ள தாமரை அல்லி முதலிய நீர்ப்பூக்களை அவர் எமக்குக் காட்டு கிறார்; அந்தப் பூக்களின் நாளத்தைப் பார்க்கச் சொல்லுகிறார். குளத்திலுள்ள நீரின் அளவுக்கேற்ப அவற்றின் நாளங்கள் நீண்டிருப்பதை நாம் நம் கண் ணாலேயே காணலாம். இந்தப் புறக்காட்சியினைப் போன்றதொரு காட்சியினை எமது உள்ளத்திலும் காட்டுகிறார் அவர். எமது வாழ்வின் உயர்வும் எமது உள்ளத்திலுள்ள ஊக்கத்திலுயாவையே பொறுத் துளது என்று கூறுகிறார்.

வள்ளுவர் காட்டும் இந்தப் புறக்காட்சியும் அகக் காட்சியும் சிந்தனைக்குப் பெருவிருந்தாகும். ஊக்கம் பெரிதானால் வாழ்வு உயரும், வளம் பெருகும் என்பதை நீர்ப்பூக்களை உவமையாகக் காட்டி எல் லோர் உள்ளத்திலும் பதியச் செய்கிறார் அவர்.

மக்களின் வாழ்வைப் பாழாக்குபவற்றில் ஊழுக்கு ஈடாக வேறெதையும் கூறமுடியாது. நாள்தோறும் நாம் காணும் இந்தக் காட்சியினால் இந்த ஊழின் நாமத்தையும் கெடுத்து, மக்கள் உயர்வடைய வழி வகுத்த வள்ளுவரின் பெருந்தொண்டு ஒப்புயர் வற்றது.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு".

□ □ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஐந்து தூண்கள்

கடைச்சங்கம். ஐம்பத்தொன்பது புலவர்களைக் கொண்டது. இதனைப்போல ஐம்பத்தொன்பது புலவர் பெருமக்களைக் கொண்டு உருவாக்கப் பட்டதே தமிழகப்புலவர் குழுவாகும்.இக்குழு சென்ற ஆண்டில் தனதுவெள்ளிவிழாவைச் சேலத்திற் கொண் டாடியது. அந்த வெள்ளிவிழாவிலே தமிழ்ப்பணி களில் ஈடுபட்ட பேரறிஞர்களைப்பாராட்டிச் சிறப்புச் செய்ய அக்குழு எண்ணியது; அவர்களுக்கு எத்தகைய சிறப்பினைப்—பட்டத்தைச்—சூட்டுவதெனப் பலபட ஆராய்ந்து இறுதியாகத் "தமிழ்ச் சான்றோர்" எனும் சிறப்பினைச் சூட்டுவதென முடிவு செய்தது. ஆயிரத் துத் தொள்ளாயிரத்து எண்பத்து மூன்றாம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் எட்டாம் நாள் சேலத்தில் நடை பெற்ற வெள்ளிவிழாவில் தமிழ்ப் பேரறிஞர் இருபதின் மருக்குத் தமிழ்ச் சான்றோர் எனும் சிறப்புச் சூட்டப் பட்டது. பாராட்டுச் சான்றிதழும் பட்டயமும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

மேலோர், பெரியோர், உயர்ந்தோர், சிறந்தோர், கற்றோர்,அறிஞர், நல்லோர், மேதையர், மூத்தோர், விழுமியோர் முதலியசொற்கள் குறிக்கும் பண்புகளை யெல்லாம் கொண்டு நிறைந்து உயர்ந்து மிளிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கின்றது சான்றோர் எனும் இச் சொல். ஈடிணையற்ற உயர்ந்தோரைக் குறித்தற்கு இச்சொல் பண்டு தொட்டு இன்று வரை வழங்கி வருகின்றது; என்றும் வழங்கும். சால்பை உடையோர் சான்றோர். சால்பு எனுஞ் சொல்லுக்கு எல்லா நற்குணங்களினதும் நிறைவு என்பது பொருள்.

சான்றோருக்கு எல்லா நற்குணங்களும் இயல்பாகவே நிறைந்திருக்கும் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

"கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

சான்றோர் எனும் சொல்லுக்குள் பொதிந்துள்ள பண்புகளைக் கொண்ட ஒரு சொல்லை வேறெந்த மொழியிலும் காணல் முடியாது. தமிழினத்தின் நாகரிகத்தின் - பண்பாட்டின் உயர்வை இச்சொல்லாட்சி நன்கு காட்டுகின்றது.

சான்றாண்மை எனும் அதிகாரத்தில் சான்றோரைப் பற்றித் திருவள்ளுவர் திறம்பட விளக்கியுளர். சான்றாண்மை என்பது பல நற்குணங்களால் நிறைந்து அவற்றை ஆளும் தன்மையைக் குறிக்கின்றது. மனிதர்கள் சான்றோராக வாழ வேண்டும் என்பதே தமிழினத்தின் தனிக்குறிக்கோளாகும்.

ஒரு மகனைப் பெற்ற தாய், தன் மகனைப் பிறர் சான்றோன் என்று போற்றுவதைக் கேட்பதால் ஈடிணையற்ற உவகையை அடைகிறாள்; அவனைப் பெற்ற பொழுது அடைந்த மகிழ்ச்சியிலும் பெரிய மகிழ்ச்சியை அடைகிறாள் என்று வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்" என்பது அவர் வாக்கு.
"சான்றோனென்கை ஈன்றோட்கு அழகு" என்பது ஔவையார் வாக்கு.

சான்றோருள்ள நாட்டில் அரச நீதி பிழையாதென்பதைக் கண்ணகியின் அழுகையால் இளங்கோ அடிகள் புலப்படுத்துகின்றார். மதுரையிலே கோவலனை இழந்து அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணகி நீதி வழுவித் தன் கணவனைக் கொன்ற பாண்டிய மன்னனுடைய நாட்டிலே "கற்புடைய பெண்டிரும் உண்டுகொல்" என்று முதலிற் கேட்டு விட்டு அடுக்கச் "சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்" என்று அரற்றுகிறாள். சான்றோரின் இயல்பை "ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉஞ் சான்றோரும் உண்டுகொல்" என்று கண்ணகி கூறியது எல்லோர் கருத்தையும் கவரத்தக்கது.

பிசிராந்தையார் எனும் பெரும் புலவர் தமக்கு ஆண்டு பல கழிந்தும் நரை இல்லாமைக்குரிய காரணங்களை அடுக்காக – அழகாக எடுத்துரைத்த பாடலைப் புறநானூற்றிலே காணலாம். இக்காரணங்களுள் தலையாய காரணம் தமதூரில் சான்றோர் பலர் வாழ்வதே என அவர் கூறியிருப்பது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.

"...அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்
பலர் யான் வாழுமூரே"

என்று பாடிய அவர் சான்றோரை "ஆன்று அவிந்து அடங்கிய கொள்கை"யினர் என்று திட்ப நுட்பமாக உரைத்துளர். சான்றாண்மை எனும் அதிகாரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வள்ளுவர் கூறுபவற்றை ஆயும் பொழுது இக்கூற்று நன்கு விளங்குகிறது.

சால்பினை ஐந்து தூண்கள் தாங்குகின்றன. இந்தத் தூண்களில் ஒன்று தளர்ந்தாலும், சரிந்தாலும் சால்பு நிறைவை இழந்துவிடும் என்பதை வள்ளுவர் விளக்குந்திறன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளத் தக்கது. ஊழிபெயரினும் -காலம் மாறினும்- சான்றோர் பெயராமல் நிலைத்த கொள்கையினையுடைய வராயிருப்பதற்கு இந்த ஐந்து தூண்களும் அவர்களைத் தாங்கிக் கொள்ளல் வேண்டும்.

"அன்பு நாணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்."

எனும் இந்தக் குறள் அந்த ஐந்து தூண்களையும் நிறுத்திக் காட்டுகின்றது. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை எனும் ஐந்துமே அந்த ஐந்து தூண்கள்.

சான்றோருக்கு அமைய வேண்டிய நற்குணங்கள் தமிழ் மறையிற் பல அதிகாரங்களிலே கூறப்பட்டுள. எனினும் இந்த ஐந்து குணங்களும் சால்பைத் தாங்குதற்கு இன்றியமையாதன. இவற்றுள் ஒன்று குறையினும் சரியினும் சால்பு நிலைக்காது.

இந்த ஐந்து குணங்களின் சிறப்பியல்புகளையும் தனித்தனி ஒவ்வோரதிகாரத்தால் விளக்கி இவற்றின் இன்றியமையாமையை வள்ளுவர் பெருமான் நன்கு புலப்படுத்தியுளர். இந்த அதிகாரங்களில் கூறப்படுபவற்றைத் தொகுத்துக்காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அன்பு என்பதை அன்புடைமை என்னும் எட்டாவது அதிகாரம் விளக்குகிறது. அன்பு எனும் இந்த முதலாவது தூண் மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாத தென்பதை யாவரும் அறிவர். மக்களின் உயிருக்கு உடம்போடு கூடிய தொடர்புஅன்பை வளர்ப்பதற்கே என அறிஞர் கூறுவர். உலகத்திலே இன்புற்றுச் சிறப்படைந்தவர்கள் யாவரும் அன்பு செய்து வாழ்ந்தவர்களேயாவர். அன்பு அறத்துக்கே சார்பானது மட்டுமன்று. மறத்துக்கும் அது துணையானது அன்பு இல்லாதவர்கள் எப் பொருளையும் தமக்குரியதாக்குவர். அன்பை உடையவர்கள் பிறருக்குத் தம் எலும்பையும் உதவுவார்கள். உள்ளுறுப்பாகிய அன்பு இல்லாதவர்களுக்குப் பிற உறுப்புக்களால் பயன் இல்லை.

வலிய பாறையிலோ-பாலை நிலத்திலோ பட்ட மரம் தளிர்க்க முடியுமா? முடியவே முடியாது. இதனைப் போன்றதுதான், உள்ளத்தில் அன்பு இல்லாதவர் தம் வாழ்வு.அன்பு இல்லாதவர்கள் பாலை வனத்திலுள்ள பட்டமரம் போன்றவர்கள். பட்ட மரம் தளிர்க்காது. அன்பு இல்லாதவர்களும் வாழ முடியாது. வாழ்வின் உயிர்நிலை அன்பு. அன்பு இல்லாதவர்கள் வெறும் பிணமே-உயிரற்ற தோலால் மூடப்பட்ட எலும்புக்கூடே-என்று வள்ளுவர் வற்புறுத்திக் கூறி உயிர் வாழ்தற்கு அன்பு இன்றியமையாததென்பதை நிறுவுகிறார்.

> ''அன்பின் வழிய துயிர்நிலை ய∴திலார்க்
> கென்புதோல் போர்த்த வுடம்பு.''

இரண்டாவது தூண் நாண். இது நாணம் எனவும் படும். இந்தத் தூணைப் பற்றி நூற்றிரண்டாம் அதிகாரமான நாணுடைமை நன்கு விளக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாணம் என்பது நாணுதல். அஃதாவது தமக்கு ஒவ்வாத-தகாத செயல்களைச் செய்தற்கு மனம் கூசுதல்—அஞ்சுதல்—மறுத்தல் எனலாம். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு எனப் பெண்களுக்குரியன வாகக் கூறப்படும் நாற்குணங்களில் முதலாவதான நாணம் வேறு; சால்பினைத் தாங்கும் தூணாகிய நாணம் வேறு. இழிந்த கருமங்கள் காரணமாக நாணு தலே இந்த நாணம்.

மக்கள் எல்லோருக்கும் உணவு, உடை, உறக்கம், அச்சம், காமம் முதலியவை பொதுவானவை. பழிக் கஞ்சும் நாணுடைமை மட்டுமே நன்மக்களுக்குச் சிறப் பாக உரியது. உயிர்கள் எல்லாம் உடம்போடு கூடியே பயனைப் பெறுகின்றன. இதனைப் போலவே நாண் என்னும் நற்குணத்தோடு கூடியே சால்பு பயன் எய்து கிறது. சால்புக்கு நிலைக்களன் நாணாகும். சான்றோ ருக்கு நாணுடைமை அணியாக இலங்குகிறது. நாண மில்லாதவருடைய பெருமிதம் பிணியாகும். தமக்கு வரும் பழிக்கு மட்டும் நாணாமல் பிறர்க்கு வரும் பழி யையும் தமக்கு வரும் பழியாகக் கொண்டு நாணு வாரை உலகத்தோர் நாணுக்கு உறைவிடம் எனப் போற்றுவர். பழியெனின் உலகுடன்வரினும் நாணுடை யவர் கொள்ளார்.

மரப்பாவையைக் கயிற்றால் இயக்கும் பொழுது அஃது உயிருடையது போல ஆடி மயக்கும். இந்தப் பாவையின் இயக்கம் போன்றதே உள்ளத்தில் நாண் இல்லாதவர் உயிருடையார் போன்று இயங்கும் இயக்கம். நாணமில்லாதவர் நடைப் பிணமேயாவர்

**“நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை**
**நாணா லுயிர்மருட்டி யற்று.”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாணமுடையோர் உயிருக்காக நாணத்தைக் கை விடார்; நாணத்துக்காக உயிரை விடுவார்கள்.

**ஒப்புரவறிதல்** எனும் இருபத்திரண்டாம் அதிகாரம் மூன்றாவது தூணாகிய ஒப்புரவை விளக்குகின்றது. ஒப்புரவு என்பது உலக நடையாகும். இதனை வாழ் வியல் எனலாம். உலக நடையினை அறிந்து மக்கள் செயற்படல் வேண்டும் என வள்ளுவர் வலியுறுத்து கின்றார். உலகத்தோடு ஒட்ட ஒழுகல் சமுதாய வாழ்வின் உயர்வுக்கு இன்றியமையாதது. உலகத்தின் போக்கை அறிந்து ஒத்துவாழுதற்கு எல்லோரும் முற்பட்டால் சமுதாயத்தில் எவ்வித முரண்பாடும், மாறுபாடும், வேறுபாடும், ஊறுபாடும் உண்டா தற்கு வாய்ப்பிருக்காது.

பிறவுயிரையும் தம்முயிர்போல் எண்ணி எல்லோ ரையும் தம்மோடு ஒப்பானவராகக்கொண்டு எல்லோ ரும் வாழ்தற்கு உதவுதலே ஒப்புரவு செய்தலாகும். பல்லாற்றானும் சமவாழ்வுக்கு வழிவகுத்த வள்ளுவர் வாழ்வுக்கு இன்றியமையாத பொருளைப் பகிர்ந் துண்ணுதலையே ஒப்புரவின் சிறந்த பண்பென வற்புறுத்துகிறார். கைம்மாறு கருதாமல் மேகம் பொழிகிறது. இதனைப்போல ஒப்புரவுகளும் கைம் மாறு கருதுவன அல்ல. ஒப்புரவாளர் முயன்று ஈட்டிய பொருள் முழுவதும் தக்கார்க்கு உதவி செய்தற்கே உரியன.

> "தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
> வேளாண்மை செய்தற் பொருட்டு."

ஒப்புரவு போன்ற நல்ல செயலை எந்தவுலகத்திலும் பெறல் முடியாது. உலகத்தவர்க்குச் செய்யவேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கடமைகளை அறிந்து செய்பவனே உயிருடன் வாழ்பவன். இவ்வாறு செய்யாதவன் வாழ்ந்தாலும் செத்தவரில் ஒருவனாகவே கருதப்படுவான்.

ஊர் மக்கள் தண்ணீர் பெறும் நீர்நிறைந்த குளம் போலவும், ஊர் நடுவிற் பழுத்த கனிதரும் மரம் போலவும், எல்லா உறுப்புக்களும் மருந்தாகப் பயன்படும் மரம்போலவும் ஒப்புரவாளனுடைய செல்வம் யாவர்க்கும் பயன்படும்.

தம்முடைய செல்வம் குறைந்த காலத்திலும், கடப்பாட்டை உணரும் இயற்கை அறிவினை உடையார் ஒப்புரவு செய்தற்குத் தளர்ச்சி அடையார். பிறர்க்குச் செய்யவேண்டிய உதவியைச் செய்ய முடியாமையால் வருந்துவது தான் ஒப்புரவாளர் அடையும் வறுமையாகும். ஒப்புரவு செய்தலால் ஒருவருக்குப் பொருட்கேடு வருமென்றால், தன்னை விற்றாயினும் கொள்ளும் தகுதியை உடையது அக்கேடு என்று வள்ளுவர் கூறி ஒப்புரவின் பெருமையை விளக்குகின்றார்.

**கண்ணோட்டம்** என்னும் ஐம்பத்தெட்டாம் அதிகாரத்தில் நான்காம் தூணாகிய கண்ணோட்டம் பற்றி வள்ளுவர்கூறுகின்றார். கண்ணோட்டம்என்பது கண் ஓடுதல்-செல்லுதல் எனும் பொருளையுடையது. அஃதாவது பழகியவர்களைக் கண்டால் அவர்களிடத்துக் கண்ணினால் அன்பு புலப்படுத்துதல் ஆகும்.

''பயின்றவர் தம்மால் கூறப்பட்டன மறுக்கமாட்டா
இயன்ற நற்குணம் கண்ணோட்டம்''

என விநாயக புராணம் கூறுகிறது. பரிமேலழகர் கருத்தும் இதுவேயாகும். கண்ணால் காணப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

டாருக்கு அருள்செய்தல் என மணக்குடவரும், கிருபை யாகிய பார்வை எனப் பரிதியாரும் உரைத்துளர்.

கண்ணோட்டம் ஒரு பேரழகு இந்தப் பேரழ கிருப்பதாலேயே இந்தஉலகம் வாழ்கிறது. உலகநடை-உலகியல்-கண்ணோட்டத்தில் அமைந்துளது. எனவே, கண்ணோட்டமில்லாதவர் பூமிக்குப் பாரமாவர். கண்ணோட்டம் இல்லாத கண்ணால் எவ்வித பயனும் இல்லை, கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டமே. கண்ணோட்டமில்லாத கண் புண்ணாகும். கண்களை யுடையவராயினும் கண்ணோட்டமில்லாதவர்கள் மண்ணோடியைந்த மரம் போல்வர். கண்ணுடைய வர்கள் கண்ணோட்டமின்றி இருத்தல் சாலாது. தமது கருமங்கள் சிதையாமல் கண்ணோட்டம் செய்பவர் களுக்கே இந்த உலகம் உரியது. தம்மை வருத்துபவர் களிடத்தும் கண்ணோடி அவர் குற்றத்தைப் பொறுத் தலே தலையான இயல்பாகும். தம்மோடு பழகினவர் கள் தமக்குத் தெரிய நஞ்சினைக் கலந்து கொடுப் பினும் அதனை உண்டு அவரோடு உறவுகொள்வர் நயத்தக்க நாகரிகத்தை வேண்டுபவர்.

''பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.''

ஐந்தாவது தூணாகிய வாய்மையை விளக்குகிறது ''வாய்மை'' என்னும் முப்பதாம் அதிகாரம்.வாய்மை, மெய்ம்மை, உண்மை, பொய்யாமை என்பன இப் பொழுது ஒரு பொருட் சொற்களாக வழங்குகின்றன.

வாய்மை எனப்படுவது யாது? என்ற வினாவை எழுப்பி இரண்டு குறள்களில் வள்ளுவர் விடை தரு கின்றார். உள்ளத்தை உள்ளபடி கூறல்-நடந்ததை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நடந்தபடி சொல்லுதல்-கண்டதைக் கேட்டதை அப் படியேசொல்லுதல்-இவற்றையேவாய்மைஎனக்கருதல் இயல்பு. தீமைகளே சமுதாயவாழ்வைச் சிதைப்பதற்கு அடிப்படைகள். இதனால் இவற்றை ஒழித்து வாழல் வேண்டுமென்பதே தமிழ்மறை முழுதும் இழையோடும் கொள்கையாகும். எனவே, வாய்மை என்பதற்கு வள்ளுவர் எவருக்கும் எவ்வித தீங்கும் பயவாத சொற்களைச் சொல்லுதல் என்று வரையறை செய் கின்றார். இவ்வாறாயின் தீங்கு பயவாது நன்மை பயக்கும் பொய்மைச்சொற்களும் உளவே! அவற்றைச் சொல்லுதல் பொய்மையா? வாய்மையா? என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு அவை "புரை தீர்ந்த நன்மை பயக்கு" மெனின் வாய்மையாகக் கொள்ளப் படும் என வள்ளுவர் அழுத்திக் கூறுகின்றார்.

வாய்மை பற்றிய வள்ளுவரின் கருத்தை "தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும், நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மை எனவும், நன்மை பயவாத நிகழாதது கூறலும், தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மை எனவும்" பரிமேலழகர் விளக்கியுளர்.

நெஞ்சறியப் பொய்யினைச் சொல்லுதல் கூடாது. இவ்வாறு சொல்லின் தன் நெஞ்சே தன்னைச்சுடும். தனது மனமறியப் பொய்கூறாமல் ஒழுகுபவனை உலகத்தோருள்ளத்தில் வைத்தும் போற்றுவர். மனத் தோடு உண்மை பேசுபவர் தவம் தானங்கள் செய் பவர்களினும் சிறப்புடையவராவர். பொய்பேசாமை யால் ஒருவர் பெறும் புகழுக்கு ஈடான புகழ் வேறெதுவுமில்லை. பொய்யாமையைத் தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காப்பாற்றுபவர், வேறு அறம் எதனையும் செய்ய வேண்டியதில்லை. உடம்பை நீரால் தூய்மைப் படுத்துகிறோம். இதைப் போல மனத்தூய்மை வாய்மையால் உண்டாகும். சான்றோர்க்குப் புற இருளை நீக்கும் விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல. உள்ளிருளகற்றும் வாய்மையே அவர்களுடைய விளக்கு. எந்த மெய்ந் நூல்களிலும் வாய்மையினும் நல்ல அறம் கூறப் படவில்லை.

> ''யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத் தொன்றும்
> வாய்மையி னல்ல பிற.''

அன்பு இல்லாதவர் என்பு தோல் போர்த்த உயிரற்ற பிணம் எனவும், நாணில்லாதவரியக்கம் மரப் பாவையின் இயக்கம் போன்றதெனவும், ஒப்புரவைச் செய்யாதவன் செத்தாருள் வைக்கப்படுவான் எனவும், கண்ணோட்டம் இல்லாதவர் மண்ணோடியைந்த மரத்தனையர் எனவும், வாய்மையினும் மிக்க அறம் வேறில்லை எனவும் வள்ளுவர் கூறிச் சான்றாண்மை அறங்களுள் தலையானதென்பதையும் உயிரினும் சிறந்ததென்பதையும் நிலை நாட்டிச் சிந்தனையைத் தூண்டி எண்ண அலைகளை உருவாக்கியுளர்.

இந்த ஐந்து தூண்களாலும் தாங்கப்படும் சால்பின் சிறப்பினையும் சான்றோரின் சிறப்பினையும் கூறி வள்ளுவர் சாண்றாண்மை எனும் அதிகாரத்தை முடிக்கின்றார். வாய்மையைப் பற்றிப் பேசும் போது பிறருக்கு எவ்வித தீங்கும் பயவாதவற்றையே சொல்ல வேண்டும் என்று விதித்த வள்ளுவர் பிறர் தீமை சொல்வதாலேயே எல்லாத் தீமைகளும் தோன்றி மக்கள் வாழ்வு பாழாகின்றதெனும் தமது உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிலைக் கொள்கையை மீண்டும் வலியுறுத்துதற்கு "தவம் ஒருயிரையும் கொல்லா நலத்தினைச் சார்ந்தது; அதனைப் போலப் பிறர் குற்றஞ் சொல்லாத குணத்தைச் சார்ந்தது சால்பு'' எனக் கூறுகின்றார். அன்றியும் தீமை செய்தவர்க்கும் நன்மை செய்யாவிடின் சால்பினால் பயனில்லை என்றும் உரைத்துளர் அவர். சான்றோர் பணிவுடைய ராயிருப்பர். இந்தப் பணிவே அவர்களுடைய பகைவர் களின் பகைமையையும் மாற்றும் கருவியாகும். தம்மி னும் குறைந்தவர்களிடத்தும் தோல்வியை ஏற்றுக் கொள்ளுதலே சால்பின் உரைகல்லாகும். சான்றோர் கள் தமது சால்பிற்குன்றினால் பூமி தன் பாரத்தைத் தாங்காது. சால்பு எனும் திண்மை உண்டாகப் பெறின் சான்றோர்க்கு வறுமை எவ்வித இளிவையும் உண்டாக்காது.

"இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.''

இந்தக் குறளுடன்

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.''

எனும் குறளை ஒப்பிடும் பொழுது பெண்ணுக்குக் கற்பைத் "திண்மை'' என்று கூறிய வள்ளுவர் மக்களுக்குச் சால்பைத் திண்மை எனக் கூறுவது புலப் படுகின்றது. கண்ணகி கணவனை இழந்து அழுதரற்றும் பொழுது முதலில் மதுரையிலே கற்புடைப் பெண்டிர் இல்லையா? என்றும் இரண்டாவதாகச் சான்றோ ரில்லையா? என்றும் மூன்றாவதாக—கடைசியாகத் "தெய்வமும் உண்டு கொல்? என்றும் கேட்டாள். இதனால் கற்புடைப் பெண்டிரும் சான்றோரும் தெய் வத்தோ டொப்பர் என்பது பெறப்படுகின்றது. கண் காணாத் தெய்வத்தை விட்டுவிட்டால் இவ்வுலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கண்கண்ட தெய்வங்கள் கற்புடைய மகளிரும் ஐந்து தூண்களாலும் தாங்கப்படும் சால்பையுடைய —திண்மையுடைய சான்றோருமேயாவர். கண்ணகி தெய்வமாகு முன்னரே கவுந்தி அடிகளால்

''கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்''

எனத் தெய்வமாக்கப்பட்டார்.

உலகத்தார் சான்றோரைத் தொழுதேத்துவார் கள் என்பதை வள்ளுவரே மூன்று குறள்களிலே எடுத்துக் காட்டியுளர்.

கற்புடைப் பெண்களையும் சான்றோரையும் ஒரு குறளினால் வள்ளுவர் இணைத்துக் காட்டி இருபாலா ரும் ஒழுக்க நெறியினின்று வழுவாதிருக்க வேண்டும் என்பதையும் திண்மை—கற்பு உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்தியிருப்பது சிந் தனைக்குப் பெருவிருந்தாகும்.

"ஒருமை மகளிரே போலப் பெருமையுந்

தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு." என்ப தனையும் நோக்குக.

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காந்தியமும் வள்ளுவமும்*

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என்
சிந்தையுள்ளும் உறைவான் உயர் மதிற் கூடலின்
ஆய்ந்த ஒண்தீந்தமிழ்"

என்று மாணிக்கவாசகர் பாடினார் அன்று. உயர்ந்த மாட மாளிகைகளும் பல்வேறு இன மக்களும்நிறைந்த இத் தெல்லி மாநகரிலே தமிழ்ப் பேரறிஞர் பலர் தமிழினை ஆராய்கின்றார்கள் இன்று. இது தமிழ் மக்கள் யாவருக்கும் மகிழ்ச்சியினை அளிக்கும் செயலாகும்.

இத்தமிழ் விழா நடக்கும் இத்தெல்லி மாநகர் இந்தியாவின் தலைநகர். இந்தியாவை நினைக்கும் பொழுது காந்தியடிகளே நமக்கு முதலிற் காட்சியளிக்கிறார். அப்பெரியார் வாழ்ந்த காலத்தில் வாழும் பாக்கியத்தையும் அவருடைய உயர்ந்த கொள்கைகளை அறியும் வாய்ப்பினையும் நாம் பெற்றுள்ளோம்.

தமிழினத்தை நினைக்கும் பொழுது தமிழரின் பண்பாட்டுக் களஞ்சியமாக விளங்கும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரே நமக்கு முதலில் காட்சியளிக்

---

* தெல்லி மாநகர்த் தமிழ் விழாவில் 30, 8. 1953 இல் நிகழ்த்திய உரையைத் தழுவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கிறார். ஆகவே இந்தியாவின் தலைநகரிலே நடக்கும் தமிழ் விழாவிலே நாம் காந்தியடிகளையும் திருவள்ளுவரையும் நினைக்காமலிருக்க முடியாது. இதனாலேயே இவ்விருவரையும் பற்றி யான் பேச விழைந்தேன். திருவள்ளுவருடைய நூலில் ஈடுபட்டு அதனைக் கற்பதற்கு விரும்பிக் காந்தியடிகள் தமிழினைக் கற்ற செய்தி யாவரும் அறிந்த தொன்றே. இந்த உலகத்திலே "கத்தியின்றி இரத்தமின்றிப் போர் செய்யும் முறையினைக் காந்தியடிகள் நிலை நாட்டினார்." இந்த அறப்போரைச் 'சத்தியாக்கிரகம்' என்றார். இதனைத் தென்னாபிரிக்காவில் அவர் முதலில் நடத்தினார். அப்பொழுது உற்றதுணைவர்களாயமர்ந்து காந்தியடிகளின் உள்ளத்தைக் கவர்ந்த பெருமை தென்னாட்டுத் தமிழ் மக்களுக்கே உரியதாகும்.

திருக்குறளைப் பற்றி இம்மேடையிற் பேசிய நண்பர், உங்கள் யாவரையும் ஓயாது நகைக்கச் செய்தார். அன்பின் தத்துவத்தைப் போல, நகைப்பின் தத்துவத்தையும் நன்கறிந்தவர்கள் தமிழர்களே யாவர். மக்களை நகைக்கப் பழக்குவதற்கு பிரான்சு தேசத்திலே ஒரு பாடசாலையை இப்பொழுது நிறுவியிருக்கிறார்களாம். "சிரித்துச் சிரித்து வாழுங்கள், சிரிக்கும் ஆற்றல் இல்லாதவர்களுக்கு இந்தப் பெரிய உலகம் பகற் காலத்திலும் இருள்மயமாகவே இருக்கும்." என்று வள்ளுவனார் இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னரே கூறியுளர்

"நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலுமபாற் பட்டன்று இருள்"

என்பது அவர் கூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இது மட்டுமா? துன்பங்கள் இடையூறுகள் முதலியன வரும் பொழுதெல்லாம் சிரியுங்கள். இவற்றை நீக்கி வெற்றியடைவதற்கு இதைவிடச் சிறந்த வழியில்லை என்று ஒப்புயர்வற்ற—உலகத்தில் ஒருவருமே காட்டாத - இலகுவான வழியினையும் வள்ளுவர் பெருமான் உலகத்திற்குக் காட்டியிருக்கிறார்.

"இடுக்கண் வருங்கா னகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்"

காந்தியடிகள் தமது பொக்கை வாய்ச் புன்சிரிப்பினால் அன்றோ பகைவர்களையும் அன்பர்களாக்கி அருளாட்சி செய்தார்; தமக்கு நேர்ந்த பேரின்னல்களையும் வென்று இன்புற்றார்.

திருவள்ளுவர் தந்த தமிழ் மறையினைப் பொய்யாமொழியென யாவரும் போற்றி வருகின்றனர். திருவள்ளுவர் கூறும் பல நீதிகளை மக்கள் கடைப்பிடித்து நடக்கமுடியுமா என்ற ஐயப்பாடு அவருடைய நூலைப் படிப்போருக்கு உண்டாவதியல்பே. இந்த ஐயத்தை நீக்கத்தக்க முறையில், திருக்குறள் முழுவதற்கும் இலக்கியமாக வாழ்ந்து காட்டிய வித்தகப் பெரியார் காந்தியடிகளேயாவர், அருள், அறம், வாய்மை, கொல்லாமை, அஞ்சாமை, எளிமை, விடா முயற்சி, ஊக்கம், உழைப்பு, தனக்கெனவாழாது பிறர்க்கெனவாழ்தல், பிறர்க்கின்னா செய்யாமை, கடவுள் நம்பிக்கை, தீமையையும் நன்மையினால் வெல்லுதல் முதலிய காந்தியடிகளுடைய அடிப்படைக் கொள்கைகள் யாவும் திருவள்ளுவர் விளக்கிய சீரிய கொள்கைகளேயாகும். காந்தியடிகளின் கொள்கைகள் முழுவதையும் அடக்கி மிளிரும் நூல் இந்த உலகில் திருக்குறள் ஒன்றேயெனலாம். காந்தியடிகள் வாய்மை

க.ம—5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யினைக் கடைப்பிடித்தொழுகினார்; உண்மையே கடவுளென்றார்: தம் வாழ்க்கையினைச் ''சத்திய சோதனை''யென்று கூறினார்; இவற்றால்,

''யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற''

என்ற திருவள்ளுவர் கூற்றினை விளக்கினார். உள்ளத்தால் பொய்யா தொழுகிய அடிகளார்தம் பெருமையினைக் கண்டு அவரை உலகம் போற்றியது. மக்கள் உள்ளங்களில் அவர் இடம் பெற்றார்.

''உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்''

எனுங் குறளை அவர் மெய்ப்பித்தார் காந்தியடிகள் அகிம்சை என்று கூறியதைத் திருவள்ளுவர் பிறர்க்கின்னா செய்யாமை என்று உரைத்தார். இந்த உலகம் கண்ட அகிம்சா மூர்த்திகள் பலருள்ளும் காந்தியடிகள் தனிச்சிறப்பினை உடையவர். அவர் வகுத்த அகிம்சை நெறி திருவள்ளுவர் வகுத்த நெறியில் அமைந்து விளங்கும் அருமைப்பாடுதான் என்னே! சால்பின் பெருமைக்கும், அறிவின் பயனுக்கும், மாசற்றார் கொள்கைக்கும் உரைகல் பிறர்க் கின்னாசெய்யாமை என்பதை வள்ளுவர் வலியுறுத்திக் கூறியுளார்.

''எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணா செய்யாமை தலை''

எனும் வாய்மொழிக்கு அன்றோ காந்தியடிகள் தம் வாழ்க்கையினைத் தியாகம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அன்புக்கும் அகிம்சைக்கும் உரைகல் பகைவர் களேயாவர். பகைவர்களிடத்தும் அன்பு செய்தல் வேண்டும், அகிம்சையுடன் நடந்து கொள்ளவேண்டு மெனத் திருக்குறள் உரைக்கிறது. காந்தியடிகள் வங்காளத்திலுள்ள நவகாளிப் பகுதியிற் சுற்றுப் பயணஞ் செய்து கொண்டிருக்கும் பொழுது, அன்ப ரொருவர் "என்னைக் கொல்ல எண்ணி வரும் ஒருவனை நான் முந்திக் கொல்வதா அன்றேல் அவனாலே கொல்லப்படுவதா நல்லது" என அவரைக் கேட்டார். அதற்கு அடிகளார் "கொல்லப்படுவது தான் பெருஞ்செயல்" என்று விடையிறுத்தார். இந்த விடை திருக்குறளிலே இருக்கிறது.

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறிதின்
இன்னுயிர் நீக்கும் வினை"

என்பது வள்ளுவர் வாய்மொழி. இது பேதையின் அன்றேல் கோழையின் செயலன்று; சிறந்த பேரறிஞன் செயல் என்பதையும் பின்வரும் குறளில் வள்ளுவர் தெளிவாக எடுத்துக் கூறுகிறார்.

"அறிவினு ளெல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்"

காந்தியடிகள் தாம் கூறியவற்றை முறையாக அமைத்து இனிமையாகக் கூறினார். இதனால் மக்கள் அவற்றை விரைந்தேற்றார்கள்; செயற்படுத்தினார்கள். அவருடைய நாஅசைய நாடு அசைந்தது. அவருடைய இந்தத் தனி ஆற்றலைக் கண்டு உலகமே வியப்படைந்தது. இந்த ஆற்றலை வள்ளுவர்

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்று விளக்கியுள்ளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தீமையைத் தீமையினால் அழிக்க முடியாது, நன்மையினாலே வெல்ல முடியும். இதுதான் திருவள்ளுவர் கூறும் அடிப்படையான பேருண்மை. இதைத் தான் காந்தியடிகள் அணுக்குண்டினால் அல்லோல கல்லோலப்படும் உலகத்துக்கு எடுத்து விளக்கினார்.

"அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை".

இந்தக் குறளில் பொதிந்துள்ள அன்புக் குண்டு தான் இக்காலவுலகத்தை ஈடேற்றத்தக்கது. சிறந்த-உயர்ந்த - பண்பாட்டின் உயிர் நிலைதான் இக் கொள்கை. இதை ஈராயிரம் வருடங்களுக்கு முன்னரே திருவள்ளுவர் உணர்ந்து உலகமுய்ய உரைத்தார். இதனைக் காந்தியடிகள் தம் வாழ்க்கையினால் உணர்த்தினார். காந்தியமும் வள்ளுவமும் - காந்தி நெறியும் வள்ளுவர் நெறியும் தோன்றும் இடமும் முடியும் இடமும் இஃதே எனலும் சாலும்.

ஏனைய ஆசிரியர்களுக்கு இல்லாத தனிமதிப்பைத் திருவள்ளுவர் பெறுதற்குரிய காரணங்களுள் ஒன்று அவர் முயற்சிக்கு முதலிடங் கொடுத்ததேயாகும்.

''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்''

என்பது அவர் வாய்மொழி.

''விதிவிதி என்று கூறி மதிமயங்கி அடிமை வாழ்வு வாழ வேண்டாம். இந்த உலகத்தில் எண்ணியதை எவரும் எண்ணியவாறு பெறலாம்; செய்யமுடியாத காரியம் இல்லை'' என்று அவர் அழுத்தந்திருத்தமாகக் கூறினார். இக்கூற்றையே காந்தியடிகள் நமக்குத் தம் வாழ்வினாலே விளக்கிக் காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காந்தியடிகளுடைய வாழ்வு நமது உள்ளத்தைத் தொடுகின்றது; உருக்குகின்றது; நம் உணர்ச்சியைப் பெருக்குகின்றது. இதன் காரணம் யாது? அவர் தெய்வத்தின் அவதாரமாகப் பிறக்கவில்லை. பெரிய வரங்களைப் பெற்று உலகத்தை ஆட்டி வைத்தவரும் அல்லர். முன்வினைப்பயனால் எல்லாம் பெற்றேனென்று "வீம்பு" பேசியவரும் அல்லர். காட்டுக்குள் சென்று மூச்சை அடக்கி அவர் தவம் செய்யவும் இல்லை. எங்களுடன் எங்களைப் போல வாழ்ந்தார்; பிழைகள் விட்டுவிட்டுத் திருந்தினார். துன்பத்தை அனுபவித்து அனுபவித்து உயர்ந்தார்; யாவரும் உயர்தற்குரிய வழியில் நின்று ஒளி பெற்றார். சுருங்கக் கூறின் அவர்,

> "சுடச்சுடப் பொன்போல் ஒளிவிடுந் துன்பம்
> சுடச்சுட நோக்கிற் பவர்க்கு"

எனுங்குறளுக்கு இலக்காக வாழ்ந்து உயர்ந்து ஓங்கிப் புகழ் பெற்றார்; மக்களின் உள்ளங்களையும் கொள்ளை கொண்டார்.

அவர் இறந்த முறை உலகத்தையே கலக்கி விட்டது. பலர் பல காரணங்களைக் கூறினார்கள். பெர்னாட்சா என்னும் அறிஞர் "இந்த உலகத்தில் மிக நல்லவராக இருப்பது பெரிய ஆபத்துக்கிடமானது." என்பதை அவரது இறப்புக் குறிக்கிறது என்றார். ஆனல், காந்தியடிகளுடைய வாழ்க்கை மாத்திரமன்றி அவருடைய இறப்பும் வள்ளுவர் குறளுக்கும் இலக்கியமாகவே விளங்குகிறது. எந்தச் சாவினை இரந்து வரவேற்க வேண்டுமென்று வள்ளுவர் கூறினாரோ அந்தச் சாவினைக் காந்திஅடிகள் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பிற் சாக்காடும்
இரந்து கோட்டக்க துடைத்து" என்பது குறள்.

நிலையாமையினையே பெருமையாகக் கொண்ட இந்த உலகத்தில் அழியாது நிலைத்து நிற்பது யாதென்னும் ஆராய்ச்சியில் திருவள்ளுவர் ஈடு பட்டார்.

"ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதென் றில்"

என்று கண்டார். திருவள்ளுவர் புகழ் போலக் காந்தியடிகள் புகழும் என்றும் நிலைத்து நிற்கும்.

எப்படிப் பட்டவர்களை உலகத்தார் தொழு தேத்துவார்கள் என்பதை வள்ளுவர் மூன்று குறள் களிலே புலப்படுத்தியுளர்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்".

"தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்".

"இளிவரின் வாழாத மான முடையார்
ஒளிதொழு தேத்து முலகு".

இவற்றில் கூறப்படும் இயல்புகளை எல்லாம் காந்தியடிகள் கொண்டு இலங்கினார். ஆதலினால் வள்ளுவரைப் போலவே உலகம் அவரையும் என்றும் மக்களுள் ஒரு தெய்வமாக மதித்துக் கொண்டாடும்.

போரினாலும் பூசல்களினாலும் கலக்கம் அடையும் இந்த உலகத்திலே அறம் வளர்ந்து, அன்பு பெருகி, அருள் மலர்ந்து, இன்பமோங்க வேண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மெனின் காந்தியடிகளை இலக்கியமாகக் கொண்டு இலங்கும் திருக்குறள் வகுக்கும் வழியிலே மக்கள் வாழ்வு செல்லவேண்டும். இதற்குத் திருக்குறளின் அருமை பெருமைகளை உகைத்து மக்கள் யாவரும் அறிதல் இன்றியமையாதது. ஆகவே மக்கள் யாவரையும் திருக்குறளில் ஈடுபடச் செய்தல் எல்லோரும் இன்புற்றிருத்தலைக் குறிக்கோளாகக் கொண்ட தமிழகத்தின் கடனாகும்.

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF PERADENIYA
18-7-2001
LIBRARY

# அம்பும் வேலும்

தாம் கூறும் உண்மைகளை மக்கள் உள்ளத்திலே பதியச் செய்தற்குத் திருவள்ளுவர் பல உத்திகளைக் கையாண்டுளர். இவற்றுள் ஒன்று உடன்பாட்டு வாயிலாகவும் எதிர்மறை வாயிலாகவும் விளக்குதல். கல்வி எனும் அதிகாரம் உடன்பாட்டு முகத்தாலும் கல்லாமை எனும் அதிகாரம் எதிர்மறை முகத்தாலும் கல்வியின் சிறப்பை உரைக்கின்றன.

ஒன்றின் சிறப்பினையோ இழிவினையோ வற்புறுத்திக் கூறுதற்கு ''சிறப்பினுள் சிறப்பு'', ''இழிவினுள் இழிவு'' என்று அவர் கூறும் பாங்கும் விதந்துரைக்கத்தக்கது. ''செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்'', ''இன்மையுளின்மை விருந்தோரால்'', ''வன்மையுள் வன்மை மடவார்ப்பொறை'', அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்'', அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்'', ''இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின்'' முதலியன காண்க.

சில கருத்துக்களை வற்புறுத்துதற்கு ஒரு சொல்லை அடுத்தடுத்தும் ஆண்டுளர்.

''பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இக்குறளில் பொய்யாமை, செய்யாமை என்பன இரு முறை வந்துள.

உவமை, உருவகம், ஏது, வேற்றுமை போன்ற அணிகளினையும் அவர் கையாண்டுளர். அவர் எடுத்துக்காட்டிய உவமைகளிலே பல யாவரும் நன்கு அறிந்தனவும், நெஞ்சில் நிலைத்து நிற்கத்தக்கனவு மாகும். "உடுக்கை இழநதவன் கை", "தலையினிழிந்த மயிர்", "கனியிருப்பக் காய் கவர்தல்", நிழல் ஒருவரின் அடியைவிட்டு நீங்காமை", "பசுத்தோல் போர்த்த புலி", "அகழ்வாரைத் தாங்கும் நிலம்", "எரிமுன்னர் வைக்கோல்" முதலியன அவர் எடுத் தமைத்த நூற்றுக்கு மேற்பட்ட உவமைகளுள்ளே சிலவாகும்.

ஓர் உண்மையை விளக்குதற்கு அதனைப் போன்ற ஓர் உண்மையை உவமையாக அவர் எடுத்துக்காட்டு வதும் குறிப்பிடத்தக்கது.

"இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்"

இக்குறள் பொருத்தமான உணவை அளவறிந்து குறைவாக உண்பவனிடத்து இன்பம் நீங்காது நிலைப்பது போல, உணவை மிகுதியாக உண்பவ னிடத்து நோய் நீங்காது நிற்கும் என்று கூறுகிறது. குறைய உண்பதால் ஆகும் பயனை மிகுதியாக உண்ப தால் வரும் கேட்டுக்கு உவமையாகக் கூறி இரண்டு உண்மைகளை நிலைநாட்டுகிறார் அவர்.

இவற்றுடன் பிறிது மொழிதல் எனும் அணியை யும் வள்ளுவர் எடுத்தாண்டு சிறந்த கருத்துக்களை வழங்கியிருப்பது படிக்கப் படிக்க உள்ளத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிணிக்கத்தக்கது. பிறிது மொழிதலை நுவலா நுவற்சி எனவும் ஒட்டு எனவுங் கூறுவர்.

ஒரு கருத்தை நிலைநாட்டுதற்கு அதனோடொத்த வேறொரு கருத்தை மட்டும் கூறுதல் பிறிது மொழிதலாகும். உவமானத்தை மட்டும் கூறி விளக்குவதால் அதனைப் படிப்போர் உவமேயத்தை அறிந்து கொள்ளலாம். ஓர் உவமானம் பல்வகை உவமேயங்களை உருவாக்குதற்கு வழிப்படுத்துவது இந்த அணியின் தனிச் சிறப்பாகும். ஆராய்வோரின் அறிவெல்லைக் கேற்பவும், அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கேற்பவும் பற்பல கருத்துக்களை உருவாக்கத்தக்க முறையில் இந்த அணியினைத் திருவள்ளுவர் கையாண்டுள்ள திறப்பாடு ஈடிணையற்றது. இந்த அணியைக் கொண்ட குறள்களை நோக்குவோம்.

வாழ்வில் சிறிய பயனைப் பெற்று அமைவதா? பெரும்பயனை உடனே பெறமுடியாவிடினும், தோல்வி நேரிடினும் பெரும்பயனுக்காகத் தொடர்ந்து முயலுதலா? ஒருவன் செய்ய வேண்டியது.

அரசியல் உரிமைபெற-விடுதலைபெறப் போராடுபவர்கள் போராட்டங்களில் எண்ணியதைப் பெற முடியாமல், தளர்ச்சி அடையும் நிலையில் சில சலுகைகளைப் பெற்று அமைதி அடைவதா? சலுகைகளைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து உரிமையைப் பெறும் வரை போராடுவதா? உரிமைப் போராட்ட வீரருக்கு உரிய வழி எது?

தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்குப் போராடும் பொழுது-போராட்டத்தில் தளர்ச்சி உண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

டாகும் பொழுது தொழில் கொள்வோர் கொடுக்கும் சில சலுகைகளைப் பெற்றுப் போராட்டத்தைக் கைவிடுவதா? உரிமைகளைப் பெறும் வரை தோல்விகளுக்கு ஈடுகொடுத்து உறுதி குலையாமல் தொடர்ந்து போராடுவதா?

வாழ்க்கையில் இத்தகைய நிலைமைகளும் நெருக்கடிகளும், தோன்றும் போது வள்ளுவர் வழி காட்டுகிறார். நேராக வழி கூறாமல் அம்பையும் வேலையும் உதாரணமாகக் காட்டி, முயலையும் யானையையும் எம் முன்னே நிறுத்தி விளக்குகிறார். இவ்வாறு உதாரணத்தால் மட்டும் அடிப்படை உண்மைகளை விளக்குதலே பிறிது மொழிதல் அணியாகும்.

வள்ளுவர் அம்பு கூடாது, வேல் நல்லது என்கின்றார்;சிறு வெற்றி வேண்டாம் பெரியஇலக்குத்தவறிய தோல்வி நல்லது என்கின்றார்; சலுகைகள் வேண்டாம்; உரிமைப் போராட்டத் தோல்வியை வரவேற்குமாறு அறிவுரை பகர்கின்றார். சலுகை வேட்டை முயல் வேட்டை போன்றது; உரிமை வேட்டை, யானை வேட்டை போன்றது. காட்டிலே ஓடுகின்ற முயலை எய்த அம்பிலும் வெளியிடத்தில் தோன்றிய யானைக்கு எறிந்து குறி தவறிய வேலை ஏந்தல் இனியது என்கிறார்.

பயந்து ஓடும் முயலைக் கொல்வதிலும் எதிர்த்து வந்த யானையை விழுத்த முயல்வதுதான் பெரு வெற்றி. முயலைப் பதுங்கி நின்று எய்வதிலும் யானையை நேருக்கு நேர் எதிர்த்து வேல் எறிந்து தாக்குவதுதான் உண்மையான வீரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"கானமுயல் எய்த அம்பினில் யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது"

என்பது வள்ளுவர் கூற்று.

மாங்காய் பிடுங்குதற்கு மாமரத்திலேறுவது வழக்கம். களவாகப்பிடுங்க முயலும் இளைஞர்கள் விரைவில் மாமரத்தின் கொம்புகளுக்கும் ஏறிப்பிடுங்குவர். இப்படிப்பிடுங்குவோர் ஊக்க மிகுதியால் தம்மைத் தாங்க முடியாத கொம்பின் நுனிக்கு ஏறினால் கொம்பின் நுனி முறிந்து அவர்களும் விழுந்து ஊறடைவர்; உயிரையும் இழத்தல் கூடும்.

இஃது எல்லோர்க்கும் தெரிந்த செய்தி இதனைத் தமிழ்மறை,

"நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்" என்று கூறுகிறது.

இதனால் வள்ளுவர் பல உண்மைகளைப் புலப்படுத்துகிறார். பகைவரை வெல்லக்கருதி எதிர்க்கும் ஒருவரோ, வணிகத்துறையிலீடுபட்ட ஒருவரோ, இத்தகைய பல்வேறு துறைகளில் ஈடுபட்டவர்களோ தம் வலிமையின் அளவுக்கு மிஞ்சிச் செயற்பட்டால் அழிவையே அடைவர் என்பதை வலியுறுத்தி மக்களைத் தெருட்டுகிறார்.

நீர் நிலைகளில் முதலையின் வாயில் சிக்கின எவ்வகை உயிரும் மீளல் முடியாது. மலைபோன்ற பெரிய யானைகளையும் அஃது இழுத்துச் செல்லும் ஆற்றலுடையது. நீரில் அதற்குரிய ஆற்றல் நிலத்தில் அதனிலும் ஆற்றல் மிக்க எவற்றையும் நீர் நிலைகளில் வெல்லத்தக்கது. எனினும், இந்த முதலை நீரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விட்டு நிலத்துக்கு வந்து விட்டால்-தன் இருப் பிடத்தை விட்டுப் பிறவற்றின் இருப்பிடத்துக்கு வந்து விட்டால்-அதனைச் சிறிய விலங்குகளும் வென்றுவிடும். இந்தச் செய்தியை

"நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலின்
நீங்கி னதனைப் பிற".

எனும் குறள் எடுத்துரைக்கிறது. தமக்குரிய இடத் திலேதான் மக்களுக்கு வலிமை மிகுதியாக உண்டு. பிற இடத்திலே வலிமை பெற முடியாது. எனவே, வினை செய்வோர் தமக்கு ஆற்றல் மிகவுள்ள-பெருஞ் செல் வாக்குள்ள இடத்தில் தம் தொழில்களைச் செய்தல் வேண்டும். பிறருக்குவலிமையுள்ளஇடத்திற்குப்போய்ச் செய்தல் கூடாது. மோதி முட்டிப் போட்டியிட்டுச் செய்யும் பணிகளிலீடுபட்டோர் இந்த உண்மையை நன்கு உளங்கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் விரும்புகிறார். "தன் நிலத்தினில் குறுமுயல் யானை யிலும் வலியது" என்றொரு பழமொழி உண்டென வில்லிபுத்தூரார் கூறுவதையும் நோக்குக.

மக்கள் தாம்செய்யும் தொழில்களில் வெற்றி யீட்டுதற்குரிய வழி வகைகளை வற்புறுத்தும் வள்ளுவர் பெருமான் தமக்கு வெற்றி வாய்ப்புள்ள- செல்வாக்குள்ள இடத்தில் தொழில் செய்ய வேண்டு மென்று கூறியதோடமையாது இடம் நல்ல தெனி னும் பொருத்தமான கருவிகளைக் கொண்டு முயற்சி யினை மேற்கொள்ளவேண்டும் என்பதையும் எடுத் துக் காட்டுகிறார். எல்லோரும் நன்கு அறிந்த உதாரணத்தைக்காட்டி இதனை விளக்குகிறார். பேருந்தில் ஏறி ஓரிடத்திலிருந்து வீதி வழியால் வேறோரிடத்துக்குச் செல்லலாம். ஆனல் இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பேருந்தில் ஏறிக் கடலைக் கடந்து செல்ல முடியாது. இதைப் போலவே கடலைக் கடக்க உதவும் விசைப் படகில் நிலத்தில் பயணஞ் செய்ய முடியாது. வள்ளுவர் காலத்தில் பேருந்து ஓடவில்லை. அக்காலத் தில் நில ஊர்திகளில் தேர் தான் பெருமை மிக்கது. எனவே, அவர் அக்காலத்திலுள்ள தேரையும் மரக் கலத்தையும் உதாரணமாகக் காட்டியிருக்கிறார்.

**''கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடும்**
**நாவாயு மோடா நிலத்து''.**

பெருமையும் வீரமும் உள்ளவர்களும் தகாத இடத்துக்குச் சென்று சிக்கிக் கொண்டால் எளியவ ரால் அழிக்கப்பட்டுவிடுவர். அவர்களுடைய ஆண்மை யும் ஆற்றலும் பயனற்றுப் போய்விடும். நிலம் நீர் போன்ற வேறுபாடுடைய இடங்களில் மட்டுமன்றி நிலத்திலும் பொருத்த மில்லாத இடத்துக்குள் சென்று விட்டால் அழிவு உண்டாகும். இதனை வன் நிலத்தில் யானையைக் கண்டால் அஞ்சி ஓடும் நரி, கால்கள் புதையத்தக்க சேற்று நிலத்தில் யானை அகப்பட்டுக் கொண்டால் அதனைக் கொல்லும் என்பதை உதாரணமாகக் காட்டி வள்ளுவர் நிலை நாட்டுகிறார்.

**''காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா**
**வேலான் முகத்த களிறு.''**

எவ்வளவு பெரியவரும் சில இடங்களில் மாட்டிக் கொண்டால் சிறியவரால் அழிக்கப்படுவர் என் பதனை நன்கு விளக்குதற்கு யானையின் பெரு மையை வள்ளுவர் இக்குறளில் நன்கு விரித்துரைத் துளர். அவர் காட்டும் யானை பாகருக்குப்பயப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

படாதது; வேலை ஏந்திய வீரர்களைத் தன் கொம்பு களிலே கோத்துளது.

யானையையும் நரியையும் காட்டி மக்களை வெற்றியுடன் வாழுதற்கு வழிப்படுத்திய வள்ளுவர் பெருமான் யானையையும் புலியையும் நம்முன் நிறுத்தி ஒரு பேருண்மையை நம் உள்ளத்திற் பதியச் செய்கிறார்.

விலங்குகளில் பெரியதும் வலிமைமிக்கதும் யானை என்பதை யாவரும் அறிவர். சிங்கம் புலி முதலிய மிருகங்களுக்கில்லாத கூரிய வலிய கொம்புகளும் யானைக்குண்டு. அன்றியும் பல அம்புகளால் புண்பட்ட பொழுதும் யானை தன் பெருமையை நிலைநிறுத்தும் ஆற்றல் உடையது என்றும் வள்ளுவர் கூறுகின்றார். எனினும், இத்தகைய பெருமையுடைய யானையும் அதனிலும் சிறிய புலி தாக்கினால் அஞ்சும் என்கிறார் அவர்.

"பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்"

என்பது அவருடைய வாய்மொழி.

புலிக்கு யானை அஞ்சுவதற்குரிய காரணம் என்ன? புலியிடத்துள்ள ஊக்கம்-மனஎழுச்சி-மான உணர்ச்சி-மெலிவில் உள்ளம் என்பன யானைக் கில்லை. புலியின் மானஉணர்ச்சியும் ஊக்கமுமே யானையை அச்சம் அடையச் செய்கின்றன. புலியைக் கனவிலே கண்டு யானை அஞ்சுகிறதெனக் கலித் தொகை கூறுகிறது. வேங்கைப் பூக்கள் நிறைந்த பாறையைக் கண்ட யானை அதனைப் புலி என எண்ணிப் பெரிதும் அஞ்சுகிறது எனத் திருக் கோவையார் உரைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புலியின் மான உணர்ச்சியையும் மெலிவில் உள்ளத்தையும் புறநானூற்றுப்பாடல் ஒன்று விளக்குகின்றது. சோழன் நல்லுருத்திரன் எலிபோன்று ஊக்கமில்லாதவர் நட்பு வேண்டாம், புலி போன்ற மெலிவில் உள்ளத்துரனுடையாளர் கேண்மை வேண்டுமென்று இப்பாடலிற் சுட்டிக் காட்டுகிறான்.

பசி மிகுந்த புலி உணவைத் தேடிச்சென்று ஒரு பன்றியைக் கொன்றது. பன்றி புலியின் இடப்பக்கத்தில் விழுந்து விட்டது. இடப்பக்கத்தில் விழுந்ததைப் புலி உண்ணாது. இதனால் அப்புலி அன்று பசியுடன் கிடந்து விட்டு அடுத்த நாள் உணவுக்காக ஒரு யானையை வலப்பக்கத்தில் விழுத்தியது. என்று அப்பாடல் கூறுகிறது. புலியின் உள்ள உறுதியையும் மான உணர்வையும் விளக்கும் பழமொழிகளும் பல உள. ''புசி பசித்தாலும் புல்லைத் தின்னாது'' எனும் பழமொழியைப் பலர் அறிவர்.

வள்ளுவர் பெருமான் மக்கள் வாழ்வின் உயர்வுக்கு ஊக்கமே-மனஎழுச்சியே-இன்றியமையாதது எனப் பல குறள்களில் வற்புறுத்துகின்றார். பெருமை, வலிமை, செல்வம், ஆளணி மிக உடையவரும் ஊக்கம் இல்லாதவராயிருப்பின் இவற்றைக் குறைவாக உடையவரெனினும் ஊக்கத்தை மிகுதியாகப் பெற்றவரால் அடக்கப்படுவார், தோல்வியைத் தழுவுவார், என்பதை நன்கு உணர்த்துதற்கே யானையினையும் புலியினையும் பற்றிய செய்தியை உரைத்தார்.

> ''ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
> நாகு முயிர்ப்பக் கெடும்''

இந்தக் குறள் எலிக்கூட்டம் கடல் போல் ஆரவாரித்தால் எதைச் செய்துவிடும்? பாம்பு மூச்சு விட்டவுடன் அவை ஓடிவிடும் என்று உரைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆற்றலில்லாத பகைவர்களின் தொகைகண்டு ஆற்றல் மிக்கவன் அஞ்ச வேண்டியதில்லை. அவன் ஊக்கத்துடன் கிளம்பினால் பகைவர் கெடுவர். இக்குறள் போர்க்களத்துக்கும், அரசியற் களத்துக்கும், வாழ்க்கைக் களத்துக்கும் இசைந்தது.

மயிற் பீலி பஞ்சைப் போலப் பாரம் குறைந்தது. அதனை அளவுக்கு மிஞ்சி வண்டியில் ஏற்றினால் அந்த வண்டியின் அச்சு முறிந்துவிடும் என்று மட்டும் வள்ளுவர் கூறி அமைக்கின்றார்; எனினும், இதனால் ஒவ்வொரு துறையிலும் முயல்பவர்களைச் சிந்திக்கச் செய்கிறார். எதனையும் சிறியது—வலிமையற்றது—நொய்மை உடையது என்று கருதித் தாங்கும் அளவுக்கு மேல் அவற்றின் தொகையைக் கட்டிச் சுமந்தால் அழிவுக்கு வழிகோலும்; தோல்வியைத் தழுவச் செய்யும். வலிமையுடையோரும் வலிமை குறைந்தோர் பெருந்தொகையினராகக்கூடித் தாக்கினால் பெரிதும் பாதிக்கப்படுவர்.

"பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்."

முள்ளுடைய மரத்தை முளைத்தவுடனேயே அழித்து விடல் வேண்டும். அவ்வாறு செய்யாது நன்கு முதிர்ந்த பின் அதனைக் களைதல் பேரிடர்ப்பாட்டை உண்டாக்கும். அதனைக் களைய முயல்வோர் கையையும் அது காயப்படுத்தும் என்று அறிவுரை பகர்கின்றார் வள்ளுவர்.

"இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து". என்பது அவருடைய அறிவுரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

''முதிர்ந்த நிலைமைக்கட் களையலுறின், களை களைவார் கையினை அதுதான் களையும்'' எனப் பரிமேலழகர் அழகாக விளக்குகிறார். இதனால் தீமை விளைப்பவற்றை எல்லாம் முளையிலே கிள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. மக்கள் இடர்ப்பாடின்றி வாழுதற்குப் பகைவர்களை மட்டு மன்றி எதிர்ப்புக்கள், கிளர்ச்சிகள், போராட்டங்கள், மோதல்கள், முரண்பாடுகள், பிளவுகள், கருத்து வேற்றுமைகள், தீய பழக்கங்கள் முதலியனவற்றை எல்லாம் அரும்பியவுடன் அழித்து விடலோ அடக்கி விடலோ ஒழித்து விடலோ இன்றியமையாதது என்பது இந்தக் குறளில் உதாரணத்தால் விளக்கப் பட்டுளது.

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சம உடைமைக்கு வழி

''பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை'' என்று வள்ளுவர் பெருமான் பொருளுக்கும் வாழ்வுக்குமுள்ள தொடர்பை மிக நுட்பமாக விளக்குகிறார். பெற்ற தாயுங் கூட வறுமையுடைய தன் மகனைப் பிறன் போல நோக்குவாள் என்றுரைத்து, வறுமை குடும்பத்தில்—சமுதாயத்தில் இழைக்கும் கொடுமையை அவர் எடுத்துக் காட்டுகிறார்.

இன்று உலகிலே காணப்படும் போட்டிகளுக்கும் பூசல்களுக்கும் பொருளாதாரமே காரணமாகும். பொருளாதாரக் கொள்கையே உலகத்தைப் பிளவு படுத்திப் போரிடச் செய்கிறது. பொருளாதாரக் கொள்கையில்அமெரிக்காவுக்கும் உருசியாவுக்குமுள்ள வேறுபாடே உலகத்தை அழிக்கும் போர்க்கருவிகளை அளவின்றிப் பெருகச் செய்கிறது. கிழக்கு—மேற்கு, பொதுவுடமை—தனியுடைமை என்றெல்லாம் பிரிந்து மோதச் செய்கிறது.

குடும்பங்களில் உயர்ந்தவர்—தாழ்ந்தவர் என்றும், சமுதாயத்தில் முதலாளி—தொழிலாளி, செல்வர்—வறியவர் என்றும் பல கட்சிப் பிளவுகள் பொருளாதாரத்தினாலே உண்டாகின்றன. ஒழுங்கும் அமைதியுமில்லாத ஒரு கொந்தளிப்பான நிலைமையைப் பொருளாதாரம் உலகமெங்கும் உருவாக்கியுளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்த நிலைமையை மாற்றுதற்குப் பொருளாதார வல்லுநர்கள் பல வழிகளை வகுக்கின்றனர். "தனியுடைமை ஒழிய வேண்டும், சமஉடைமை யேனும், பொதுஉடைமையேனும் நிலைக்கவேண்டும், அரசியற் சட்டத்தாலேனும் சமஉடைமையை உண்டாக்கல் வேண்டும்" என்கின்றனர். இவ்வாறு சட்டத்தாற் சமஉடைமையை உண்டாக்கி நிலைக்கச் செய்ய முடியுமா என்பதை முதலில் நோக்குவோம்.

நிலம் இல்லாத இருவருக்கு அரசு ஓரளவான நிலத்தையும் அதைப் பயிரிடுவதற்கு வேண்டிய உதவி களையும் அளிக்கலாம். ஆனால் அந்த நிலத்திலிருந்து பயன் பெறுவது அவ்விருவருடைய முயற்சியையே பொறுத்துளது. நன்கு முயல்பவர் கூடிய பயனையும், அவ்வாறு முயலாதவர் குறைந்த பயனையும் பெறு வர். எனவே, சமமான நிலப்பரப்பையும், ஒருதன்மை யான உதவியையும் பெற்றாலும் அவற்றாற் பெறும் பயன் ஒருவருடைய முயற்சியினளவாகவே இருக்கும். போதிய முயற்சி செய்யவில்லை என்பதற்காக ஒருவரை அரசாங்கம் தண்டித்தல் முடியாது. போதிய முயற்சி செய்தாலும் பயிர் விளைவு மக்களாற்றடுக்க முடியாத பல காரணங்களால் பாதிக்கப்படும்.

இவ்விருவருள்ளும் பாடுபட்டு உழைப்பவர் சில ஆண்டுகளிலே, தம்மைப்போல் உழையாதவரிலும் பொருள் வளம் மிக்கவராகி விடுவார். இவருடைய பண நிலைமை மற்றவரிலும் பார்க்க மிகுவதால் இவ்விருவருடைய பொருளாதார நிலைமையிலும் வேறுபாடு உண்டாகி விடும். இந்த வேறுபாட்டை நீக்குதற்கு அரசு முயன்றால் பாடுபட்டு உழைப்பவர் தம்முடைய உழைப்பைக் குறைத்துவிடுவார். எனவே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சட்டத்தாற் சமவுடைமையை நிலைநாட்டல் முடியாது.

தனியுடைமையும் சமுதாய வாழ்வுக்கு உகந்த தன்று. வாய்ப்புக்கள் சில உடையவர்கள் தம் பொருளைப் பெருக்கித் தம்வாழ்வை வளப்படுத்து கின்றனர். அவ்வாய்ப்புக்கள் கிடைக்காதவர்கள் அடிமைகளைப் போலச் செல்வர்களுக்கு அல்லும் பகலும் உழைத்து வயிறு வளர்க்க வேண்டிய நிலைமை உண்டாகிறது. தொழிலுக்கு ஏற்ப ஊதியம் இவர் களுக்குக் கிடைப்பது அரிது. எவ்வித பாடும் படாமல் முதலாளிகளும், நில உரிமையாளர்களும் இவர்களைச் சுரண்டிப் பொருளைக் குவிக்கிறார்கள். இதனாற் சமுதாயத்தில் போட்டி பொறாமைகள் உண்டாகின் றன. முதலாளிகளை மட்டந்தட்ட முற்பட்டால் பொருளுற்பத்தி குறைகிறது. தொழிலாளர்களுக்குப் போதிய ஊதியங்கொடுக்குமாறு கட்டாயப்படுத்தி னாலும் இருசாராருக்குமிடையில் உள்ள வேறு பாட்டை இலகுவில் நீக்குதல் முடியாது.

பொருளீட்டுதல் பொதுவாகஒவ்வொருவருடைய முயற்சியையும் செலவிடும் முறையையும் பொறுத் துளது. எனவே, உலகிலே சமவுடைமையை எப்படி உண்டாக்கலாம்? முயற்சியுடையவர்களைக் கட்டுப் படுத்தாமலும், தொழிலாளிகளைக் கைவிடாமலும் நன்முறையிற் சமத்துவத்தை எவ்வாறு உண்டாக் கலாம்?

இதற்குத் திருவள்ளுவர் வழி வகுத்துளர். ''எல் லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கம்பர் கருதும் நிலைமை உண்டாதற்கு உரிய வழி அது.

பொருளை ஈட்டுபவர்கள் தாம் நுகர்வதற்கும், தொகுத்து வைத்துத் தம் பிள்ளைகளுக்குக் கொடுப்பதற்குமே இக்காலத்தில் முயல்கின்றனர். இந்த நோக்கந்தான் பொருளாதாரத் துறையில் பெரும் மோதல்களை உண்டாக்குகிறது. இந்த நோக்கத்திலே மாற்றம் உண்டாதல் வேண்டும். பொருளைத் தேடுதல் பிறருக்குக்கொடுத்தற்குமே என்றகொள்கை நிலைக்கவேண்டும்; பாராட்டும் பெறல்வேண்டும்.

உலகில் வாழுதற்கு யாவருக்கும் பொருள் வேண்டும். எனவே பொருள் உள்ளவர்கள் தாமும் வாழ்ந்து பிறரையும் தம்முடைய பொருளால் வாழச் செய்தல் வேண்டும். பொருளற்றவர்களுக்குக் கொடுத்தல் தங்கள் கடன் என்று கொள்ளல் வேண்டும். முயற்சியாலே ஈட்டும் பொருள் யாவும் தகுதியானவர்களுக்கு உபகாரஞ் செய்தற்குரியன என வள்ளுவர் பெருமான் கூறுகிறார்.

''தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு''

"ஈதற்குச் செய்க பொருளை" எனப் புறநானூறு கூறுகிறது.

திருக்குறளை மேலோட்டமாகப் படிக்கிறவர்களுக்குங் கொடை அறத்தின் சிறப்பு நன்குவிளங்கும். ''கொடு, கொடு'', ''வைத்து இழக்காதே'', ''பகுத்து உண்டு வாழ்'', ''கொடுத்துவக்கும் இன்பம் பெரிது'', ''பயன் கருதாமற் கொடு'',மேலுலகம் இல்லை என்றாலும் கொடு''—இவ்வாறு பல வழிகளிற் கொடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறத்தை வள்ளுவர் வலியுறுத்துகின்றார். கொடுக்க முடியாதவர்கள் இறந்து விடுதல் நன்று என்கிறார் அவர்.

''சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை''.

இவ்வாறு பொருள் உள்ளவர்களைக் ''கொடு,கொடு'', என்றால் இரப்போர்—முயற்சியின்றிப் பிறர் உழைப்பில் வாழ்வோர் — பெருகிவிடுவார்கள் என்பதை வள்ளுவர் அறியாதவர் அல்லர். இதனாலேயே அவர் ''இரக்காதே'',''இரந்து உயிர் வாழாதே'' என்றும் அறிவுரை கூறினார்.

''ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.''

என உள்ளத்தைத்தொடத்தக்க முறையில்இரத்தலின் இழிவை எடுத்துக் காட்டினார்.

''இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.'' எனுங் குறளில்

இரந்து உயிர் வாழும் நிலைமையை உருவாக்குதற்குப் பொறுப்பானவர்கள் கெட்டுப் போவார்களாக என அவர் கடுஞ்சொற் கூறுவதன்நோக்கத்தை நன்கு சிந்திக்க வேண்டும்.

சோம்பித் திரிந்து இரந்துண்ணாமல் மக்கள் உழைத்துண்ண வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறியுளர். தனது முயற்சியால் கிடைத்தது நீர் மிகுந்த கூழாயினும் அதனை உண்ணுதலினும் மிகுந்த இனிமையுடையது பிறிதில்லை என்று கூறும் குறளையும் நோக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில்."

இந்த இருவகையான அறிவுரைகளிலும் ஒரு பெரும் முரண்பாடு தோன்றுகிறது. செல்வர்களைக் "கொடு, கொடு" என்று கட்டளையிட்டுக் கொண்டு, வறியவர்களை "இரக்காதே, இரக்காதே" என்று கூறுவதால் என்ன பயன்?

"நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று".

எனும் குறளும் இதைத்தானே கூறுகிறது.

ஈவதற்கு இரப்பவர்கள் வேண்டுமன்றோ எனின் கொடுப்பவர்களும் இரப்பவர்களும் இல்லாத சமவுடைமையை உண்டாக்குதலே இதன் நோக்கம் என்க. இச்சமவுடைமையைக் கம்பர் "வண்மை இல்லை ஓர் வறுமையின்மையால்" என அழகாகப் புலப்படுத்தினார்.

மக்களிடத்திற் கொடுக்கும் மனப்பான்மை குறைவு. அதைக் கூட்டவும் இரக்கும் மனப்பான்மை மிகுதியாயுளதாகையால் அதனைக் குறைக்கவும் வள்ளுவர் எண்ணினார்.

பொருளுள்ளவர்கள் பொருளற்றவர்களுக்குக் கொடுக்கவும், பொருளற்றவர்கள் தம்முயற்சியால் பொருள்தேடவும் வேண்டும் என்பதே இதன் முடிந்த முடிபு. பொருள் உள்ளவர்களிடத்துக் கொடுக்கும் மனப்பான்மையும், பொருளற்றவர்களிடத்து முயன்று பொருளீட்டும் மனப்பான்மையும் உண்டானால் சமவுடைமை தானாகவே உண்டாகும்; சமுதாயம் நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிலை அடையும். சட்டத்தாற் சமவுடைமையை உண்டாக்காமல் மனமாற்றத்தாற் சமஉடைமையை உண்டாக்கும் வழி இதுவே.

இதனையே வினோபா அடிகளாரும் தம்முடைய ''பூதான'' இயக்கத்தால் உலகுக்கு விளக்கினார். நிலைத்த அமைதியும் வறுமையில்லாத வாழ்வும் தோன்றுதற்கு மக்களுடைய எண்ணத்திலே ஒரு பெருந் திருப்பம் ஏற்படல் வேண்டும். ''இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்'' என்ற கணிப்புக்கு மதிப்பு மலர வேண்டும். இவற்றை உண்டாக்கும் முறையிலே சமுதாயச் சீர்திருத்தம் தோன்றல் வேண்டும். அப்பொழுது தான்

> ''எல்லாரும் எல்லாப் பெருஞ்
> செல்வமு மெய்தலாலே
> இல்லாரும் இல்லை, உடையார்களுமில்லை''

எனும் நிலைமை உண்டாகும்; சமஉடைமையை அடையும் வழியிலே சமுதாயம் அடிஎடுத்துவைக்கும். இது தான் காந்தியடிகள் விளக்கிய இராம இராச்சியத் துக்குத் திறவுகோல். ''ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது ஊதியமில்லை உயிர்க்கு'' எனுந் தமிழ்மறை யின் உட்கோள்.

சமஉடைமை மலர்ந்தால் சமவாழ்வு நிலைக்கும். சமஉடைமையை-சமவாழ்வை உண்டாக்கும் முயற்சி மக்கள் வாழ்வின் தரத்தை உயர்த்த வேண்டும். எவ் வகையிலும் வாழ்வின் தரத்தைக் குறைத்துச் சம உடைமையை உண்டாக்கமுயலுதல் கூடாது. செழிப் பில் சம உடைமையை உண்டாக்க வேண்டும். வறுமை யில் சம உடைமையை உண்டாக்கப்படாது. இதனா லேயே கம்பரும் எல்லோரும் எல்லாப் பெருஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செல்வமும் எய்தினதால்'' சமஉடைமையும், சம வாழ்வும்தோன்றும் என்கிறார்.

மக்களை ஆண்டிகளாக்காது அரசர்களாக ஆக்கு வதே சமஉடைமையின் நோக்க மாயிருத்தல் இன்றி யமையாதது. இதனையே பாரதியாரும் வலியுறுத்தி யுளர்.

''எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை, எல்லாரும் இந்நாட்டு மன்னர்'' எனவும் "எல்லாரும் அமர நிலை எய்தும் நன்முறை'' எனவும் அவர் கூறுவன குறிப்பிடத்தக்கன.

பறித்துக் கொடுக்காமல், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே நூல்கள் கூறும் அறங்களுள் எல்லாம் தலை யானது என்ற வள்ளுவர் வாய்மொழி என்றும் எங்கள் உள்ளத்தில் நிலைபெறல் வேண்டும்.

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை''.

பகுத்துண்ணல், அறங்களுள்ளே தலையானது மட்டு மன்றி, காதலிருவர் கருத்தொன்றி ஆதரவுபட்டு நுகரும் காதலின்பத்துக்கு உவமையாகக் கூறத்தக்க இன்பம் பயப்பது என்பதையும் வள்ளுவர் பின்வரும் குறளிலே விளக்கியிருப்பது எண்ணி எண்ணி மகிழத் தக்கது.

''தம்மில் லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.''

□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கனியும் கருக்காயும்

திருக்குறள் காமத்துப்பாலில் இருநூற்றைம்பது குறள்களைக் கொண்ட இருபத்தைந்து அதிகாரங்கள் உள. இவை ஏறக்குறைய இரண்டாயிரம் சொற்களைக் கொண்டவை. தலைவன் தலைவியரின் காதல் வாழ்வை இவை சுவைததும்பத் திட்ப நுட்பமாக எடுத்துரைக்கின்றன. ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு காவியமாக மிளிர்கின்றது.

தமிழ் மரபான அன்பினைந்திணை வாழ்வைத் தழுவி, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலிய சங்க நூல்களிலும் பிற்காலத்தில் தோன்றிய திருக்கோவையார், தஞ்சைவாணன்கோவை. முதலிய கோவைப் பிரபந்தங்களிலும், கம்பர் போன்ற பெரும் புலவர்களுடைய காவியங்களிலும் கூறப்படும் காதல் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும், பிற புலவர்களின் கற்பனைக்கு எட்டாதவற்றையும் புதுமையிலும் பொற்பிலும் நுண்மையிலும் குழைத்து வள்ளுவர் பெருமான் ஏழு சீர் கொண்ட-ஏழு எட்டுச் சொற்கள் கொண்ட-குறள் வெண்பாக்களுள் புகுத்திக்காட்டும் திறப்பாடு ஈடிணையற்றது. வள்ளுவர் அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தியிருக்கிறார் என்று ஔவையார் வியந்தார். அந்த அருஞ்செயலை இந்தக் குறள்கள் எல்லோர்க்கும் நன்கு காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காமத்துப்பாலைப்படிக்கும் எந்நாட்டவரும் அதன் கருத்து ஆழத்திலும், நயத்திலும், புதுமையிலும் தம் உள்ளத்தைப் பறிகொடுக்கின்றனர். எவ்வளவு புதுமையான கருத்துக்கள், எத்தகைய நுட்பமான கூற்றுக்கள் என்று வியக்கின்றனர். படிக்கிறவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு என்றும் பசுமையாக உள்ளத்தில் நிலைத்து நிற்கும் புதுமைக்கருத்துக்களை—எக்காலத்தும் எந்நாட்டவருக்கும் பொருத்தமான கூற்றுக்களை — காமத்துப்பாலில் பரக்கக் காணலாம்.

''நோய் நோக்கும் மருந்து நோக்கும்'', ''தன் நோய்க்குத்தானே மருந்து'', ''கண்ணோடு கண்ணிணை ஒத்து நோக்குதல்'', ''வாய்ச் சொற்கள் பயனிலவாதல்'' ''குறுகுங்கால் குளிரும் நீங்கின் சுடும் தீ,'' ''காலை அரும்பிப் பகலில் போதாகி மாலை மலரும் நோய்'', ''உள்ளக்களித்தலும் காண மகிழ்தலும் கள்ளுக்கில்லை காமத்துக்குண்டு,'' ''மலரினும் மெல்லிது காமம்''... இவைபோன்ற கூற்றுக்கள் எல்லோரையும் வியப்படையச் செய்யத்தக்கனவன்றோ!

திருவள்ளுவர் ''ஒருவனுக்கு ஒருத்தி'' ''ஒருத்திக்கு ஒருவன்'' என்ற தமிழ் நெறிக் கொள்கையை எவரும் அசைக்கவோ அழிக்கவோ முடியாமல் நிலைநாட்டியுளர். ''தானே அவள்'' ''அவளே தான்'' என்றாகும் தூய காதல்-தமிழ்க்காதல் தோன்றி வளர்ந்து மலர்ந்து பொலிதற்கு வழிகாட்டியுளர். ''இருதலைப் புள்ளின் ஒருயிராக'' எனப் பரிமேலழகர் கூறுவது போலவும், ''காகத்திரு கண்ணிற் கொன்றே மணிகலந்தாங்குஇருவர் ஆகத்துள்ஒருயிர் கண்டனம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனமாணிக்கவாசகர் கூறுவது போலவும் தலைவனும் தலைவியும் ஈருடற்கு ஓருயிராக வாழும் நிலையை அடைதல் எவ்வாறு என்பதை அவர் விளக்கியிருக்கிறார்.

இந்த நிலையை அடைதற்கு "இருவரும் ஒத்த அன்புடையராய்-உழுவலன்பு உடையராய் இருத்தல் வேண்டும்" என்பதைச் சில குறள்கள் சிறப்பாக விளக்குகின்றன.

தலைவன் தலைவி எனுமிருவரில் ஒருவரிடத்து மட்டும் வேட்கை இருப்பின் அஃது இன்னாதது. காவடியின் இரு பக்கத்திலு முள்ளபாரம் ஒத்திருப்பது போல இருவரிடத்தும் காமம் ஒத்திருந்தால் அஃதே இனியது.

"ஒருதலையான் இன்னாது காமம் காப்போல
இருதலை யானும் இனிது."

காதலர்களின் ஒற்றுமையை விளக்குதற்கு நிலத்துடன் கலந்த மழை நீரை உவமானமாகக் கூறுவது தமிழர் மரபு. "செம்புலப்பெயல் நீர் போல அன்புடை நெஞ்சந்தாங் கலந்தனவே" எனக் குறுந்தொகை கூறுகிறது. இந்த ஒத்த அன்புடை நெஞ்சங்களின் கலப்பைத் தலைவி "நிலத்தொடு நீரியைந் தன்னார்" என்று உரைக்கின்றாள்.

பிரிக்க முடியாத-பிரிந்தால் வாழ முடியாத அன்புதான் காதலர்களிடம் உளது என்பதை வள்ளுவர் உவமை மூலம் காட்டுகின்றார்.

" வாழ்தல் உயிர்க்குஅன்னள் ஆயிழை சாதல்
அதற்கு அன்னள் நீங்குமிடத்து."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்று தலைவன் கூறுவது தலைவியோடு அவனுக் குள்ள பிணைப்பை நன்கு வெளிப்படுத்துகின்றது.

"உடம்போடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையோடு எம்மிடை நட்பு."

ஈருடற்கு ஒருயிராக-உடம்பும் உயிரும் போல வாழும் நிலையை அடைதற்கு ஐயத்துக்கிடமில்லாத, ஒத்த அளவான நிறைந்த அன்பு தலைவனிடத்தும்-தலைவியிடத்தும்-கணவனிடத்தும் மனைவியிடத்தும் உண்டாதல்வேண்டும். காதலரிடையே இந்த அன்பை உண்டாக்குதற்குப் புலவி இன்றியமையாதது. புலவி கலவிஎன்றும், ஊடல் கூடல் என்றும் வழங்கும் தமிழ்ச் சொற்களின் அமைப்பும் புலவிக்கும் கலவிக்குமுள்ள இணைப்பை — ஊடலுக்கும் கூடலுக்குமுள்ள பிணைப்பை-எடுத்துரைக்கின்றது.

இத்தகைய அன்பு இருதலையும் மாசு மறுவற்ற நிலைத்த அன்பாகவும், இருவயின் ஒத்த அன்பாகவும் இருத்தல் வேண்டும், புலவியே தலைவனும் தலைவி யும் கலவியில் முழு இன்பத்தைப் பெறவும், கலவியின் முன்னரும் பின்னரும் ஒத்த அன்புடையராயிருத் தற்கும் வழிப்படுத்துவது. கலவியின் முன்னரும் பின்ன ரும் ஒத்த அன்புடைமையை "இருவயின் ஒத்தல்" என்பர்.

புலவி என்பது தலைவி தலைவனுடன் பிணங்கு தல். இது புணர்வதற்கு முன் நிகழ்வது. இது குறுகிய காலப் பிணக்கு, இஃது ஊடல் எனவும் படும். இதனை இளைய கலாம் என்பர் பரிமேலழகர். துனி என்பது நீண்டகாலப் பிரிவினால் உண்டாகும் பிணக்கு. இதனை முதிர்ந்த கலாம் என்பர் பரிமேலழகர். இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புலவியும் துனியும் காம இன்பத்துக்கு வேண்டியன. துனி இல்லாத புணர்ச்சி அளவுக்கு மிஞ்சிப் பழுத்த பழம் போலச் சுவை கெட்டதாகிவிடும். புலவி இல்லாத புணர்ச்சி பிஞ்சுக்காய் போலச் சுவை இல்லாததாக இருக்கும். இந்த உண்மைகளை வள்ளுவர் அழகாக வரைந்து காட்டுகிறார். மிகப் பழுத்த கனியையும் இளங்காயையும் அவர் உவமை யாகக் காட்டுகிறார்.

"துனியும் புலவியும் இல்ஆயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று"

இந்தக் குறளில் கனி என்பது மிகவும் பழுத்து அழிந்த கனியையும் கருக்காய் இளம் பிஞ்சையும் குறிக்கின்றன.

காமநுகர்ச்சிக்குரிய செவ்வியினை அறிந்து நுகர்தல் இன்றியமையாதது. அழிந்த பழம் சுவைக்காது; கனியாயிருந்து சுவை கெட்டது. இதனைப்போலக் காம நுகர்ச்சிக்குக் காலம் போனால்—செவ்வி கடந்தால்—சுவை கெட்டுவிடும். பிஞ்சுக்காய் சுவை அற்றது; துவர்க்கும். அது கனியும் பருவத்திலேயே சுவை தரும். இதுபோலக் காம நுகர்ச் சியும் புலவியின் பின்னரே—அதற்குரிய செவ்வியின் போதே சுவை தரும்.

"மலரினும் மெல்லிது காமம்; சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்,"

எனும் குறள் காமநுகர்ச்சிக்குரிய செவ்வியினை அறியும் அருமைப்பாட்டினை விளக்குகிறது.

துனியின் பின்னரும் பள்ளியறையிலே கலவிக்கு முன் புலவி உண்டாகும். எனவே, காமம் நல்ல கனியாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தற்கு—காமநுகர்ச்சி இன்பம் பயத்தற்குப் புலவியே காரணமாகின்றது. இந்தப் புலவியை மூன்று அதிகாரங்கள் — முப்பது குறள்கள்—விளக்குகின்றன. புலவி, புலவிநுணுக்கம் ஊடலுவகை என்பன அந்த அதிகாரங்களின் பெயர்களாகும்.

புலவியின் போது தலைவனும் வருந்துவான் தலைவியும் வருந்துவாள். இந்த வருத்தம் கலவி கை கூடும்போது இன்பமாகவே முடியும்.

நீர் நிழலோடு கூடியிருப்பின் இன்பம் தரும். இதனைப் போல ஊடலும் அதை உணர்ந்த காதல னோடு இன்பம் தரும். ஊடலை நீக்கக் கருதாது தலைவன் அதனை நீடிக்கவிட்டால் தலைவி வருந்து வாள். இந்த வருத்தத்தை ஓர் உவமை வாயிலாக வள்ளுவர் விளக்குகின்றார். ஊடிய தலைவியை ஊடல் நீக்கிக் காமம் நுகராதிருத்தல் நீரின்றி வாடிய கொடியை வேரோடு அறுத்து விடுவதைப் போன்ற செயலாகும் என்கிறார் அவர்.

"ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதல்அரிந் தற்று."

சில சமயங்களில் தான் அடைந்த வருத்தத்தைத் தலைவனும் அடைவதைப் பார்ப்பதற்கும் தலைவி புலப்பதுமுண்டு.

"புல்லாது இராஅப் புலத்தை அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது."

இது தலைவி தன் மனதுக்குக் கூறியது; தோழி தலை விக்குக் கூறியதென்பாருமுளர்.

ஊடல் அளவாக அமைதல் வேண்டும் என்பதை வள்ளுவர் ஊடலை உப்புடன் ஒப்பிட்டுக்காட்டி விளக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குவது எல்லோர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளத்தக்கது. உப்பையும் அதன் பயனையும் தெரியாதவர்கள் இல்லை. ''உப்பில்லாப் பண்டம் குப்பையிலே'' என்னும் பழமொழி உணவுக்குச் சுவை தருதற்கு உப்பு இன்றியமையாதது என்பதை உணர்த்துகிறது. இந்த உப்பு உணவில் கூடிவிட்டால் அந்த உணவின் சுவை கெட்டுப்போகும். இந்த உப்பைப் போன்றதே கூடலுக்கு ஊடல். அஃது அளவுக்கு மிஞ்சினால் கூடல் சுவை கெட்டுப்போகும்.

**''உப்புஅமைந் தற்றால் புலவி அதுசிறிது**
**மிக்கற்றால் நீள விடல்.''**

காதலர் இருவரின் பள்ளி அறைக்கு வள்ளுவர் எங்களை அழைத்துச் செல்கின்றார். அங்கே படுக்கையின் மீது தலைவியும் தலைவனும் இருக்கிறார்கள். அவர்களிருவரும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதே புலவிநுணுக்கம் எனும் அதிகாரம்.

அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை நாம் பார்ப்பதற்கு முன் அங்கு அவர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் காரணமாயமைந்துள்ளநிலைகளங்களை நாம் நன்கு அறிந்து கொள்ளல் வேண்டும். தமிழ்ப் பெண்கள் தம் காதலர்கள் தம்மைமட்டுமே காதலிக்க வேண்டும், பிற பெண்களை மனத்தாலும் தீண்டக் கூடாது என்று எண்ணுபவர்கள். இந்த எண்ணம்—''ஒருவனுக்கு ஒருத்தி,'' ''ஒருத்திக்கு ஒருவன்'' என்ற தமிழ்மரபு—வாழையடி வாழையாக வருவது; காதலி காதலன் மேற்கொண்ட அன்பையும் கற்பு நிலையையும் விளக்குவது. இப்பிறவியில் மட்டுமன்றி மறு பிறவிகளிலும் தாமே தம் கொழுநரின் காதலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

களாக இருக்க வேண்டும் எனும் உறுதியும் உடையவர் கள் அவர்கள். தலைவியர்களின் இந்த எண்ணமும் உறுதியுமாகிய இரண்டு நிலைக்களங்களையும் தலைவர்களும் நன்கு அறிந்தவர்கள், இந்த நிலைக் களங்கள் இரண்டினையுமே சீதையின் கூற்றுக்களும் காட்டுகின்றன.

காதலர் வாழ்வில் முதல்நாள் இரவு பல சிறப் பியல்புகளைக் கொண்டது. தம்அன்பைப்புலப்படுத்து தற்கு அவர்கள் மனம் விட்டுப் பேசுவார்கள். இவ் விரவில் காதலனின் பேச்சே மிகுதியாயிருக்கும்.

மணமக்களான இராமனும் சீதையும் முதல்நாளிரவு தமிழ் மரபினைத் தழுவி அன்பு மொழிகள் பல பகர்ந்தனர். ஆராமை மிகுதியால் இராமன் சீதைக்கு ஒருவரம்-வாக்குறுதி-கொடுத்தான். அந்த வாக்குறுதி என்ன? இந்தப் பிறவியில் இருமாதரைச் சிந்தை யாலும் தொடேன் என்பதே. இதனைச் சீதையின் கூற்றாலேயே கம்பர் வெளிப்படுத்துகிறார். அசோக வனத்தில் சீதை அனுமனுக்குக் கூறுகிறாள் :

"வந்தெனைக் கரம் பற்றிய வைகல்வாய்
இந்தவிப் பிறவிக் கிருமாதரைச்
சிந்தையாலுந் தொடேனென்ற செவ்வரம்
தந்தவார்த்தை திருச்செவி சாற்றுவாய்".

சீதை இதனோடு முடிக்கவில்லை. நான் இங்கு இருந்து இறந்தால் அடுத்தபிறப்பிலாகுதல் இராமரை நாயகனாக அடைதற்கு வரம் கேட்டேன் என்று இராமரிடம் கூறு என்று அனுமனுக்கு உரைக்கிறாள்;

"ஈண்டுநா னிருந்தின் னுயிர் மாயினும்
மீண்டுவந்து பிறந்துதன் மேனியைத்
தீண்டலாவ தோர்தீவினை தீர்வரம்
வேண்டினா டொழுதென்று விளம்புவாய்"

என்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இனி, சங்க நூலாகிய குறுந்தொகையில் ஒரு காதலி கூறுவதையும் நோக்குவோம்.

''இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியரோ எங்கணவன்
யானா கியரோ நின்நெஞ்சு நேர்பவளே''

இதுதான் குறுந்தொகையில் காட்சி தரும் காதலியின் குறிக்கோள். தன் பள்ளியறையிலேயே இந்தக் காதலி தன் காதலனுக்கு ''இந்தப் பிறப்பில் என் காதலனாக இருக்கும் நீங்களே மறுபிறப்பிலும் என் கணவனாக வேண்டும். யான் உங்கள் நெஞ்சு நேர்பவளாக வேண்டும்'' என்று கூறுகிறாள். மறுபிறப்பிலும் அவன் தன் கணவனாகவேண்டுமென்று விரும்பியவள், தான் மனைவியாக வேண்டுமென்று கூறாமல், அவனுடைய நெஞ்சிற்கலந்தவளாக-நெஞ்சில் இடம் பெற்றவளாக ஆக வேண்டும் என்று கூறுவது அவளுடைய தூய அன்பின் திறத்தைக் காட்டுகிறது. இக்கூற்று வேறெப் பெண்ணும் அவன் நெஞ்சில் இடம் பெறக்கூடாது என்பதையும் வற்புறுத்துகிறது. மறுமையிலும் கணவனும்மனைவியுமாகவாழல் வேண்டும் எனும் காதலரின் ஆராமையைப் பல தமிழ் நூல்கள் எடுத்துரைக்கின்றன.

நற்றிணை காட்டும் ஒரு பெண்ணின் அச்சத்தையும் ஈண்டு நோக்குதல் இயைபுடைத்து. ''உலகிலே பிறந்தோர் இறப்பர், ஆகையால் நான் சாதலுக்கு அஞ்சவில்லை. மறுபிறப்பில் மக்கட் பிறப்பெடுக்காது வேறொரு பிறப்பாக மாறிவிட்டால் என் காதலனை அப்போது மறப்பேனோ என்று தான் நான் அஞ்சுகிறேன்,'' என்று கூறும் அவளுடைய கூற்றுத் தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காதலரை என்றும் பிரியாதிருத்தலே தமிழ்ப் பெண்களின் குறிக்கோள் என்பதை நன்கு நிலைநாட்டுகின்றது.

"சாதல் அஞ்சேன்; அஞ்சுவல், சாவின்
பிறப்புப் பிறிது ஆகுவதுஆயின்,
மறக்குவேன்கொல், என்காதலன் எனவே."

"இந்த உலகில் தலைவனைப் பிரிந்து தனித்தனி வாடுதலிலும் இருவரும் ஒன்றாக உயிர் விட்டால் மீண்டும் நாம் பிரிந்து தனித்திராது இருவேமும் ஒன்றாக வாழலாம். ஆகையால் எம்உயிர் ஒன்றாகப் போவதை நான் விரும்புகிறேன்," என்று ஒரு காதலி தன்தோழிக்குச் சொல்கின்றாள். முற்பிறப்புக்களிலும் இருவரும் தொடர்ந்து காதலராகவாழ்ந்துவந்தோம். இப்பிறப்பில் தடை உண்டாகுவதால் அடுத்த பிறப்பில் இருவரும் சேர்ந்து வாழ்தற்குக் காமவேட்கையுடன் எமது உயிர் போவதாக எனும் இக்கூற்று இப்பிறப்பிலும் மறுபிறப்புக்களிலும் மட்டும் நெஞ்சு நேர்பவர்களாக வாழ்வதையன்றி, முற்பிறப்புக்களிலும் தலைவனும் தலைவியும் நெஞ்சங்கலந்தவர்களாகவாழ்ந்தமையையும் புலப்படுத்துகின்றது.

இந்தச் செய்தியை இயம்பும் குறுந்தொகைப் பாடற் பகுதி படிக்கப்படிக்க மகிழ்ச்சியூட்டத்தக்கது.

"உடன் உயிர் போகுகதில்ல கடன் அறிந்து,
இருவேம் ஆகிய உலகத்து
ஒருவேம் ஆகிய புன்மை நாம் உயற்கே."

பள்ளியறையில் படுக்கையின் மேல்வைத்து வள்ளுவர் காட்டும்தலைவனும் தலைவியும் இந்தமரபு வழி வந்தவர்கள்; இப்பிறப்பிலன்றி மறுபிறப்புக்களி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

லும் தொடரும் உழுவலன்புடையவர்கள். எனவே, அவர்களின் பேச்சும் செயலும் இந்த இரு நிலைக்களங் களிலுமிருந்தே ஊற்றெடுக்கின்றன. தலைவன் தலைவி யின் புலவியை நீக்குதற்கு "நான் இந்தப் பிறப்பில் இனி உன்னைப் பிரிய மாட்டேன்" என்று அன்பு ததும்ப, ஆர்வம் பொங்க உரைக்கின்றான், இதனைக் கேட்ட தலைவி அழத்தொடங்கி விட்டாள். கண்ணிறைய நீர் பெருகுகிறது. மற்றப் பிறப்புக்களில் பிரியும் எண்ணம் அவனுக்குண்டு என்று எண்ணி அழுகிறாள். கண்ணிறைய நீருடன் அழும் தலைவியைத் தலைவன் அருகிலே இருத்திக் காட்டும் இந்தக் காட்சி பின்வரும் குறளில் வரையப்பட்டுளது.

"இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள்."

காதலனிடத்துத் தவறில்லை எனினும் தவறினை நுட்பமாகக் கற்பித்து ஊடும் காட்சிகளையே புலவி நுணுக்கம் காட்டுகிறது. ஊடலைத்தீர்க்கத் தலைவன் என்ன பேசினாலும், பேசாமலிருந்து பார்த்தாலும், பணிந்து போனாலும், மாலை சூடினாலும், தும்மினா லும், தும்மலை அடக்கினாலும் தலைவி நுணுக்கமாக அவனிடம் பிழை காண்கின்றாள்.

பள்ளியறையில் நல்லமளிமீது தலைவியுடன் தலைவன் இருக்கும்பொழுது தலைவி பிணங்குகிறாள். அவளுடைய பிணக்கைத் தீர்ப்பதற்குப் பல வழியில் தலைவன் முயல்கின்றான். தலைவி அவனிடத்தில் தவறுகளை நுணுக்கமாகக்கண்டு உரைத்துப் பிணங்கு கிறாள். காதலன் காதலியை அணைக்க முயல்கின் றான். "உம்முடைய கட்டழகைப் பெண்கள் எல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

லாரும் பொதுவாகப் பார்த்துச் சுவைக்கின்றனர். இதனால் நீர் ஒரு பரத்தனாகி விட்டீர். எல்லாருக் கும் ஆசையூட்டும் உமது மார்பை நான் தழுவ மாட் டேன்'' என்று நுணுக்கமான காரணத்தைக் கூறி அவள் அவனுடன் ஊடுகின்றாள்.

''பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.''

இவ்வாறு ஊடிப் பேசாமலிருக்கும் போது காதலன் தும்மினான். தும்முகிறவரை ''நூற்றாண்டு வாழ்க'' எனப் பக்கத்திலிருப்பவர்கள் வாழ்த்துவது தமிழ் மக்களிடையேயுள்ள பழைய வழக்கங்களிலொன்று. இன்றும் தும்முகிறவர்களைச் சிறப்பாகக் குழந்தை களை ''நூறு,'' நூற்றாண்டு''என்றுவாழ்த்துகிறோம். தும்மலோடு உயிர் பிரியும் என்ற நம்பிக்கையால் உண்டான வழக்கம் இது. ''தம்மை நீடு வாழ்க என்று தமிழ் வழக்கப்படி வாழ்த்துவேன் என்று நான் ஊடி யிருந்த போது அவர் தும்மினார். நான் செய்வேனா? புலவியை விடுவேனா?'' என்று காதலி கூறுகிறாள்.

''ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம் தம்மை
நீடுவாழ்க என்பாக் கறிந்து.''

தலைவனுக்கு இயல்பாக வந்த தும்மலைத் தன்னைப் பேசச் செய்வதற்காக வரவழைத்த தும்ம லாகத் தலைவி கொள்ளும் நுட்பம் வியப்புக்குரியது.

ஒருவரிடத்து மிகுந்த அன்புடையார் அவரை நினைத்தால் அவருக்குத் தும்மல் வரும் என்று இன்றும் தமிழ் மக்கள் நம்புகிறார்கள்; அன்றும் நம் பினார்கள். தலைவன் தும்மினான். ஊடலை மறந்து வழக்கப்படி தலைவி வாழ்த்தி விட்டாள். வாழ்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தினவள் 'எந்தக் காதலி உம்மை இப்பொழுது நினைக்கிறாள்? அவள் நினைப்பதால் தானே தும்மல் வந்தது,'' என்று அழுவதைப் பின்வரும் குறள் காட்டுகிறது.

''வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று.''

தலைவனுக்கு இயல்பாக வந்த தும்மலை ஒரு காதலி அவனை நினைத்ததால் வந்ததென்று தலைவி கொள்வது தான் இக்குறளிலுள்ள நுட்பமாகும்.

தும்மினதால் பெரும் பாடுபட்ட தலைவன் தும்மல் வந்தவுடன் அதனை அடக்கினான். ''தும்மினால், யாரோ என்னை நினைப்பதால் தும்மினேன் எனத் தலைவி பிணங்குவாள்'' என்றெண்ணித்தான் அவன் தும்மலை அடக்கினான். ஆனால் அவன் தும்மலை அடக்குவதைத் தலைவி கண்டு விட்டாள். நுட்பமாகப் பிழை காணும் தலைவி தலைவனைத் தப்பிக் கொள்ள விடுவாளா?

''யாரோ காதலி ஒருத்தி நினைத்ததால் தும்மல் உமக்கு வந்தது. அவள் நினைக்கிறாள் என்பதை மறைக்கத் தும்மலை அடக்குகிறீரா'' என்று கேட்டு மேலும் ஊடி அழுகிறாள் தலைவி.

''தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.''

யாரோ உம்மை நினைக்கின்றார் என்று தலைவனுக்குக் கூறிப் பிணங்கிய தலைவியை மகிழ்விப்பதற்காகத் தலைவன் ''நான் உன்னைப் பிரிந்த காலத்தில் எப்பொழுதும் உன்னையே நினைத்திருந்தேன்'' என்று கூறினான். உடனே தலைவி ''மறந்தவரே பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நினைப்பார், என்னை நீர் மறந்து விட்டீர், அதனால் தான் பின் நினைத்ததாகக் கூறினீர்'' என்று கூறிப் புல்லாமல் புலர்ந்தாள்.

''உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.''

இவ்வாறு புலந்த தலைவியினுடைய ஊடலை நீக்கு தற்குத் தலைவன் ''எம்மைப் போன்ற காதலர்கள் யாவரினும் நாமிருவருமே மிகுந்தகாதலுடையோம்'' என்று கூறித்தம் காதலன்பின் திறப்பாட்டை வியந் தான். ஆனால், தலைவி இக்கூற்றுக்கு வேறு பொருள் கற்பித்து ''உம்மாற் காதலிக்கப்பட்ட மகளிர் எவரி லும், எவரிலும் பார்க்க என்மேற் கூடிய காத லுடையீர்'' என்று கேட்டு ஊடினாள்.

''யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.''

தொடர்ந்து பிணங்கும் தலைவியைத் தன் அழகை மிகுதிப்படுத்திக் காட்டிக் கவருதற்காகத் தலைவன் பூமாலையைச் சூடினான். உடனே தலைவி''வேறொரு காதலிக்கு உமது அழகைக் காட்டுதற்குத் தான் மாலை சூடினீர்'' என்று கூறி வெகுண்டாள்.

"கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.''

''என்ன சொன்னாலும் செய்தாலும் தலைவி தவறு காண்கிறாளே! இனி என்ன செய்வதென்ற எண்ணத் துடன் அவளைப் பார்த்துக் கொண்டு பேசாமல் இருப்போம்.'' என்று தலைவன் இருக்கின்றான். அவன் தன்னைக் கூர்ந்து பார்ப்பதைக் கண்ட தலைவி ''யாரை நினைத்துக் கொண்டு என் உறுப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

களை ஒப்பிட்டு நீர் நோக்குகிறீர்'' என்று சினத்தோடு கேட்கிறாள்.

''நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யார்உள்ளி நோக்கினீர் என்று,''

பேசாமலிருந்து பார்த்தாலும் குறைகாணும் தலைவியை இனிப் பணிந்தாகிலும் அவளின் ஊடலைத் தீர்க்கலாம் என்றெண்ணித் தலைவன் அவளைப் பணிந்து ஊடலை நீக்க முயல்கின்றான். ''இப்படித் தான் நீர் பிறமகளிர் ஊடும் பொழுதும் பணிவீரோ'' என்று கூறித் தலைவி சினம் கொள்கிறாள்.

''தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று.''

புலவி நுணுக்கம் எனும் அதிகாரத்தில் தலைவனுடன் தலைவி எவ்வாறு பிணங்கிக் கொண்டிருந்தாள் என்பதைக் காட்டிய வள்ளுவனார் ஊடலுவகை எனும் அதிகாரத்தில் காதலர் இருவரும் ஊடலைப் போற்றுவதையும், ஊடலுக்கும் கூடலுக்கும் உள்ள தொடர்பையும் நன்கு விளக்குகிறார்,

''தலைவனிடத்திலே தவறில்லை எனினும் அவனுடைய அன்பையும் ஆதரவையும் அளியையும் காண்பதற்கு நான் ஊடவேண்டியுளது. எனவே, ஊடல் இன்றியமையாதது.'' என்று தலைவி கூறுகின்றாள்.

''இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு''

''ஊடலால் சிறு துன்பம் உண்டாகிறது; என் தலைவன் காட்டும் கருணை வாட்டமடைகிறது. எனினும், பின் அது பேரின்பம் தரும். ஆகையால் புலவி போற்றுதற் குரியது.'' என்று தலைவி கூறுகிறாள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

''ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்''

என்னுள்ளத்தை உடைக்கும் படைக்கலம் காதலரை அணைத்துக்கொண்டு பின் விடாமைக்குக் காரணமான புலவியில் உளது என்று கூறிப் புலவியின் பேராற்றலைத் தலைவியே விளக்குகிறாள்.

''புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை.''

தலைவி ஊடலைஉவப்பதை வரைந்து காட்டிய வள்ளுவர் தலைவனுக்கு ஊடல் எவ்வாறு உவகை நல்குகிற தென்பதையும் தொடர்ந்து விளக்குகிறார்.

முன்னர் தலைவனிடம் தவறில்லையானாலும் தான் ஊடுவதாகத் தலைவி கூறினாள். அதைப் போலவே தலைவியிடம் தவறில்லை எனினும் தான் விரும்பும் அவளின் தோள்களை விட்டுப் பிரிவதில் உரைக்கமுடியாத இன்பம் ஒன்று உண்டு எனத் தலைவனும் கூறுகின்றான்.

''தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலின் ஆங்கொன்று உடைத்து.''

உண்பதா? உண்ட உணவு சீரணித்தலா? இனியது என்றால் சீரணித்தல் தான் இன்பந்தரும் என்று எவரும் கூறுவர். உணவு சீரணிக்காவிடில் மேலும் உண்ணல் முடியாது. வலிந்து உண்டால் நோய் உண்டாகும். எல்லாரோடும் தொடர்புடைய இந்தச் செயல்களை உதாரணமாகக் காட்டி வள்ளுவர் புணர்தலிலும் ஊடல் இனியது என்பதை நிலைநாட்டுகிறார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"உண்ணலினும் உண்டது அறல்இனிது; காமம்
புணர்தலின் ஊடல் இனிது.''

இது தலைவன் கூற்று. காதலிருவரின் ஊடலின் போது அதனைத் தீர்க்க முற்படாதிருப்பவர் தோற்ற வராவார். தீர்க்க விரைபவர் வென்றவராவார். இவ்வாறு தோற்றவரே காமநுகர்வின்போது வென்ற வராவார் என்று ஊடலில் உண்டாகும் வெற்றி தோல்விகள் குறித்துத் தலைவன் பேசுகின்றான்.

''ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும் ''

இவளோடு கூடிப்பெற்ற இன்பத்தை மீண்டும் இவளோடு ஊடிப் பெறலாமா என்று தலைவனுடைய உள்ளந்தவிக்கிறது. இத்தவிப்பைப் பின்வரும் குறள் காட்டுகிறது.

''ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு.''

கூடலிலும் தலைவன் ஊடலையே விழைகின்றான். தலைவி நீண்ட நேரம் ஊடுவாளாக, அந்த ஊடலைத் தீர்க்க நான் இரந்து நிற்பதற்கு இரவு விரைந்து விடியாமல் நீட்டிப்பதாக என்று விரும்புகின்றான் தலைவன். அவனுடைய விழைவை எட்டுச் சிறு சொற்களில் திட்பமாக அடக்கிக் காட்டுகிறார் வள்ளுவர்.

"ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா.''

ஊடுதலால் பெறும் இன்பத்தைத் தலைவி அழகாகப் பின் வரும் குறளிறனைந்துரைக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீர்இயைந் தன்னார் அகத்து."

நிலமும் மழை நீரும் கலப்பதுபோல அன்புடை நெஞ்சங்கலந்த தலைவனுடன் புலத்தலால் பெறும் இன்பத்தைப் போன்ற இன்பத்தைத் தரும் தேவருலக முமுண்டோ?என்று அவள் கேட்கிறாள்; முட்டில்லாத இன்பம்நிறைந்த தேவருலகத்திலும் இந்தப் புலத்தலால் உண்டாகும் இன்பத்தைப் பெறமுடியாது என்று முடிவு செய்கிறாள்.

தான் விரும்பும் தலைவியுடன் கூடுதலினால் பெறும் இன்பத்தைத் தலைவன் திருமால் உலகிலும் பெறமுடியாது என்று முடிவு செய்கின்றான்.

"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு."

தலைவனுடைய இந்தக் கூற்றுடன் குறுந்தொகையில் காட்சிதரும் ஒரு தலைவனுடைய கருத்தும் இசைந்து இக்கூற்றினை நன்கு விளக்குகின்றது.

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தே ணாடும்
இரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போ லுண்கட் பொன்போன் மேனி
மாண்வரி அல்குற் குறுமகள்
தோண்மாறு படூஉம் வைகலோ எமக்கே.

திருக்குறள் காட்டும் தலைவன் "தாம் வீழ்வார் மென்றோள் துயிலின்" என்று கூறியதைக் குறுந்தொகை காட்டும் தலைவன் "பூப்போ லுண்கட் பொன்போன் மேனி மாண்வரி அல்குற் குறுமகள் தோண்மாறு படூஉம் வைகல்" என்று விரிந்துரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கின்றான். தலைவியை விரும்புதற்குக் காரணமா யமைந்த கண், மேனி, அல்குல் என்பவற்றின் அழகைக் குறுந்தொகைத் தலைவன் நீட்டிக் காட்டுகின்றான். "மென்றோட்துயிலின்" என்பதையும்" தோண்மாறு படூஉம் வைகல்" என்பதையும் ஒப்பிட்டு நோக்குக. தன் தலைவியோடு கூடுவதால் பெறும் இன்பத்தை ஒத்த சிறந்த இன்பத்தை இந்த உலகிலோ தேவ ருலகிலோ வேறெவ் வழியிலும் பெறல் முடியாது என்று முடிவுசெய்கின்றான்குறுந்தொகைத்தலைவன்.

மேலுலகிலுமில்லாததும் ஈடிணையற்றதுமான இன்பத்தைத் தருவது ஊடலே எனத் தலைவியும், கூடலே எனத் தலைவனும் கூறுவதைக் கண்டோம். எனவே ஊடலா கூடலா சிறந்ததென்ற வினா எழு கின்றது. இதற்கு விடை கூறி, இருவகை ஊடுதலுமின் றேல் காம நுகர்ச்சி கனியும் கருக்காயுமாகும் என் பதையும் நிலைநாட்டித் தமது நூலை முடிக்கின்றார் திருவள்ளுவர். ஊடுதல் கூடுதலுக்கு இன்பம். இருதலை யும், மனம் ஒத்து, அளவு ஒத்துக் கூடுதல் ஊடுதலுக்கு இன்பம். ஊடுதலும் கூடுதலும் ஒன்றுக்கு ஒன்று இன்ப மளிப்பனவும், இன்றியமையாதனவுமாகும் என்பதை

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்."

எனும் குறள் நன்கு விளக்குகின்றது.

இதுதான் காமத்துப்பாலின் கடைசிக் குறள். திருக்குறளின் கடைசிக்குறள், ஆயிரத்து முந்நூற்று முப்பதாவது குறள். நூலை முடிக்கும் பொழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

''மலரினும் மெல்லிது காமம்; சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்''

என்பதை—தமிழ்மரபுக் காதலின் மென்மையை-தமிழ் நெறியின் அருமையை—''கூடி முயங்கப்பெறின்''என்ப தனால் வற்புறுத்திக் காட்டியிருப்பது வள்ளுவருடைய நெஞ்சம் தமிழ் நெஞ்சமே என்பதையும், அவருடைய நூல் தமிழ்மறையே என்பதையும் நன்கு புலப்படுத்து கின்றது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF PERADENIYA
-7-2001
★ LIBRARY ★

# பாராளுமன்றத்தில்

இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய பதினெட்டாண்டுகளில் தமிழ்மறையை ஓம்பும் பணியினையும் பரப்பும் தொண்டையும் எனது பாராளுமன்றப் பதவியையும் பயன்படுத்திச் செய்து வந்தேன். இலங்கைப் பாராளுமன்றத்தில் நான் உரையாற்றிய சமயங்களில் திருக்குறள்களை எடுத்துரைத்து எனது கருத்தை வலியுறுத்தும் வாய்ப்பும் கிடைத்தது. இவ்வாறு நான் எடுத்துரைத்த திருக்குறள்களையும் அவற்றினால் வலியுறுத்தப்பட்ட கருத்துக்களையும் ஈண்டுக் காண்க:

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து மூன்றாம் ஆண்டு யூலைத் திங்கள் இருபத்தைந்தாம் நாள் இலங்கையில் மாபெரும் இனக்கொலை, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு முதலிய கொடுமைகள் தலைதூக்கின. நாலைந்து நாள்கள் தொடர்ந்து நடந்த இந்தக் கொடுமைகள் முழு உலகையுமே அதிர்ச்சியும் அல்லலுமடையச் செய்தன.

இந்த யூலைத் திங்களுக்கு முந்திய யூன் திங்கள் இருபத்தேழாம் நாளன்று நான் இலங்கைப் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தினேன். இந்த உரை பத்திரிகைகளிலும் இடம் பெற்றது; நூலாகவும் வெளியிடப்பட்டுளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்த உரைதான் சிங்கள சிறீலங்காப் பாராளு மன்றத்தில் நான் நிகழ்த்திய கடைசி உரையாகும். இவ்வுரையை நிகழ்த்தும் பொழுது இதுதான் எனது கடைசி உரையாக அமையுமென்று நான் சிறிதும் எண்ணவில்லை. பின்னையவன் செயல்களின் விளை வினால் இந்த உரையே கடைசி உரை ஆகிற்று.

சிங்கள இனத்துக்கும் சிறப்பாகச் சிங்கள அரசுக் கும் தமிழினத்துக்குமிடையில் பல்லாண்டுகளாக வளர்ந்து வந்த மோதல்களும், போராட்டங்களும், அரசியல் காழ்ப்பும் உச்ச நிலையை அடைந்து தமிழினத்தை அடக்கி ஒடுக்கி அழிக்கும் சூழ் நிலையை உருவாக்கிவிட்டன. தமிழின விடுதலைப் போராளிகளைப் பயங்கர வாதிகள் எனக் கூறிக் கொண்டு அவர்களை அழித்து ஒழித்தற்குச் சிங்கள அரசு நாகரிக நாடுகளில் இல்லாத கொடிய பயங்கர வாதத் தடைச் சட்டத்தை ஆக்கிப் பெருங்கொடுமை களைச் செய்தது. இதுவும் போதாது என்று அவசர காலச் சட்டத்தையும் பயன்படுத்தியது.

சிங்கள அரசு மட்டுமன்றி அதன் காவற்படை களும் பகைமையும் சினமும்கொண்டு தமிழ்மக்களைப் பலவழிகளிலே தாக்கி அழிக்க முனைந்தன. இதனால் சிங்கள இனமும் தமிழினமும் ஒன்றாக வாழ முடியாத நிலைமையும், தமிழினம் பேரழிவை எதிர்பார்த்து அஞ்சும் நிலைமையும் உருவாகின. இந்த அமயத் தில் கொடுங்கோலாட்சியாளர் அழிவார்கள், இரண்டு இனமும் இனி முன்போல் ஒற்றுமையாக வாழவே முடியாது எனும் கருத்துகளைக் எனது உரையில் அழுத்தந் திருத்தமாக எடுத்துரைத்தேன்.

உண்மை நிலைமையை ஏற்கமறுத்து முழு உலகை யும் ஏமாற்ற முனையும் சிங்கள அரசுக்கு எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கருத்துக்களை வலியுறுத்துதற்குக் கடைசி எச்சரிக்கை யாக எனது உரையின் இறுதியில் நான்கு திருக்குறள் களை எடுத்துக் கூறி விளக்கினேன்.

இந்த நான்கு குறள்களில் கடைசிக் குறள்,

"உடம்பாடி லாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று" என்பதாகும்.

இதனை எடுத்துரைத்த ஒரு திங்களுள் இடம் பெற்ற மாபெரும் வன்செயல்களும் தமிழினக் கொலையும் இந்தக் குறளுக்கு விளக்கமாக அமைந்து இது பொய்யா மொழியே என்பதை நிறுவி யுள்ளன.

ஒற்றுமையாக வாழ முடியாதவர்களுடன்-உடன் பட்டு வாழ முடியாதவர்களுடன்-மனப் பொருத்த மில்லாதவர்களுடன் வாழ்தல் ஒரு குடிசையில் பாம் புடன் வாழ்வதைப் போன்றது என வள்ளுவர் கூறு கின்றார். சிங்களவர்களுடன் தமிழர்கள் ஓர் ஆட்சி யின் கீழ் வாழ்தல் பாம்போடு வாழ்வதைப் போன்ற தென்பதை இதனால் விளக்கினேன். "ஒருவன் பாம் போடு வாழ்ந்தால் பாம்பால் கடிக்கப்படுவான். ஆகவே அவன் உயிருக்கு அழிவு வருதல் உறுதி" எனப் பரிமேலழகர் இக்குறளின்கருத்தை விரித்துரைத்தார். யூலை வன்செயல்கள் நடைபெற்ற போது சிங்களவ ரால் தமிழர் பலர் உயிரிழந்த நிகழ்ச்சியை யாவரும் அறிவர்.

சிங்கள அரசாங்கம் தமிழர்களுக்குக் கொடுமை களை மேலும் மேலும் செய்து வருவதைப் பொறுக்க முடியாமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்"

எனும் குறளையும் எடுத்துக் கூறி விளக்கினேன். அளவுக்கு மிஞ்சி எங்களுக்கு நீங்கள் கொடுமைகளையோ கேடுகளையோ செய்தால் அழிந்து விடுவீர்கள் என்று சிங்கள ஆட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடித்துரைத்தேன்.

"அல்லற்பட் டாற்றாது அழுதகண்ணீர் அன்றோ
செல்வத்தைத் தேய்க்கும் படை"

எனும் குறளையும் அவர்களுக்கு எடுத்துரைத்தேன்.

சிங்கள அரசின்-சிங்களப்படைகளின்—கொடுமைகளைத் தாங்க முடியாமல், தமிழ் மக்கள் அழுது துடிக்கிறார்கள். இதனால் உங்கள் ஆட்சி அழியும் என்பதைத் தெருட்டுதற்கு, மக்கள் துன்பம் தாங்க முடியாமல் "ஐயோ" என்று அலறி அழுது விடுகின்ற கண்ணீர் அரசுகளையும் அவற்றின் செல்வத்தையும் அழித்து விடும் என்று திருவள்ளுவர் கூறுகிறார் என்று விரித்து விளக்கினேன்.

இந்த மூன்று குறள்களையும் அன்று நான் எடுத்துக்கூறி எச்சரிக்கை செய்வதற்கு முன்னர், உதாரணத்துக்கு ஒரு குறளை எடுத்துக் காட்டினேன்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியில் மிகுந்த செல்வாக்குள்ள அமைச்சராக விளங்கியவரும், பிரதம அமைச்சரை வழிப்படுத்தியவரும் திரு பீலிக்கு ஆர். டயசு பண்டார நாயக்கா என்பவர். அவர் யாழ்பாணத்துக்கு ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டு தைத் திங்களில் வருகை தந்து தமிழில் பேசித் தமிழ்மக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மருட்ட முயன்றார். அவருக்கு நான் விடுத்த திறந்த முடங்கலிற் பின்வருமாறு குறிப்பிட்டேன்.

''இன்று இலங்கையில் தமிழ் மொழி உரிமைகளை மறுப்பவர்களின் முதல்வர் நீங்களே என்பதையும், நீங்கள் நினைத்தால் இருபத்து நான்கு மணிநேரத்தில் தமிழ்மொழி உரிமைகளைக் கொடுக்க முடியும் என்பதையும், ''நான் தமிழ் படிக்கிறேன்'' என்ற போர்வையில் உங்கள் ஆட்சியின் சூழ்ச்சிகளை மறைக்க முடியாதென்பதையும், தமிழர்கள் அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்ப்பதற்கும், தமிழ் மொழி உரிமைப் போராட்டத்தை மீண்டும் தொடங்குதற்கும் பெரிதுங் காரணமாக விருப்பவர் நீங்களே என்பதையும் நாடறியச் சொல்லி வைக்கவே இத்திறந்த முடங்கலை உங்களுக்கு விடுக்கின்றேன்.

தமிழ்மொழி உரிமைகளைக் கொடுக்காமல் தமிழினத்தின் பகைவராக ஆகுவதால்-தமிழர்களின் தொண்டைக்குள் சிங்களத்வைப் புகுத்தி அவர்களை மெல்ல மெல்லச் சிங்களவர்களாக்க முயல்வதால்-தமிழர்களை அடக்கி அடிமைப்படுத்துவதால் இந் நாட்டின் ஆட்சியில் மேலும் அதிகாரத்தைப் பெறலாம்-பிரதம அமைச்சராகலாம் என மனப்பால் குடிக்கிறீர்களா?

''மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு''

எனும் பொய்யா மொழியை மட்டும் உங்களுக்கு இப்பொழுது நினைவூட்டி இம் முடங்கலை முடிக்கின்றேன்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சயவர்த்தனா அரசாங்கத்தால் திரு. பீலிக்கு பண்டார நாயக்கா சனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். ஆணைக்குழுவின் தீர்ப்பிற்கிசைய அவருடைய குடியுரிமைகள் பறிக்கப் பட்டு விட்டன. தமிழருக்குக் கேடு சூழ்ந்த அவர் பெருங்கேட்டை அடைந்து விட்டார். இதனை நான் எனது உரையில் சுருக்கமாகத் தொட்டுக் காட்டிப் பின்வருமாறு பகர்ந்தேன்.

''சென்ற அரசாங்க காலத்திலே அமைச்சராக இருந்த திரு. பீலிக்கு ஆர். டயசு பண்டாரநாயக்கா அவர்களுக்கு நான் ஒரு திறந்த முடங்கல் விடுத்திருந் தேன். அதில்

''மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு''

என்று குறிப்பிட்டேன். இன்றைக்கு அவர் எங்கே இருக்கிறார்? அவருடைய அரசாங்கம் எங்களுக்குச் செய்த கேட்டின் பலனை அனுபவித்துக் கொண்டிருக் கிறார். இந்தப் பலனை நீங்களும் அனுபவிக்கப்படாது என்பதற்காகத் தான் நான் இவற்றை உங்களுக்குக் கடைசியாகச் சொல்கிறேன்.''

* * *

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தாறாம் ஆண்டு யூலை இருபத்தாறாம் நாளன்று நான் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்துள்ள திருக்குறளை நோக்குவோம்.

பல்கலைக்கழகத்தில் சேர்த்தற்கு நடத்தப் பட்ட தேர்வுகளில் சிங்கள மாணவர்கள் பெற்ற புள்ளிகளைத் தனியாகவும் தமிழ்மாணவர்கள் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புள்ளிகளைத் தனியாகவும் சிங்கள அரசு தரப்படுத்திப் பல்கலைக்கழகத்தில் சேரும் தகுதி பெற்ற தமிழ் மாணவர்களின் தொகையைக் குறைத்து வந்தது. மருத்துவக்கல்லூரியில் சேர்வதற்குத் தமிழ் மாணவன் 296 புள்ளிகள் பெறல் வேண்டும். சிங்களமாணவனோ 243 புள்ளிகள் பெற்றால் போதும். மொழிவாரித் தரப்படுத்தல் எனும் போர்வையில் சிங்கள அரசு தமிழ் மாணவர்களுக்குச் செய்த கொடுமையை மாணவர்களுடன் எங்கள் கட்சியினரும் முழுமூச்சுடன் எதிர்த்தோம். இளைஞர்கள் தீவிரவாதிகளாகவும், தமிழ் ஈழப் போராளிகளாகவும் ஆகுவதற்கு இந்த மாபெருங் கொடுமையும் ஒரு காரணமாகும்.

அன்று நான் நிகழ்த்திய உரையின் ஒருசிறு பகுதியை ஈண்டுக்காண்க. "தரப்படுத்தல் என்ற போர்வையில் மாபெரும் அநீதி தமிழ் இனத்துக்கு இழைக்கப்படுகின்றது. தரப்படுத்தல் என்றபோர்வையில் இழைக்கப்படும் அநீதியை இந்தச் சபையில் பல முறை நாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். நாங்கள் பிரிவினையைக் கேட்கின்றவர்கள்- தமிழ் நாட்டைக் கேட்கின்றவர்கள்-தனியாட்சி கேட்கின்றவர்கள். அரசாங்கத்திலே காழ்ப்புக்கொண்டு நாங்கள் மோதுகின்றோம்; கிளர்ச்சி செய்கின்றோம் என்று நீங்கள் எண்ணலாம். ஆனால் வேறு ஒரு கட்சியின் சார்பிலே இங்கே வந்து, பின்னர் அரசாங்கக் கட்சியிலே சேர்ந்த வட்டுக்கோட்டைப் பிரதிநிதியை எண்ணுகின்ற பொழுதெல்லாம்-அவருடைய பேச்சுக்களை இந்த அஞ்சாட்டிலே வாசிக்கின்ற பொழுதெல்லாம்

''தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்னும் வள்ளுவரின் திருக்குறள் தான் என் நினைவுக்கு வருகின்றது. வட்டுக்கோட்டைப் பிரதிநிதி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்; அரசாங்கத்தைச் சேர்ந்தவர்; அரசாங்கத்தின் ''நல்ல பிள்ளை'' என்று பெயர் கேட்டவர். அவர் இந்தத் தரப்படுத்தலைப் பற்றி என்ன சொல்லுகிறார் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன். ஏனென்றால், இந்த நாட்டிலே தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்படுகின்ற பெரும் அநீதி வேறு எந்த நாகரிகம் படைத்தநாடும் செய்யாத ஓர் அநீதியாகும். வேறு எந்த நாட்டிலும் மொழிவாரியாகத் தரப்படுத்தல் இல்லை. கனடாவிலே தரப்படுத்தல் இருக்கிறதென்று அரசாங்கம் எடுத்துக்காட்ட முயன்றபொழுது அதை மறுத்து வட்டுக்கோட்டைப் பிரதிநிதி பேசியதை நான் இங்கே குறிப்பிடுவது என்னுடைய கடமையாகும்.''

* * *

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தைந்தாம் ஆண்டில் தமிழரசுக்கட்சியின் சார்பில் நான் கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராகினேன். அந்த ஆண்டு ஆகத்து மாதம் பத்தொன்பதாம் நாள் பாராளுமன்றத்தில் உரையாற்றும் பொழுது பின் வருமாறு கூறினேன்.

''உண்மையான பொருளாதார அபிவிருத்தியினடிப்படையிலே ஒரு நல்லுறவு இலங்கையின் பலஇன மக்களுக்குமிடையில் இல்லாதிருந்த காரணத்தினாலே சென்ற அரசாங்கம் எதிர்பாராத முறையில் வீழ்த்தப் பட்டது. நாங்கள் அறத்திலே நம்பிக்கையுடையவர்கள். வள்ளுவர் சொல்கிறார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்." என்று

இக்குறள் ஓர் அரசு நேர்மையான முறையிலே செயற் படாமல் தீமையைச் செய்யுமானால், அந்தத் தீமை யைச்சுட்டிக்காட்டி அந்த அரசை நல்வழிப்படுத்தா விட்டால், கெடுக்கின்றவர்கள் இல்லாமலே அந்த அரசு கெட்டு விடும் என்று கூறுகின்றது.

நீங்கள் செய்கின்ற வினை உங்களையே சாரும் என்பதை, பௌத்த தர்மத்தைப் போற்றும் சிங்களப் பெருமக்களுக்கு-கர்மத்தில் நம்பிக்கையுடையசிங்களப் பெருமக்களுக்கு-நான் சொல்ல வேண்டியதில்லை. கடந்த எட்டாண்டுகாலமாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி செய்த தீவினையாலேயே அஃது இருபத்து நான்கு மணி நேரத்தில் இந் நாட்டு ஆட்சி பீடத்தி லிருந்து அகற்றப்பட்டது என்பதை இப்பொழுது அறத்திலே நீதியிலே மனிதப்பண்பிலே நம்பிக்கை கொண்ட மக்களுக்கு எடுத்துக்கூற விரும்புகின்றேன்."

இதுதான் நான் பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறிய முதலாவது குறள். நான் மீண்டும் இந்தக் குறளை ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதாம் ஆண்டு யூன் திங்கள் இருபத்திரண்டாம் நாள் எடுத் துரைத்தேன். திருமதி சிறீமா பண்டாரநாயக்கா தலைமையில் அவருடைய சிறீலங்கா சுதந்திரக் கட்சி யும், இலங்கைச் சமசமாசக் கட்சியும், இலங்கைக் கொம்மியூனிசக் கட்சியும் சேர்ந்து ஐக்கிய முன்னணி யாகி ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதில் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றின. அக்கட்சியின் அரியணை உரையைப் பற்றி நான் பேசும்போது இந்தக்குறளைக் குறிப்பிட்டேன். இந்த ஐக்கிய முன்னணியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆட்சிக்கு வந்தவுடன் தங்கள் கட்சியின் கிளைகளுக்கு நிருவாக அதிகாரத்தில் பங்கு கொடுத்தார்கள். இதனாற் பல தொல்லைகள் தோன்றின. இதனைச் சுட்டிக் காட்டிப் பின்வருமாறு பேசினேன்.

"மத்திய தந்தி அலுவலகத்திலும், தந்தித் தொலைத் தொடர்புத் தலைமையலுவலகத்திலுமுள்ள சில தமிழ் உத்தியோகத்தர்கள், யூ. என். பி. ஆதரவாளர்களான சில சிங்கள உத்தியோகத்தர்கள் முதலானோரின் பெயர்களை எழுதி இவர்களை அகற்ற வேண்டுமென்று ஓர் அறிவித்தல் அந்த அலுவலகங்களில் தொங்கவிடப்பட்டிருப்பதாக அறிகின்றேன். இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு இடங் கொடுக்காமலும் கட்சிக் கிளைகளுக்குப் பொறுப்பைக் கொடுக்காமலும் மக்கள் அமைச்சர்களுடன் நேர்த் தொடர்பு கொள்ளக் கூடியதாகச் செயற்படுவதே உங்கள் முதற் கடமையாக இருக்கவேண்டும். இவ்வாறு செயற்படாவிடின் திருக்குறளிலே குறளொன்று கூறுவது போல,

> "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பார் இலானும் கெடும்."

நிலைமையே தோன்றும். இன்று இருக்கின்ற சில அரசாங்க ஊழியர்கள்—அவர்கள் தமிழராக இருந்தாலும் வேறு எவராக இருந்தாலும்—தாங்கள் அமைதியாக வாழ முடியவில்லை என்று சொல்லுகின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. ஆகவே, நீங்கள் அந்தச் சூழ்நிலையை மாற்றல் வேண்டும்."

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து நாலில் இருபத்து நாலு மணி நேரத்தில் விழுந்த சிறிமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பண்டாரநாயக்கா அரசு மீண்டும் ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதில் ஐக்கிய முன்னணியாகி ஆட்சிக்கு வந்தது. இந்த அரசும் உருக்குலைந்துமூன்று கட்சிகளில் இரண்டு கட்சிகள் அரசிலிருந்து விலகிய பின் ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழில் தேர்தலை நடத்தியது. இத்தேர்தலில் சிறிமா பண்டாரநாயக்காவின் கட்சி பெருந் தோல்வியைத் தழுவியது. அக்கட்சியிலிருந்து ஆறு பேர் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

தொடக்கத்திலேயே திருக்குறளை நான் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினருக்கு அறிமுகப்படுத்தினேன். அந்த அறிமுக உரையைக் கீழே காண்க.

"தமிழ் நூல்களில் மிகச் சிறந்த நூலாக விளங்குவது திருக்குறள். உலகில் உள்ள நூல்களில் சமதர்மத்தைப்பற்றி மிகச் சிறப்பாகக் கூறுகின்ற நூல், திருக்குறளைப் போல் வெறெதுவுமில்லை. சமதர்மத்தைப் பற்றிப் பேசுகின்ற உருசிய மக்களும் திருக்குறளைத் தமது மொழியில் மொழி பெயர்த்துச் சிறப்பாகப் பாராட்டியிருக்கிறார்கள். இந்த நூலுக்குச் சொந்தமாக இருப்பவர்கள் தமிழ் மக்கள். எந்த ஒரு நாட்டிலும் ஓர் இனத்தை மற்றோர் இனம் அழிக்கும் நிலை இருக்கும் வரையும், சமதர்மம் நிலைக்க முடியாதென்பதை நான் சிறப்பாக இடது சாரிக் கட்சியினருக்கு விளக்க விரும்புகிறேன்."

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து ஆறாம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் ஐந்தாம் நாள் உரை நிகழ்த்தும் பொழுது ஒரு திருக்குறளை எடுத்துரைத்து விளக்கினேன்.

"ஒரு நாட்டிலே பொருளாதார முன்னேற்றம் உண்டாக வேண்டுமானால், அந்த நாட்டிலே அமைதி இருக்க வேண்டும் என்பதை இங்கு பலரும் பலமுறை வற்புறுத்தி இருக்கிறார்கள். திருக்குறளிலே ஒரு குறள் நினைவுக்கு வருகிறது.

"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு"

என்று திருவள்ளுவர் கூறுகிறார். எவ்வளவு வாய்ப்புக்கள் இருந்தாலும் அரசியல் அமைதியில்லாதிருந்தால்- அரசியல் நிலையாக இல்லாதிருந்தால்-நிலைத்த கொள்கைஇல்லாதிருந்தால் எந்தவிதமானநன்மையும் ஒருநாட்டுக்கு உண்டாகாது என்றுஅவர் கூறுகின்றார்."

இலங்கையிலுள்ள இரு பேரினங்களாகிய தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் பல ஆண்டுகளாகப் பல துறைகளில் மோதல்களும் போட்டி பூசல்களும் தோன்றி வளர்ந்து பெருகி வருகின்றன. அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்ட தமிழ் மக்களின் போராட்டங்களாலும் கிளர்ச்சிகளாலும் நாட்டில் அரசியல் உறுதிப்பாடும் அமைதியும் பாதிக்கப்பட்டுள. இதனால் இந்தத் திருக்குறளை இரண்டுமுறை நினைவூட்டல் இன்றியமையாததாயிற்று.

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டு நவம்பர்த் திங்கள் பதினெட்டாம் நாள் வரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செலவுத்திட்ட உரையாடலின் போதும் நான் பின் வருமாறு குறிப்பிட்டேன்.

"இலங்கையின் காவற்படைகளுக்கு ஒதுக்கப்பட்ட பாதுகாப்புச் செலவை ஏன் இவ்வாறுகூட்டுகிறீர்கள்? நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டின் அரசியல் அமைதி வேண்டும்; அரசியலில் உறுதிப்பாடு இருக்க வேண்டும்.

"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு"

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

ஒரு நாடு எல்லா வளங்களையும் பெற்றிருந் தாலும் அங்கு அரசியல் செம்மையாக இல்லா விட் டால் அந்த நாட்டில் எவ்வித வளர்ச்சியும் உண்டா காது என்பதே அவரின் கருத்து.

அபிவிருத்தியைப் பற்றிப் பேசும்போது இங்கு அரசியல் உறுதிப்பாடு'இல்லாதிருப்பதற்கு எங்களைப் பொறுப்பாக-தமிழினத்தைப் பொறுப்பாக-பயங்கர வாதப் புலிகள் என்று நீங்கள் கூறுபவர்களைப் பொறுப்பாகக் கூறுவது வழக்கமாகி விட்டது. இந்த நாட்டிலே வாழுகின்ற ஈரினங்களிடையே இன ஒற்றுமையை உண்டாக்க விரும்பினால், அவர்களுக் கிடையே மோதலைத் தடுக்க விரும்பினால் அரசு சில அடிப்படை நடவடிக்கைகளை உடனே எடுத்தல் வேண்டும்."

* * *

இனி ஆயிரத்துத் தொளாயிரத்துஅறுபத்தேழாம் ஆண்டு அக்டோபர் பத்தாம் நாள் நான் நிகழ்த்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வரவு செலவுத் திட்ட ஆய்வுரையில் இடம் பெற்ற மூன்று குறள்களை நோக்குவோம்.

"இந்நாட்டு அரசியல் தலைவர்களுக்கு நான் திருக்குறளொன்றை நினைவூட்ட விரும்புகிறேன். நாம் இன்று எத்தனையோ தலைவர்களைப் பார்க்கிறோம். எங்கள் அயல் நாடாகிய இந்தியாவிலே இருக்கும் தலைவர்களைப் பார்க்கிறோம். தலைவர்களாக விளங்கியவர்கள் எதிர்பாராமல் தங்கள் பதவிகளை உடனே இழக்கின்றார்கள். பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை வள்ளுவர் மிகவும் சிறப்பாகச் சொல்கின்றார்; பெரியவர்களாய் இருக்கின்றவர்கள் கற்புடைய பெண்ணைப் போல நடக்க வேண்டுமென்கிறார்.

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு."

ஒரு கற்புள்ள பெண் எவ்வண்ணம் தன்னைப் பேணிக்கொள்வாளோ அதனைப் போலத்தலைமைப் பதவி பெற்ற தலைவர்கள் தங்கள் பேச்சிலும் ஒழுக்கத்திலும் தங்கள் பெருமையை—தாங்கள் ஓர் இனத்தின் வழிகாட்டிகள் என்ற பொறுப்பைப் பேணி நடக்க வேண்டுமென்று வள்ளுவர் கூறுகின்றார்.

இந்நாட்டு அரசியற் கட்சித் தலைவர்கள்-மக்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட தலைவர்கள்-இதனை ஏற்று நடப்பார்களேயானால், இந்த நாட்டிலே இனக்கலவரமோ சாதிவெறியோ, சமயப்பிரிவினையோ தோன்றாது. எனவே இந்தத் திருக்குறளை அவர்களுடைய கவனத்துக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒரு நாடு வளமுடையது என்பதற்கு—ஒரு நாட்டு மக்கள் செம்மையாக வாழ்கின்றார்கள் என்பதற்கு—அடையாளம் யாது? அந்த நாட்டிலே பசி இருக்கக்கூடாது; அந்தநாட்டுமக்கள் உணவின்றித் தவிக்கக் கூடாது. ஆகையால், ஒரு நாட்டைச் செம்மையாக்க விரும்புகின்ற எந்த அரசினதும் முதற் கடமை அந்த நாட்டுக்குத் தேவையான உணவுப் பொருளைப் பெறுதற்கு முயலுதலாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வள்ளுவர் பெருமான் மிக அழகாக இதனை எடுத்துக் கூறியிருக்கிறார்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி."

என்பது அந்தக் குறள். உணவுப் பொருள்களைப் பெருக்க முடியாமல் பிற நாடுகளை நம்பி வாழுகின்ற எல்லா நாடுகளும், சிறப்பாகக் கிழை நாடுகள் உணர்ந்து போற்ற வேண்டிய ஓர் அறிவுரை இது.

ஆட்சியினராக இருந்தாலும் தனிப்பட்டசெல்வர்களாக இருந்தாலும், அவர்கள் எங்கே முதலீடு செய்யவேண்டும்? "அழிபசி தீர்க்கின்ற"—உணவுப் பொருள்களைப் பெறுகின்ற-அந்தத் துறையிலே தான் முதலில் முதலீடு செய்யப்படல் வேண்டும்.

ஒருவர் அரசுக்கு ஒரு கடிதம் எழுதினால்அவருக்கு உடனே மறுமொழி கிடைக்க வேண்டும். ஆனால் இன்று என்ன நடக்கிறது? எவ்வளவுக்குப் பொதுமக்களுக்கு இடர்ப்பாட்டை உண்டாக்க முடியுமோ அவ்வளவுக்கு இடர்ப்பாட்டை உண்டாக்குகிறார்கள். மறுமொழி பெறுதற்குச் "சந்தோசம்" அல்லது வேறு யாதேனும் கொடுக்க வேண்டியுளது. எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆட்சி செம்மையாக நடக்க வேண்டுமானால் மக்கள் எழுதும் கடிதங்களுக்கு உடனே அவர்களுக்கு மறு மொழி கிடைக்க வேண்டும். அவர்களுடைய வேலை களை மிக விரைவிற் செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாத ஊழியர்களைஉடனே நீக்கிவிட வேண்டும். வள்ளுவர்,

> "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல்."

என்று மிக அழகாகச் சொன்னார். ஓர் அரசு என்ன செய்யவேண்டும்? இந்தத் தொழிலை இந்த அதிகாரி செய்யத்தக்கவன் என அறிந்து, அவனிடத்திலே அதை ஒப்படைத்து, அவனைக் கொண்டு அதைச் செய்விக்க வேண்டும். இப்பொழுது என்ன நடக்கிறது? செய்யத் தகுதியில்லாதவர்களைச் சில பதவிகளிலே வைத்தமையால் அவர்கள்வேலைகளைச் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். ஆகையால் ஆட்சி நல்ல முறையிலே நடப்பதற்கு இடையூறாக இருக் கின்ற உத்தியோகத்தர் எல்லோரையும் இடமாற்றஞ் செய்ய வேண்டும். பொது மக்களுக்குத் தொண்டு செய்யத் தக்கவர்களை ஊக்க வேண்டும். பொது மக்கள் தங்களிடம் வந்து முறையிடாமல் இருக்கும் வகையில் ஆட்சி நடத்துதற்கு அமைச்சர்கள் தக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.''

* * *

இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றுதற்கு ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டு ஏப்பிரில் திங்கள் ஐந்தாம் நாள் தொடக்கம் சிங்கள இளைஞர்கள் மாபெரும் ஆயுதப் போராட்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈடுபட்டனர். இலங்கை அரசு பிறநாடுகளின் உதவி யினாலே ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்து, இந்த உண்ணாட்டுப் புரட்சிப் போரினை அடக்கியது.

இந்த உண்ணாட்டுப் போர் தொடங்குவதற்கு முதல் நாள் - அஃதாவது ஏப்பிரில் நாலாம் நாள்-நான் பாராளுமன்றத்தில் பேசிய பொழுது ஒரு குறளை எடுத்துக் கூறி விளக்கினேன். எனது உரை யின் ஒரு பகுதியினையும் அக்குறளையும் ஈண்டுக் காண்க.

"எங்கள் மொழி உரிமையைத் தந்து, கல்விப் பிரச்சனையைச் செம்மையாகத் தீர்த்து, நாமும் ஆட்சியிலே நேராகப் பங்குபற்றக் கூடிய முறையிலே ஆட்சி முறையைப் பிரித்தமைத்து இந்நாட்டின் இனங்களிலே ஒரு பெரும் இனமாக இருக்கின்ற தமிழ் மக்களுடைய ஆதரவையும் நீங்கள் பெறவேண்டும். இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்காவிட்டால் நீங்கள் பல தொல்லைகளுக்கு ஆளாக வேண்டிவரும். சென்ற பத்து மாதங்களுக்குள் "சேகுவேரா" இயக்கம் வளர்ந்து விட்டமையால் அவசர கால நிலையும் பிரகடனப்படுத்தப்பட்டுளது. எனவே, இவற்றைத் தீர்க்க வேண்டுமானால், நீங்கள் சொல்லும் சமதர்மம் உண்மையான சமதர்மமாக இருக்க வேண்டுமானால், இந்நாட்டிலே உள்ள எல்லா மக்களையும் சமமாக மதிக்கவேண்டும். அப்படிச்செய்யாவிட்டால் முன்னர் இரண்டு முறை நீங்கள் ஆண்ட காலத்தில் இடையிலே எப்படி ஆட்சியை விட்டு விட்டு ஓடவேண்டி வந்ததோ அந்த நிலை வந்து விடும். ஒரு குறளை உங்கள் கவனத் துக்கு எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்."

ஒரு மரத்திலே ஏறுகிறவன் நுனிக்கொம்புக்குப் போய் மேலும் ஏறினால் அது முறிந்து விடும்; அவனுடைய உயிருக்கும் முடிவு வந்து விடும். திருவள்ளுவர் கூறியது போல நீங்கள் மரத்தின் நுனிக் கொம்புக்கே போய்விட்டால் அது முறிந்து விழுந்து உங்கள் உயிரையும் பறித்து விடும். இஃது அரசியல் அறிவுரை. நீங்கள் சில சமயங்களில் இப்படிச் செய்து தான் முறிந்து முறிந்து விழுந்தீர்கள்.

எனவே, தமிழ் மக்களுடைய உரிமையைக் கொடுப் பதற்கும், அவர்கட்கு ஆட்சி உரிமையிலேபங்குகொடுப் பதற்கும், அவர்களைச் சமதர்ம முறையிலே நடத் துவதற்கும்நீங்கள் முயலாவிட்டால்நீங்கள் போகின்ற பாதை செம்மையான பாதையாக இருக்காது. நீங்கள் முன்னர் எப்படி விழுந்தீர்களோ அந்த வீழ்ச்சியை மீண்டும் அடையும் ஒரு சூழ்நிலை தான் உண்டாகும். இதனால் தான் அழுந்தி அழுத்திக் கூறுகிறோம். ஒரு சிறுபான்மை இனத்தின் துன்பத்தை-அவலத்தைச்- சொல்லும் தமிழ் மக்களின் பிரதி நிதிகளாகிய எங்கள் சொல்லைக் கேட்டு, இந்நாட்டிலே உண்மையான சமதர்மம் தோன்ற வேண்டுமெனில் எல்லோரையும் சமமாக மதித்து, எங்களுடைய உரிமையையும் மதித்து இந்நாட்டைச் செம்மையாக ஆளல் வேண்டும். அன்றேல் இந்நாடு என்றும் உருப்படாது."

உண்ணாட்டுப் புரட்சிப் போராட்டம் ஒடுக்கப் பட்ட பின்னர் அடுத்த மேத்திங்கள் இருபத்தோராம் நாள் பாராளுமன்றத்தில் பேசும்பொழுது நான் இந்தத் திருக்குறளை மீண்டும் நினைவூட்டினேன். அன்றைய பேச்சின் ஒரு பகுதியைக் கீழே காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"நீங்கள் எந்த அலுவலைச் செய்தாலும் பெருந் தன்மையோடு அதைச் செய்ய வேண்டுமென்று தான் நாங்கள் உங்களைக் கேட்கிறோம். இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தின் பிரதிநிதிகள் என்ற முறை யிலும் இதை நாங்கள் வற்புறுத்த வேண்டியிருக்கிறது. உங்களுடைய பெரும்பான்மைப்பலத்தால் நீங்கள் எல்லாவற்றையும் சாதித்துவிடலாம் என்று கூறினால் அதற்குச் சென்ற ஏப்பிரில்மாதம் நான்காம் திகதி இந்தச் சபையிலே நான் எடுத்தாண்ட திருக்குறள் ஒன்றை மீண்டும் நினைவூட்ட விரும்புகின்றேன். திருக்குறள் ஓர் சிறந்த அரசியல் நூல். உருசியமொழி உட்பட இன்று உலகின் பல மொழிகளில் அது மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. அந்த நூலின் ஒரு குறளை ஏப்பிரில் நான்காம் நாள் எடுத்துக் கூறி னேன். அடுத்த நாள் ஏப்ரில் மாதம் ஐந்தாம் திகதி இந்த நாட்டிலே பெரும் புரட்சிப் போர் தொடங் கிற்று.

**நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்**
**உயிர்க்கிறுதி ஆகி விடும்."**

என்ற குறளை அன்று எடுத்துக் கூறினேன். இஃது ஆளுகிறவர்களுக்கு வள்ளுவர் கூறிய வாய்மொழி. அரசியலில் இருப்பவர்கள் இடம் பார்த்து, காலம் பார்த்து, தகுதி பார்த்து எதையும் செய்யாமல் அளவுக்கு மிஞ்சிச் செய்துவிட்டால் உயிர்க்கு இறுதி யாகி—அரசாங்கத்துத்துக்கு இறுதியாகி — எல்லா வற்றுக்கும் இறுதியைத் தேடிவிடும் என்பதுதான் இந்தக் குறளின் கருத்து. ஏப்பிரில் நான்காம் நாள் நான் ஆற்றிய உரையிலே "சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஆகிய நீங்கள் முன்னர் இருமுறை இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யிலே தோற்றுவிட்டீர்கள். இந்த முறையும் அந்த நிலைமை உண்டாகக்கூடாது. ஆகையால் அமைதியாக ஆறுதலாகச் செயற்படுங்கள். அதிகாரம் உங்கள் கையில் இருக்கிறது என்று ஆணவம் கொள்ளக் கூடாது.'' என்று கூறினேன். மீண்டும் அதையே இன்றும் கூறுகிறேன்''.

* * *

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்து மூன்றாம் ஆண்டு நவம்பர்த் திங்கள் எட்டாம் திகதி பாராளு மன்றத்தில் ஒலித்த குறள்:

''உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.''

இலங்கைக்குச் சீனா உதவக் கடமைப்பட்டுள்ள தென்பதை யான் வற்புறுத்திப் பேசியபோது இக் குறள் இடம் பெற்றது. அப்பேச்சின் ஒரு பகுதியைக் கீழே காண்க.

''இப்பொழுது சீனாவோடு நீங்கள் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள். சீனாவாகுதல் எங்கள் மக்கள் படும்பாட்டை அறிந்து எங்களுக்கு உதவி செய்ய முன் வராதா? சீனாவுக்கு உலகத்திலே முதலாவது நட்பு நாடாக விளங்கும் இலங்கையிலே உள்ளமக்கள் அரைப் பட்டினி கால் பட்டினியாகத் துயருறும் இந்தவேளை யிலே சீனா உதவி செய்ய முன் வராவிட்டால் அந்த நாட்டை நாம் எப்படி நட்பு நாடாகக் கொள்ள முடியும்?

சீனாவோடு இந்த நாட்டு ஆட்சி மிகவும் நெருங் கிய தொடர்பு வைத்திருக்கிறது. ''சனவேகய'' என்னும் பத்திரிகைதான் இந்நாட்டு அரசியலை வழிப் படுத்துகின்றது என்று கூறுகிறார்கள். சீனாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொள்கையை உடையவர்கள்—சீனாவோடு தொடர்புடையவர்கள்—அந்தப் பத்திரிகையை நடத்துகிறார்கள். ஆகையால் இந்த அரசாங்கத்துக்குச் சீனாவுடன் மிக நெருங்கிய தொடர்புண்டு.

"உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு."

என்று திருக்குறள் கூறுவது போலச் சீனா இலங்கைக்கு உதவி செய்ய வேண்டும் அப்படிச் சீனா உதவி செய்ய முடியவில்லை என்றால், இப்பொழுது உருசியாவிலே கோதுமை விளைவுபெருகி இருப்பதால் அந்நாட்டைக் கேளுங்கள்; முறையாகக் கேளுங்கள். அந்நாடு எங்களுக்கு உதவி செய்யத் தக்க நிலையில் இருக்கின்றது. ஆனால் சீனாவுடன் பக்கச் சார்பாக இருந்துகொண்டு நீங்கள் உருசியாவிடம் ஒன்றும் பெறமுடியாது. நான் உருசியாவின் சார்பில் பேசவில்லை. உண்மையான நிலையைத்தான் உங்களுக்கு எடுத்துக் கூறினேன்."

* * *

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தி நாலாம் ஆண்டு செப்ரம்பர்த் திங்கள் ஏழாம் நாள் வெறும் வேல் வெற்றி தராது செங்கோல் தான் வெற்றி தரும் என்பதை என்னுரையின் இறுதியில் அரசுக்குப் பின்வருமாறு விளக்கினேன்.

"அண்மையில் கிராம சேவகர்கள் நியமனத்தை அதற்குப் பொறுப்பான அமைச்சர் கணிப்புப் பொறி மூலம் செய்வேன் என்று சொன்னார். பின் நான் அவரிடம் எழுதிக் கேட்ட பொழுது நம்பிக்கையுள்ளவர்களைத் தான் நியமிப்பேன் என்று கூறியிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கிறார். நம்பிக்கையுள்ளவர்கள் என்றால் என்ன? அரசியல் எதிரிகளாக இல்லாமல், தங்களுடைய அரசியல் கொள்கைக்கு மாறுபட்டவர்களாக இல்லாமல் தங்களுடைய பாராளுமன்றக் கட்சி உறுப்பினர்களிடம் நம்பிக்கையுள்ளவர்களை நியமித்தால் அவர்கள் ஒரு கட்சிக்கு உரிய படையாக, ஆளும் கட்சிக்கு உரிய படையாக மாறுவார்கள் என்பதை இங்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். இப்பொழுது ஏர் பிடிக்கும் படையினர் தான் இந்த நாட்டினுடைய அபிவிருத்திக்குத் தேவை. இன்று ஏர் பிடிக்கும் படையினரை உருவாக்குவதற்குரிய ஒரு சட்டத்தை உருவாக்கி வேலையற்றிருக்கும் வாலிபர்களை அப்படைக்கு உறுப்பினர்களாக்கினால் இந்த நாடு நல்ல வளம் பெறும் என்று கூறமுடியும். இதனை விடுத்துப் போர்ப்படையைப்பெருக்கி ஒரு நாட்டைச் சீர்திருத்த முடியாது.

> "வேலன்று வென்றி தருவது; மன்னவன்
> கோலதூஉம் கோடாது எனின்."

என்று திருக்குறள் கூறுகிறது, படையினாலே எந்த ஒரு அரசும் வெற்றியையும் அமைதியையும் காண முடியாது. இவற்றைச் செங்கோலினால்—நல்ல நீதி நிருவாகத்தினால் மட்டுமே காணமுடியும் என்பதை இந்த அரசுக்கு எடுத்துரைத்து எனது உரையை முடித்துக் கொள்கிறேன்."

□ □ □

ஆயிரத்துத் தொளாயிரத்தெழுப்தெட்டாம் ஆண்டுநவம்பர்த் திங்கள்இருபத்து நாலாம்நாள்வரவு செலவுத் திட்ட உரையாடலின் போதும் ஒரு திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குறளை எடுத்துக் கூறி எங்கள் நிலையை உறுதிப்படுத்தினேன். இந்தத் திருக்குறள் சிங்கள அமைச்சர்களையும் சிங்களப் பத்திரிகைகளையும் அமைதி இழக்கச் செய்தது.

இந்தத் திருக்குறளை எடுத்துரைப்பதற்கு முன் நான் அமைத்தகளத்தை அறிதல் இன்றியமையாதது. எனவேஎனது முன்னுரையை ஈண்டுக்குறிப்பிடுகிறேன்.

"இந்த நாட்டை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினர் தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்திலே கூறியபடி ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். புதிய பொருளாதார அமைப்பை உருவாக்குதற்கு இன்று இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஓர் அமைப்புத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம் என்று கூறுகிறார்கள். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றப் பல முயற்சிகளை அவர்கள் மேற் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், எங்கள் மக்களுக்கு எங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்திலே நாங்கள் கொடுத்தவாக்குறுதியை- சுதந்திர சமதர்ம தமிழீழம் ஒன்றை நிறுவ முயலுவோம் என்பதை - இன்னும் நாங்கள் நிறைவேற்றவில்லை என்பதை நாடு அறியும். தேர்தலிலே எங்களுக்குத் தங்கள் இறைமையை அளித்த தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியது எங்கள் கடமையாகும். இதனை மனிதப்பண்புள்ள எவரும் மறுக்க முடியாது.

"தமிழ் ஈழம் எங்கள் கோரிக்கை" என்று நாங்கள் கூறியதை இந்த நாடு மட்டுமன்று ஏனைய நாடுகளும் அறியும். சென்னையிலிருந்து வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்து எனும் ஏடும் ஆயிரத்துத் தொளாயிரத்து எழு பத்தெட்டாம் ஆண்டு யூன் திங்கள் இருபத்து ஆறாம் நாள் இதழில் வெளியிட்ட ஆசிரியருரையில் பின்வருமாறு கூறியுளது. ''பாராளுமன்றத்தில் முதன்மை எதிர்க்கட்சியாக இருக்கின்ற தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழருக்குத் தனிநாடு வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்தே சென்ற ஆண்டு தேர்தலில் போட்டியிட்டது.''

எனவே, புனித விடுதலைப் பணிக்கு எங்களை அர்ப்பணித்துள்ள நாம் எமது பணியை அரசியல் சூதாட்டமாகவோ, சேறு நிறைந்த அரசியல் விளையாட்டாகவோ ஆக்கமாட்டோம். எமது பணியைப் புனித பணியாக, நீங்களும் உங்கள் சனாதிபதியும் கூறுகின்ற தர்ம நெறியாகவே கொள்கிறோம். நாங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் கைவிடவோ, அவர்கள் எங்களுக்குக் கொடுத்த கட்டளையை மீறவோ எங்களுக்கு உரிமையில்லைஎன்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

தமிழீழக் கொள்கையையும் அதற்குரிய போராட்டத்தையும் கைவிட்டு சுயநலத்திற்காகவோ, உங்களிடம் ''நல்லபிள்ளைகள்'' என்று பெயர் பெறுவதற்காகவோ, ஆற்றலின்மையாலோ நாங்கள் உங்களுடன் இணையமாட்டோம். எங்களுடன் ஒட்டாத உங்களுடன் இணைவதிலும்-ஒத்துழைப்பதிலும் பார்க்கத் தற்கொலை செய்வது மாண்புமிகு செயலாகும்.

> ''ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
> கெட்டான் எனப்படுதல் நன்று''

என்று வள்ளுவர் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"நாங்கள் பெரும்பான்மை இனம்; இந்த நாட்டை ஆளும் இனம்; முப்படைகளையும் கொண்டு உங்கள் போராட்டத்தை முறியடித்து உங்களை அடக்கி ஆளும் அதிகாரம் படைத்த இனம். எங்கள் நல்லெண்ணம் இன்றி, கருணை இன்றி நீங்கள் இந்த நாட்டில் எந்த உரிமையைப் பெறமுடியும்? என்று நீங்கள் எங்களைக் கேட்கின்றீர்கள். ஏன் மலையுடன் உங்கள் மண்டையை மோதுகின்றீர்கள் என்று கேட்டு இங்கு அடிக்கடி பல உறுப்பினர்கள் பேசினார்கள். நாங்கள் பிறந்த நாட்டில்-நாங்கள் ஆண்ட நாட்டில்- அடிமைகளாக ஆக்கப்பட நாங்கள் விரும்ப வில்லை என்பதே இதற்கு எங்கள் மறுமொழியாகும்.

எங்கள் உரிமைகளுக்காக அகிம்சை நெறியில் நின்று போராட வேண்டியது எங்கள் கடமையாக இருக்கிறது. நாங்கள் வீரம் பேசவில்லை. நாங்கள் உண்மையைப் பேசுகிறோம்; வரலாற்றை வைத்தே பேசுகிறோம். நாங்கள் துட்டகைமுனுவைப்பற்றியோ எல்லாளனைப் பற்றியோ பேசவில்லை. சிங்கள இரத்தம், தமிழ் இரத்தம் என்று நாங்கள் பிரித்துப் பேச விரும்பவில்லை. எங்கள் வலி எங்களுக்குத் தெரியும். ஆனால், எங்கள் பக்கம் அறம் இருக்கிறது, எங்கள் பக்கம் நீதி இருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

நாட்டின் அபிவிருத்திக்காக எங்களுடன் சேர்ந்து ஒத்துழையுங்கள் என்று எங்களைப் பார்த்து ஐக்கிய தேசியக்கட்சி கேட்பது தர்மநெறிக்கு மாறானது. இப்பொழுது நேசக்கரம் நீட்டுகிறோம் பிடியுங்கள் என்று சொல்லுகிறீர்கள். முன்பு நீட்டிய நேசக்கரம் நாசக்கரமாகிவிட்டது. முன்பு நீட்டிய நட்புக்கரம் நஞ்சுக்கரமாக மாறிவிட்டது. இது வரலாறாகும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆயிரத்து தொளாயிரத்தெழுபதாம் ஆண்டு தொடக்கம் ஏழு ஆண்டுகள் சிறீலங்கா சுதந்திரக் கட்சி இலங்கையில் ஆட்சி செய்தது. இக்கட்சி தமிழர் ஒருவரை அமைச்சராக நியமித்தது. இந்த அமைச்சருடன் பல துறைகளில்முட்டி மோதவேண்டியிருந்தது. இவருக்கு நான் எழுதிய கடிதங்களிற் சிலவற்றைப் பாராளுமன்றத்திலே சுட்டிக்காட்டி உரைநிகழ்த்தினேன். இந்தத் திருக்குறளும் வேறொரு திருக்குறளுமுள்ள கடிதங்கள் ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டு திசம்பர்த் திங்கள் இருபத்தாறாம் நாள் நிகழ்த்திய உரையில் இடம் பெற்றன.

அவருக்கும் அவருடைய அரசுக்கும் சுடத்தக்கதாக எடுத்துக் காட்டிய இக்குறள்கள் இடம் பெற்ற பகுதிகளை ஈண்டுக் காண்க.

"சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது" என்பார்கள். தமிழரசுக் கட்சியை அழித்து விடலாம்; தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களை அடக்கி ஒதுக்கி விடலாம்; தமிழ்ப் பகுதிகளில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளைகளை நிறுவி ஆட்சி நடத்திடலாம்" என்று மனப்பால் குடித்துக் கொண்டு, தமிழ் மக்களின் கோரிக்கைகளைப்புறக்கணித்துத்தமிழின—தமிழ்மொழிக் கொலைகளில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கத்தைப் பதவிக்காக ஆதரிக்கும் நீங்கள் என்னுடைய கோரிக்கைகளை மதித்து எனது தொகுதித் தேவைகளை இலகுவில் நிறைவேற்றுவீர்கள் என்று எண்ணுவது மடமையிலும் மடமை.

> "ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
> கெட்டான் எனப்படுதல் நன்று."

என்பது திருக்குறள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்த அமைச்சருக்கு நான் எடுத்துக்காட்டிய மற்றைய திருக்குறள்,

"நன்றாற் றலுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை" என்பது.

அமைச்சருடன்பாராளுமன்றத்தில்மோதுவதைத் தவிர்ப்பதற்காகச் சில அவசர விடயங்கள் குறித்து நான் அவருக்கு எழுதிய கடிதங்கள் பொருட்படுத்தப் படாமையால் இத்திருக்குறளை எடுத்துக்கூறி அவரைத் தெருட்டினேன்.

*　　　*　　　*

பகாமாசின் தலைநகரான நாசோவில் நடை பெற்ற பொதுநல நாடுகளின் பாராளுமன்ற அவை யின் இருபத்தெட்டாவது மாநாட்டில் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் பத்தொன்பதாம் நாள் நிகழ்த் திய உரையிலே எடுத்துக் காட்டிய திருக்குறளைக் கடைசியாகக் காண்போம்.

அங்கு நான் நிகழ்த்திய உரையில் கூறியதாவது "சிறீலங்காவில் தேசிய சிறுபான்மை இனத்தவர்க ளான தமிழர்கள் தம்அரசியல் சுதந்திரத்துக்காகவும், சுய நிர்ணய உரிமைக்காகவும், அடிப்படை உரிமை களுக்காகவும் செய்யும் கிளர்ச்சிகள் பெரும்பான்மை இனத்தவரால் ஒடுக்கப்படுவதால் அந்நாட்டில் அடுத் தடுத்து வகுப்புக் கலவரங்கள் நடைபெறுகின்றன. இதனால் சிறீலங்காவிலுள்ள தமிழர்கள் தனிநாடு ஒன்றை நிறுவுதற்குப் போராட உந்தப்பட்டுளர். இந் நாட்டை அவர்கள் தமிழீழம் என்கின்றனர். தமிழரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெரிய அரசியற் கட்சியாகவும் சிறீலங்காப் பாராளு மன்றத்தில் இப்பொழுது பெரிய எதிர்க்கட்சியாகவும் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி எப்படியும் மதச் சார்பற்ற, சமதர்ம தமிழீழத் தனியரசை நிறுவுதலே தனது குறிக்கோள் எனப்பாராளுமன்றத்திலும் வெளி யிலும் பிரகடனஞ் செய்துளது.

எங்கள் கட்சியின் போராட்ட வழி அகிம்சையே. ஆனால் பெரும்பான்மை இனத்தவரின் பகைமை யாலும் புறக்கணிப்பாலும் ஆத்திரங்கொண்ட தமிழ் இளைஞர் சிலர் வன்செயல்களிலும் ஈடுபட்டுளர். பல தமிழ் இளைஞர்கள் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டுத் தடுப்புக் காவலில் பல மாதங்களாக விசாரணை இன்றி வைக்கப்பட்டுளர்.

சிறுபான்மை இனத்துக்கும் பெரும்பான்மை இனத்துக்குமிடையே ஏற்படும் மோதல்களில் தலை யிட்டுச் சமாதானமாகத் தீர்த்து, எல்லோர்க்கும் ஒரே தன்மையான தனி மனித சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் உறுதிப்படுத்தும் அதிகார முள்ள உலகளாவிய நிறுவகம் ஒன்றிருப்பின் சிறீலங்கா வில் மட்டுமன்றி ஏனைய பல நாடுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மனிதாபிமானமற்ற செயல் களையும் புறக்கணிப்புக்களையும் போராட்டங்களை யும் நிறுத்தலாம்.

எனது பேச்சை முடிப்பதற்கு முன், ஒரு நாட்டின் சிறுபான்மை இனத்துக்கும் பெரும்பான்மை இனத் துக்குமிடையில் தோன்றும் பிணக்குகளையும் எதிர்ப் பையும் மோதலையும் சமாதானமாகத் தீர்ப்பதற் குரிய வழி வகைகளை ஆராய்தற்கு இந்தப் பொதுநல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாடுகளின் பாராளுமன்ற அவை ஒரு குழுவை உடனே நிறுவ வேண்டுமென வற்புறுத்த விரும்புகிறேன். உடனே தேவைப்படும் உலக நிறுவகம் ஒன்றின் முன்னோடியாக இக்குழு அமையலாம்.

பல நாடுகளிலுள்ள இனப்பிரச்சினைகளைச் சமாதானமாகத் தீர்ப்பது சிறுபான்மை இனங்களுக்கு மட்டுமன்றிப் பெரும்பான்மை இனங்களுக்கும் உதவுவதாகும். அன்றியும் உலகில் இன்று நாள்தோறும் நடைபெறும் வன்முறைக் கொலைகளையும் வன்செயல்களால் உண்டாகும் அழிவுகளையும் நிறுத்தலாம். இந்த முயற்சியில் வெற்றி அடைந்தால் மட்டுமே தனி மனித சுதந்திரம், மனித உரிமைகள், பொறுப்புக்கள் என்பன பற்றி இன்று நாங்கள் மேற்கொண்டுள்ள உரையாடல் பயனுள்ளதாகும். உலகெங்குமுள்ள பெருமக்கள்-பண்புடையோர் இந்தப்பிரச்சனைகளைத் தீர்க்க முன்வரல் வேண்டும். அவர்களால் இப்பிரச்சனைகள் தீர்க்கப்பட்டால் மட்டுமே உலகில் அமைதி உண்டாகும். உலக அழிவையும் தடுத்து நிறுத்தலாம்.

அல்பேட்டுச் சுவைச்சர் போன்ற உலகப் பேரறிஞர்களால் மனித இனத்தின் பொது வேதமெனப் போற்றப்பட்ட தமிழ் மறையாம் திருக்குறள் இதனை வலியுறுத்தியுளது. பண்புடையவர்கள் இருப்பதால் இந்த உலகம் வாழ்கிறது. அவர்களின்றேல் அஃது அழிந்து விடும் என்று,

> ''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்
> மண்புக்கு மாய்வது மன்''

எனும் இக்குறள் எடுத்துரைக்கின்றது.''

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒரு குறளே போதும்*

இன்று எமது தமிழ்மறைக் கழகத்தின் பத்தாவது திருக்குறள் மாநாடு இத் தொல்காப்பியர் அரங்கிலே சிறப்புற நடைபெறுகிறது. முன்னைய மாநாடுகளைத் திருக்கோணமலை, நாவலப்பிட்டி, அனுராதபுரம், யாழ்ப்பாணம், கொழும்பு, சுளிபுரம், மாத்தளை முதலிய இடங்களில் நடத்தினோம். இப் பத்தாவது மாநாட்டை எனது ஊராகிய வேலணையில் நடத்துகிறோம்.

உலகம் முழுவதையும் ஒன்றாகக் கொண்டு வாழும் நெறிவகுத்த திருக்குறளைப் போற்றும் நாங்கள், எங்கள் ஊர், மொழி, இனம் என்று பிரித்துப் பேசுவது பொருத்தமுடைத்தா எனப் புலவர் எண்ணலாம்; எண்ணவும் வேண்டும். தன்னைத் திருத்தி உலகத்தைத் திருத்துதல்; தன்னைக் காதலித்து உலகத்தைக் காதலித்தல்; தன்னை உயர்த்தி உலகத்தை உயர்த்துதல் எனும் இம்முறை

---

* வேலணையில் நடைபெற்ற தமிழ்மறைக் கழகத்தின்பத்தாவது திருக்குறள் மாநாட்டில் 18-5-62இல் நிகழ்த்திய தலைமை உரையைத் தழுவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யிலேயே திருக்குறள் தனிமனிதனையும் உலகத்தையும் தனித்தும், தொடர்பு படுத்தியும் செம்மைப்படுத்த முயல்கிறது.

தன்னைப் பத்துத் திங்கள் சுமந்து பெற்ற தாயைப் போற்றாத ஒருவன் பிறருடைய தாய் மாரைப் போற்றல் முடியுமா? ''போற்றுவேன்'' என அத்தகைய ஒருவன் கூறின் அஃது இயற்கை நியதி யோடு இசையுமா? எனவே தான் பிறருடைய ஊரை, மொழியை, இனத்தைப் போற்றும் பண்பாடு பெறு தற்கு ஒருவன் தன் ஊரை, மொழியை, இனத்தைப் போற்றும் பண்பு உடையவனாயிருத்தல் வேண்டும். இவ்வாறு போற்றுவது அவனுடைய முதற் கடமையு மாகும். இதனை வள்ளுவரே குடிசெயல்வகை எனும் அதிகாரத்திற் சிறப்பாக விளக்கியுளார்.

உலகத்திலுள்ள மக்கள் ஒவ்வொருவரோடும் ஊரும் பேரும் இனமும் பிரிக்க முடியாமல் சேர்ந்துள. ஓரினம்வாழும் பகுதியில்,முன்னர் அறியாத ஒருவரைக் காணும்ஒருவர்,முதலில் அவருடைய ஊரையும்,பின்னர் பெயரையும் வினவுகிறார். அகப்பொருளிலக்கியத் திலும் ஊர்பேர் வினாதல் துறையாக அமைந்துளது. பிற நாடொன்றில் நம்மைச் சந்திக்கும் அந்நாட்டவர் கள் நம் நாட்டையும், இனத்தையும் வினவிப் பின் பெயரையும் கேட்பர். இயல்பாக உலகம் முழுவதும் நடைபெறும் இந்நிகழ்ச்சி ஒருவனுக்கு அவனுடைய ஊருடனும் இனத்துடனும் உள்ள இயற்கைத் தொடர்பை நன்கு காட்டுகிறது. பெரும்பாலும் இனத்துள் மொழியும் அடங்கும். தன் ஊரில், மொழி யில், இனத்திற் கொண்ட பற்றுப் பிறருடைய ஊர் மொழி இனங்களை எவ்வகையிலேனும் பாதிக்காமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருத்தல் வேண்டும். பாதிக்குமாயின் அது வெறியாகிவிடும். இவ்வெறி கடிந்து ஒதுக்கப்பட வேண்டியது.

எவ்வாறு ஒரு மனைவி தன் நாயகனிடத்துக் கொள்ளும் அன்புக்கும் தன்மக்கள், உடன் பிறந்தார், முதலானோரிடத்துக் கொள்ளும் அன்புக்கும் முரண்பாடு இல்லையோ, அவ்வாறே ஒருவன் தன் ஊர், மொழி, இனம் முதலியவற்றிற் கொள்ளும் பற்றுக்கும் பிறருடைய ஊர், மொழி, இனம் முதலியவற்றிற் கொள்ளும் பற்றுக்கும் முரண்பாடில்லை என்க.

எங்கள் ஊருக்கு அருந் தொண்டாற்றி வரும் வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கத்தினர் இம் மாநாட்டைத் தங்கள் சங்க ஆதரவில் நடத்துதற்கு முன் வந்தனர்.

இம்மாநாட்டை நடத்துதற்குப் பல நாள்கள் அயராது உழைத்தோம்; பெரிய பந்தலினையும் சிறப்புற அமைத்தோம். நேற்றுக்காலை பெய்த பெரு மழை எங்கள் மாநாட்டின் சிறப்பைக் கெடுத்து விடுமோ என்று ஏங்கினோம். இன்று மழை பெய்திருப்பின் இவ்வளவு பெருந்தொகையாக மக்கள் இப்பந்தலில் இருக்க முடியாது. மழையின் கெடுக்கும் ஆற்றலையும் எடுக்கும் ஆற்றலையும் வள்ளுவர் தம் நூலின் இரண்டாம் அதிகாரத்திலே விளக்கியுளர். ''பெய்யப் போகிறேன்'' என்று வெருட்டிய மழை நேற்றிரவு தொடங்கி ஓய்ந்து விட்டது. இன்று காலை அயலிலுள்ள யாழ்பாணத்திற் பெருமழை பெய்தது. ஆனால் எம் ஊரில் ஒரு துளியும் விழவில்லை. மழை எங்களுக்கு உதவி செய்துளது. இதனை ஓர் அற்புதம் என்று கருதி நான் உங்களுக்கு உரைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

''குடிசெய்வல் எனும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந்துறும்'' எனும் வள்ளுவர் வாக்கினை நினைவுறுத்தவே கூறினேன். உயர்ந்த நோக்கத்தோடு அயராது உழைக்கும் மக்களின் பணி என்றும் வெற்றி அளிக்கும். இதனை எல்லா மக்களுடைய உள்ளத்திலும் பதியச் செய்தற்காக வள்ளுவர் ஓர் உத்தியைக் கையாண்டுளர். அவர்கள் கேட்காமலே, தெய்வம் அவர்களுக்கு உதவுதற்கு விரைந்தோடும் என்று கூறி உண்மையாக உழைப்பவர்களுக்குத் தெய்வத்தையும் அடிமையாக்கிக் காட்டுகிறார்.

மக்கள் உள்ளத்தில் மறைந்து உறைந்து கிடக்கும் ஆற்றலைக் கிளர்ந்தெழச் செய்து எல்லா மக்களுக்கும் மான உணர்வையும் பெருக்கத்தையும் திருக்குறளைப் போலக் கொடுக்கத்தக்க வேறு நூல் இவ்வுலகில் இல்லை எனலாம். மக்கள் உள்ளத்திலே உணர்ச்சியை எழுப்பவும், ஊக்கத்தை வளர்க்கவும் ஒரு சொல்லே போதுமானது. வேடனாகிய குகனை இராமர்முதலிற் கண்டபொழுது ''தோழன்'' என்று அழைத்தார். இந்தத் 'தோழன்'' என்ற சொல் குகனை ஆண்டு விட்டது. பரதன் நாற்படையுஞ்சூழ இராமனைக் காட்டிற் கண்டு வணங்கி அயோத்திக்கு அழைத்துப் போவதற்காகக் கங்கைக் கரைக்குச் சென்றான். அவனையும் படையையும் கண்ட குகன் அவனுடைய நோக்கத்தை அறியாமல் இராமனுக்கு இடுக்கண் விளைக்க அவன் வந்துளன் என்றெண்ணிப் பெருஞ் சீற்றங்கொண்டு பேசுகிறான்.

''ஆழ நெடுந்திரை ஆறுகடந்து இவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலகிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இங்கே ''தோழமை'' என்ற ஒரு சொல் அவனை ஆட்கொண்டமையை நாம் நன்கு காண்கிறோம்.

மணிவாசகருடைய திருவாசகத்திலீடுபட்டுருகிய இராமலிங்க வள்ளலார்,

''வருமொழி மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையுமென் னுடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னிலினிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பியயல் கூடுவதேன் கூறுதியே''

என்று பாடி ஒரு மொழியின் சொல்லின் பெருமையைப் புலப்படுத்துகிறார்.

ஒரு சொல்லுக்கே இவ்வளவு ஆற்றலுண்டெனில் ஒரு குறளின் ஆற்றல் எத்தகையதாயிருக்கும்? திருக்குறளின் கடைசிப் பாலான காமத்துப்பாலில் உள்ள ஒரு குறளே கலாநிதி கிரௌல் எனும் சேர்மனியரைத் தமிழ்ச் செய்யுள்களைப் பாராட்டுதற்கும் திருக்குறளைப் படித்ததற்கும் தூண்டியது எனக் கலாநிதி லாசராசு என்பவர் கூறியுளர். கலாநிதி கிரௌல் திருக்குறளைப் படித்தது மட்டுமன்றி, சேர்மன் மொழியில் அதனை மொழிபெயர்த்துமுளர். அக்குறள் எல்லோரையும், சிறப்பாகப் பிறநாட்டவர்களை ஈர்த்து ஈர்த்து வியப்படையச் செய்யும் குறளாகும்.

''இருநோக் கிவள்உண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.''

என்பதே அந்தக் குறள். காதலியின் கண்ணில் இரண்டு பார்வைகள் உள. ஒன்று நோய்ப்பார்வை; மற்றையது மருந்துப்பார்வை. முதலாவது பார்வை நோயை உண்டாக்கும். இரண்டாவது பார்வை அந்நோயை மாற்ற மருந்தாகும். இவ்வளவு நுட்பமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காதலியின் பார்வைகளை இந்த உலகத்தில் வேறெப் புலவரும் தீட்டிக்காட்டவில்லை.

திருக்குறளிலுள்ள குறள்களில் ஒன்றே மக்களை உய்விக்கப்போதுமானது. நம்மக்களுடைய உள்ளத்தில் ஒரு குறள் முறையாகப் பதியுமானால் நம்மினம் விரைவில்உயர்வடையும். நம் உயர்வைக்கண்டு உலகம் உயர்வுபெற முயலும்.

திருக்குறளின் பெருமையை—அது "பொய்யா மொழி" என்பதை-"மெய் வைத்த சொல்லு"டைய தென்பதை இன்னும் நம் மக்கள் நன்கு உணரவில்லை. திருக்குறள் தோன்றிய காலந்தொட்டுப் புலவர் பெரு மக்கள் திருக்குறளைத் தமிழ்மறை என்று போற்றி அதன் சிறப்பியல்புகளைப் பலவாறு புகழ்ந்தார்கள்.

"தமிழிலே சிறந்த மறை இல்லாத பெருங்குறை யைத் திருக்குறள் நீக்கிவிட்டது. உலகத்து மறைகளில் எல்லாம் இது சிறந்தது, இதனைப்படித்த பின் படிக்க வேறொரு நூலுமுண்டோ? இது மக்களின் உள் ளிருள் நீக்கும் விளக்கு; எல்லாச் சமயத்தவரும், எல்லா நாட்டவரும் போற்றும் நூல். இந்த முப் பாலின் மிக்க நூல் வேறில்லை. இதில் இல்லாத பொருளில்லை. வடமொழி வேதங்களின் ஆற்றல் அழிந்து விடுமென்று அவற்றை ஏட்டின் புறத்தெழு தார். திருக்குறளை எழுதினாலும் அதன் ஆற்றல் அழியாது. வடமொழி வேதங்களை அந்தணர்களே ஓதலாம். தமிழ்மறையை யாரும் ஓதலாம். எல்லாருக் கும் ஒரு நீதிகூறும் பெருமையுடையது. இத்தமிழ் மறை. உள்ளுந்தோறும் உள்ளம் உருக்குதல் வள்ளுவர் வாய்மொழியின் மாண்பாகும்." இவ்வாறு பற்பல வகையாகத் திருக்குறளின் தனிச்சிறப்புக்கள் புலவர் களால் எடுத்துக் காட்டப்பட்டுள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின் குறள்வெண் பா"

என்று உள்ளம் உருகிக் கவுணியனார் எனும் புலவர் பாடினார்.

பரந்த பொருளெல்லாம் பாரறியச் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்ல வல்லவர் வள்ளுவரேயன்றி வேறு எவருமில்லை என அரிசில்கிழார் எனும் புலவர் போற்றினார்.

திருக்குறளின் சுருங்கச் சொல்லி விரித்து விளக்கும் ஆற்றல், புல்லின் நுனியிலுள்ள தினையரிசியிலும் சிறிய பனி நீர் உயர்ந்த பனையைத் தன்னுட் கொண்டு காட்டுதலைப் போன்றதென உதாரணம் காட்டி விளக்கியுளர் கபிலர்.

"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்"

என்பது கபிலர் வாக்கு.

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சில சொல்லல் தேற்றா தவர்."

என்று கூறும் வள்ளுவர் பெருமான் தமது கூற்றுக் கிணங்க மாசற்ற சில சொல்லால் உலகத்தார் உள்ளுவதெல்லாம் அளந்து உரைத்துளர். சுருங்கக் கூறி எல்லாவற்றையும் விளங்க வைக்கும் ஆற்றலில் தமிழ் மறைக்கு ஈடாக இந்த உலகத்தில் வேறு எந்த நூலையும் கூறல் முடியாது.

கடுகைத் துளைத்து எழு கடலைப் புகுத்திக் குறுகத் தறித்த குறள் என்று இடைக்காடனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூறிப் பாராட்டினார். ஔவையாருக்குக் கடுகு கூடப் பெரிதாகத் தோன்றியது. எனவே, சின்னஞ் சிறிய அணுவையே பொருத்தமானது எனக்கருதினார்; ''அணுவைத்துளைத் தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்'' என்று பாடி வியந்தார்.

தமிழ்ப் புலவர்களும் தமிழ் அறிஞர்களும் மட்டு மன்றிப் பிற நாட்டறிஞர்களும் திருக்குறளைப் பாராட்டியிருக்கின்றார்கள். எம். ஏரியல் எனும் பிராஞ்சு நாட்டுப் பேரறிஞர் திருக்குறளைப் பற்றிக் கூறியதைப் பாருங்கள் :

''தமிழ் இலக்கியங்களில் தலைசிறந்து விளங்குவது திருக்குறளே. மக்களின் உள்ளக் கருத்துக்களை உயர்ந்த தூய்மையான பாங்கில் உரைக்கும் நூல் களில் அஃதும் ஒன்றாகும்'' ஏரியலின் இந்தக் கூற்றினைக் காந்தியடிகளும் திருக்குறளினைப் பற்றிய தமது கருத்துரையில் குறிப்பிட்டுளர்.

கலாநிதி கிரௌல் எனும் சேர்மன் நாட்டுச் சிறந்த அறிஞர் ''திருக்குறளின் ஈர்த்தாட் கொள்ளும் திறனை எந்த மொழிபெயர்ப்பும் எடுத்துக்காட்ட முடியாது. அது வெள்ளிச்சரிகைப் பின்னலிட்ட பொன் அப்பிள்'' என்று திருக்குறளின் சிறப்பைத் தீட்டிக் காட்டினார்.

''சாள்சு இ. கவர் எனும் ஆங்கிலேயர் திருக் குறளை ஒரு கல்விக்களஞ்சியம், பாவலர்க்குறுதுணை, ஒப்புயர்வற்ற சொற்றிறம் நிறைந்த ஒழுக்க நூல்'' என்று போற்றினார். பார்சிவல் பாதிரியார் ''திருக் குறளைப்போல நீதியுரைகளை அழுத்தம் திருத்த மாகச் செய்யுள் நடையிற் கூறும் நூல்களை வேறெம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மொழியிலும் காணல் முடியாது'' என்பதை வற்புறுத்தினார்.

பேராசிரியர் எம். உவின்ரர்நிச்சு திருக்குறளின் சிறப்பியல்புகளைப் பின்வருமாறு வகுத்துரைத்தார். ''திருவள்ளுவர் எம்மதத்துக்கும் உரியவரல்லர்; எல்லா மதத்துக்கும் உரியவர். சாதி மதம் வகுப்பு எனும் பிரிவினைகளைத் திருவள்ளுவர் கடந்து நிற்கிறார். அவருடைய அருங்கூற்றுக்கள் மனித குலத்துக்குப் பொதுவான நீதியும் அறிவுரைகளுமாகும். இந்நூல் பிறந்த நாட்டிலே பல நூற்றாண்டுகளாகப் பாராட்டப்பட்டும் போற்றப்பட்டும் வருகின்ற பெருமைக்கு மட்டுமன்றி, மேனாட்டறிஞர் பலராலும் வியந்து பாராட்டப்படும் பெருமைக்குமுரியது?'' அவருடைய இந்த உரை திருக்குறளில் அவருக்குள்ளஈடுபாட்டை நன்கு புலப்படுத்துகின்றது.

''இந்திய இலக்கியத்திலும் உலக இலக்கியத்திலும் தலைசிறந்த படைப்பெனத் திருக்குறள் கொள்ளப்படுவது நியாயமானதே. இதற்கு அதனுடைய கலைத்திறன் மட்டுமன்றி உலகிலுள்ளமக்கள் எல்லோர்க்கும், எல்லா நாட்டுக்கும், எக்காலத்துக்கும் ஏற்ற விழுமிய மனிதப் பண்புக் கருத்துக்கள் அந்நூல் முழுவதும் இழையோடுவதே பெரும்பாலும் காரணமாகும்'' என்று உருசியப் பேரறிஞரான அலச்சாந்தர் பயாதி கோசிக்கி திருக்குறளின் திறப்பாட்டை வியக்கின்றார்.

திருக்குறளின் அருமை பெருமைகளை அறிந்த பிறநாட்டுப் பேரறிஞர்கள் இருபத்தைந்துக்கு மேற்பட்ட மொழிகளில் திருக்குறளை மொழிபெயர்த்திருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பல துறைகளில் கலாநிதிப் பட்டம் பெற்ற சேர்மனியப் பேரறிஞர் அல்பேட்டுச் சுவைச்சர் சிறந்த ஆராய்ச்சியாளர், தத்துவ அறிஞர், புகழ் பூத்த மருத்துவர், மத்திய ஆபிரிக்காவிலுள்ள தொழு நோயாளருக்கு மருத்துவத் தொண்டு செய்வதையே தம் குறிக்கோளாகக் கொண்ட பெருந்தொண்டர். இவர் திருக்குறளைப்பற்றி எழுதியிருக்கும் ஆராய்ச்சி உரையைத் தமிழ் மக்கள் எல்லோரும் நன்கறிதல் வேண்டும். இவர் திருக்குறளைப் பகவத்கீதை மனு தர்ம சாத்திரம் முதலிய நூல்களோடு ஒப்பிட்டு அவற்றுக்கில்லாத தனிச்சிறப்புக்கள் திருக்குறளி லிருப்பதை எடுத்து விளக்கியிருக்கிறார். உலக வாழ்வு மாயை என்பது போன்ற கொள்கைகள் பரவியிருந்த காலத்தில் உலகம் உண்மையானது, வையகத்தில் வானக வாழ்வை வாழலாம் என்று அழுத்திக்கூறி, அவ்வாறு வாழ்தற்கு வழிவகுத்தது திருக்குறள் என்றுரைத்து அதன் சிறப்பை அவர்வியக்கின்றார். "உலக இலக்கியத்திலே இவ்வளவு சிறந்துயர்ந்த ஞானம் வேறொரு நூலிலும் கூறப்படவில்லை" என்பது அவர் ஆராய்ச்சியின் முடிபாகும்.

எமது தமிழ்மறைக் கழகத்தின் ஐந்தாவது திருக்குறள் மாநாடு 1957இல் கொழும்பில் நடைபெற்றபோது அம்மாநாட்டுக்கு வருகை தருமாறு கேட்டு, நான் அவருக்குக் கடிதம் எழுதினேன். தாம் வரமுடியாமை குறித்து அவர் எனக்கு ஒரு தந்தி அனுப்பி விட்டுக் கடிதமும் எழுதினார். அக்கடிதத்தின் சில பகுதிகளை இங்குக் காண்க.

"இந்திய சிந்தனையும் அதன் வளர்ச்சியும்" எனும் எனது நூலில் யான் திருக்குறளைப்பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எழுதியிருப்பதை நீங்கள் போற்றுவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். யான் திருக்குறளை முதன் முறையாகப் படித்தபொழுது அதனுட் பொதிந் திருந்த கருத்துக்கள் என்னை ஆட்கொண்டு விட்டன. அறத்தினை நுட்பமாகவும் திட்பமாகவும் உரைக்கும் நூல்களுள் அறவாழ்வை முற்றமுடிய எடுத்துரைக்கும் நூல் திருக்குறளேயாகும். ஐரோப்பிய நாட்டு மக்கள் பலரைத் திருக்குறளைப் படிக்கச் செய்துள்ளேன். திருக்குறளின் உயர்ந்த கருத்துக்கள் அவர்களையும் ஆட்கொண்டுள்ளன.

இரண்டாவது உலகப் பெரும்போர் நடந்திருக்கா விட்டால், தென்னிந்திய மக்கள் தெய்வத் திருக்குற ளுடன் எவ்வாறு தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்பதை நேரிலே கண்டறிந்து கொள்ள அங்கு வந்திருப்பேன். இப்போரினால் ''இலம்பெறேனில்'' 1937 ஆம் ஆண்டு தொடக்கம் 1948ஆம் ஆண்டு வரை எனது வைத்தியசாலையை மேற்பார்வை செய்ய வேண்டிய கடமையில் ஈடுபட்டிருந்தேன். இதன் பின்னரும் ஒரு பெரும் பிரயாணத்தைச் செய்யக்கூடிய நிலைமை உண்டாகவில்லை.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய இப்பெருநூலை இப்பொழுதும் மக்கள் பெரிதும் போற்றுகிறார்கள் என்பதை உங்கள் வாயிலாக அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். இத்திரு நூலி னாலே வழிகாட்டப் பெறும் நாடுகள் யாவும் என்றும் இந்நூலைப் போற்றி நல்வாழ்வு வாழ்வதாக.''

இவ்வாறு தமிழ் நாட்டறிஞர்களும் பிற நாட்டறி ஞர்களும் பாராட்டும் ஈடிணையற்ற சிறப்புக்களைக் கொண்ட திருக்குறளை இன்னும் எம்மக்கள் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மறை எனக்கொண்டு போற்றவில்லை. தமிழ்மறை எனும் வழக்குப் புலவர் நாவுடன் நின்றதேயன்றிப் பொதுமக்கள் வாயிலே பயிலவில்லை. இந்தப் பெருங் குறையை நீக்கித் திருக்குறளே தமிழ்மறை என்ற கருத்தை மக்கள் உள்ளத்தில் நன்கு பதிப்பதற்காகவே எமது கழகத்துக்குத் தமிழ்மறைக் கழகம் என்று பெய ரிட்டோம். எமது இத்தமிழ்மறை இயக்கம் தமிழ் மக்கள் மறந்து ஒதுக்கினவற்றை நினைவூட்டி மீண்டும் மலரச் செய்யும் இயக்கமாகும். தமிழ் இனத்தின் பெருஞ்சாபக் கேட்டுக்கும் குருட்டாட்டத்துக்கும் காரணம் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு வாழ் வின் துறையனைத்திலும் முதன்மை கொடாமையே யாகும். தனித்தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம், எல்லாந்தமிழ் இயக்கம் எனும் இவற்றை எல்லாந் தழுவி இவற்றுக்கு மூலமாக ஒளிர்வது இத்தமிழ்மறை இயக்கம்.

சென்ற பத்தாண்டுகளாக எமது தமிழ்மறைக் கழகஞ் செய்த பணியால் இன்று தமிழ்மறை எனுஞ் சொல் தமிழ் மக்கள் நாவில் நன்கு பயிலத் தொடங்கி யுளது. திருக்குறளின் சிறப்பை மக்கள் உணரத் தொடங்கியுளர். திருவள்ளுவர் திருநாளை ஊர் தோறும் கொண்டாடுகிறார்கள். வீடுகளில் வைத்து வணங்குதற்குத் திருவள்ளுவருடைய படம் வேண்டும் என்று கேட்கிறார்கள். விரைவிலே சிறந்த படம் ஒன்றை எமது கழகம் வெளியிடும். வீடுதோறும் எல்லாத் தமிழரும் சாதிமத வேறுபாடின்றி வள்ளு வரைக் கொண்டாட வேண்டுமென்றும் வற்புறுத்தி வருகிறோம். இதுவும் விரைவிற் செயற்படும் அறிகுறி கள் காணப்படுகின்றன. திருவள்ளுவர் தொடர் ஆண்டைப் பலர் வழங்கத் தொடங்கியுளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திருக்குறளோடு நம்வாழ்வைப் பலதுறைகளிலே பிணைத்தற்கு இத்தகைய செயல்கள் இன்றியமையாதன. வழுக்கும் நிலத்தில் நடப்பவருக்கு ஊன்று கோல் உதவி செய்யும். இது போல வாழ்விலே வழுக்கி விழாமல் தொடர்ந்து நடப்பதற்கு-சிறந்து வாழ்வதற்கு-திருக்குறள் ஊன்று கோலைப் போல உதவுகிறது.

''இழுக்க லுடையுழி ஊற்றுக் கோலற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்'' என்று இந்த

உண்மையினைத் திருவள்ளுவரே சிறப்பாக எடுத்து விளக்கியுளர். திருக்குறளாகிய ஊன்று கோலைக் கையிற் பிடித்துக் கொண்டால் வாழ்வுப் பயணத்தில் இடையூறு உண்டாகாமல் அது காப்பாற்றும். இதற்காகத்தான் ''திருக்குறளைப் படியுங்கள், தமிழ்மறை என்று போற்றுங்கள்; அது காட்டும் வழியில் வாழுங்கள்'' என்று வற்புறுத்தற்குப் பல வழிகளில் முயல்கின்றோம்.

வாழ்விலே வரும் துன்பங்களை நீக்கி வெற்றி காணுதற்கு ஒரு சாமியார் அருள் செய்கிறார் என்றால், அவரைத் தேடிஓடாத மக்களை இவ்வுலகில் காண்பது அரிது. ஆனால் உலகில் நடப்பது என்ன? சாமியார்கள் உலகை ஏமாற்றுகிறார்கள்; சாமியார்களின் சாயம் வெளிறியவுடன் மக்கள் அவரைக் குட்டிக் கலைக்கிறார்கள். துன்பம் துடைத்து வெற்றி பெற்று, இன்பத்தை ஈட்டுதற்குத் தக்க வழியைத் திருக்குறள் காட்டுகிறது. எனவே, திருக்குறளைவிடச் சிறந்த சாமியார் இவ்வுலகில் இல்லை என்பதை மக்கள் உணரல் வேண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாட்டை ஆளும் தலைவர்கள், அமைச்சர்கள், பெற்றோர்கள்,பிள்ளைகள், காதலர்கள்,தூதுவர்கள், நண்பர்கள், பகைவர், பெண்கள், செல்வர், ஏழைகள், வணிகர், மருத்துவர், உழவர், நடுவர், சான்றோர், மாணவர், விருந்தினர் முதலானோருக்கும், இவர் களைப் போன்ற பிற வகையினருக்கும் திருக்குறள் எந்நிலைமையிலும் எச்சூழலிலும் வழிகாட்டுகிறது.

துன்பம் வரும் பொழுதும், பிறரால் தீமை விளையும் பொழுதும், சினம்வரும் பொழுதும், நோயால் வருந்தும் பொழுதும், பொறாமை அழுக்காறு புறங் கூறல் முதலியவற்றுக்கு ஆளாகும் பொழுதும், பகைமை உண்டாகும் பொழுதும், செல்வம் சேர்ந்த பொழுதும், வறுமையால் வாடும்பொழுதும், கொலை களவு, கள், காமம், பொய், சூது முதலிய பெரும் பாவங்களிலீடுபடும் பொழுதும், சோம்பல், தளர்ச்சி, அச்சம், கலக்கம், மயக்கம் முதலியன உண்டாகும் பொழுதும், இன்னோரன்ன பிற நிலைமைகளிலும் எப்படி ஒழுகி உய்தியும் உயர்வும் அடையலாம் என்பதைத் தமிழ் மறை எடுத்துக் கூறுகிறது.

சுருங்கக் கூறின் வாழ்வின் எல்லாத் துறையிலு முள்ளவர்களுக்கு அவர்களுடையவாழ்வில்உண்டாகும் எல்லாச் சூழ்நிலைகளிலும் அது வழி காட்டுகிறது எனலாம்.

இன்று தனிமனிதனுடைய வாழ்வையும் சமுதாய வாழ்வையும் பாழாக்கும் கொடுமைகள்எல்லாவற்றை யும் திருக்குறள் எடுத்துக்காட்டிக் கடிந்துளது. தனி மனிதன் தன்னையும் திருத்திச் சமுதாயத்தையும் திருத்தி உலகைத் திருத்த அது வழிகூறுகிறது. ஒவ் வொருவரிடத்துமுள்ள மனிதப் பண்பை அது எடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போட்டுக் காட்டுகிறது, ஒருவருடையஉள்ளத்திலுள்ள அழுக்கை அது கண்ணாடிபோல் அவருக்கு நன்கு காட்டுகிறது; ஒவ்வொருவருடைய நிலைமையிலும் உள்ள குறைகளைக் காட்டி உயருதற்கு வழியையும் உரைக்கிறது. அதனில் ஈடுபடத் தன்னம்பிக்கையை யும் தளரா முயற்சியையும் அஃது உண்டாக்குகின்றது; எண்ணியதை எண்ணியபடி பெறலாம் என்று முழங்கு கிறது; ஊக்கமெனும் ஊசிமருந்தை ஏற்றித் தாழ்வு மனப்பான்மையைப் போக்குகிறது.

இத்தகைய பெரு நூலை-அறிவுக் களஞ்சியத்தை -ஆற்றல் தரும் அரு மருந்தை-இன்பச் சுரங்கத்தை-என்றும் காப்பாற்றும் தமிழ் மறையைப் படியுங்கள், போற்றுங்கள், பயன்படுத்துங்கள் என்பதே உலகத் துக்கு எமது கழகம் விடுக்கும் வேண்டுகோளாகும்.

''அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்''

எனும் ஒப்பற்ற ஒரு குறளை—முயற்சியின் முதன்மையை விளக்கும் ஒரு குறளை இம்மாநாட்டின் செய்தியாக உங்களுக்குஎடுத்துக்கூறி எனதுரையை முடிக்கின்றேன்.

○○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF PERADENIYA
LIBRARY

# திருக்குறளும் மொழிப் பெயர்ப்புக்களும்*

திருக்குறள் பல துறைகளில் ஒப்புயர்வற்ற பெரு நூலாகவும் தனிச்சிறப்புக்கள் பலவற்றைக் கொண்ட தமிழ் மறையாகவும் விளங்குகின்றது. இது ஒரு சமய நூலன்று; எனினும் உலகப் பொதுமறை எனவும் போற்றப்படுகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டதெனினும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதை நிலைநாட்டி சம வாய்ப்புச் சம உழைப்புச் சமநீதிச் சமவாழ்வுச் சமுதாயத்தை உருவாக்கும் வழியை வகுத்துக் காட்டுகின்றது; மனித குலத்தின் சாதி மத குல நிற வர்க்க பொருளாதார வேறுபாடுகளை அகற்றும் நெறியை விளக்குகின்றது; உறுதியான உழைப்பினால் எவரும் எண்ணியதை எண்ணியவாறு பெறலாம் என்பதை வலியுறுத்துகின்றது. மக்களைச் சுரண்டி வாழும் புல்லுருவிகளுக்கும், பச்சோந்திகளுக்கும், மானம்

---

* யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் 7. 1. 1974இல் நிகழ்த்திய உரையைத் தழுவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இழந்து மாற்றாரை மண்டியிட்டு அண்டிப் பிழைப் போருக்கும் உய்யும் வழியை உரைக்கின்றது.

இத்தகைய சிறப்புக்களால் திருக்குறள் தமிழ் அறிஞர்களையும் பிற நாட்டறிஞர்களையும் ஈர்த்து ஈர்த்து இன்புறுத்தியுள்ளது. திருக்குறளிலும் அதன் ஆசிரியர் திருவள்ளுவரிடத்தும் பேரார்வம் கொண்ட மக்கள் தங்கள் ஈடுபாட்டைப் புலப்படுத்தித் திருக் குறளுக்குப் பத்துக்கு மேற்பட்ட பெயர்களை இட் டனர். திருவள்ளுவருக்கும் தெய்வப்புலவர் முதலிய பல பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தனர்; திருவள்ளு வருக்குக் கோயிலும் எழுப்பினர்.

திருக்குறளின் கருத்தாழத்திலும் சொற்றிறனிலும் தோய்ந்த அறிஞர் பெருமக்கள் தம் சிந்தனைகளுக் கேற்பப் பல உரைகளை எழுதிப் பணிபுரிந்தனர்; பதின்மர் எழுதிய உரைகளின் பின் இன்று வரையும் பலர் புத்துரைகளை எழுதி வெளியிட்டுளர்.

திருக்குறளின் கருத்துக்களை விளக்குதற்குத் திருக்குறள்களை ஈற்றடிகளாக வைத்துச் சோமேசர் முதுமொழி வெண்பா போன்ற பல நூல்கள் பாடப் பட்டன. திருவள்ளுவரின் பெயரையும் திருக்குறளின் பெயரையும் பூண்ட பல கழகங்கள் பல நாடுகளிற் பணிபுரிகின்றன; பல ஏடுகளும் திருவள்ளுவரின் பெய ரையும் திருக்குறளின் பெயரையும் தாங்கி வெளி வந்துள. திருவள்ளுவர் தொடர் ஆண்டினையும் இன்று தமிழ்கூறு நல்லுலகம் வழங்கத் தொடங்கி யுளது.

திருக்குறளின் சிறப்பியல்புகள் குறித்து எழுதப் பட்ட நூல்கள் பலவாகும். தமிழில் வேறு எந்த நூல் குறித்தும் இவ்வளவு தொகையான ஆராய்ச்சி நூல்கள் தோன்றவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திருக்குறள் ஆராய்ச்சிக்கு மூன்று பல்கலைக் கழகங்களில் தனித்துறைகளைத்தமிழினத்தின் தனிப் பெரும் தலைவரும் தமிழ்நாட்டின்முதலமைச்சருமான பேரறிஞர் அண்ணாதுரை நிறுவியிருக்கிறார். பல்கலைக்கழகங்களில் இத்தகையதொருபெருமையை உலகத்தில் வேறெந்த நூலும் பெறவில்லை. இந்தப் பெருமையை ஆக்குதற்கு அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமே காரணம் என்பதையும் மகிழ்ச்சி யுடன் குறிப்பிடவிரும்புகின்றேன். சென்னைமாநகரில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலே இந்த அரும்பெரும் பணி யைச் செய்வதற்குத்தாம் முடிவு செய்திருப்பதாகப் பேரறிஞர் அண்ணாதுரை அறிவித்தார்கள்.

இவ்வாறு தமிழ் மக்களையும் தமிழ்ப்புலவர்களை யும் தமிழ் அமைச்சர்களையும் மட்டும் திருக்குறள் ஆட்கொள்ளவில்லை. பிறநாட்டு நல்லறிஞர்களையும் அஃது ஈர்த்து ஈர்த்துஇன்புறுத்தியது. தமிழைக் கற்றுத் திருக்குறளைப்படித்த பிறமொழியாளர்கள் மட்டு மன்றித் திருக்குறள் மொழிபெயர்புக்களைக் கற்றவர் களும் திருக்குறளில் எல்லையில்லா ஈடுபாடு கொண் டார்கள்.

டபிள்யு. எச்சு. இடுறு, எலிசாகூல், சி.யு. போப், சாள்சு, ஈ.கவர், ஈ.சே. உறொபின்சன், கால்டுவெல், எம். ஏரியல், கிரௌல், பிறடெறிக் பின்காட், பார் சிவல், விண்டர்னிச்சு, சே. இலாசரசு, ஏ. கிறான்று, அலச்சாந்தர் பயாதிகோசுக்கி, சாள்சு மோங்கு துமண, மனமோகன கோசு முதலிய பிற நாட்டுப் பேரறிஞர்கள் திருக்குறளைப்பற்றிக் கூறி யுள்ள கருத்துக்களைப் படிப்பவர்களின் உள்ளம் பேருவகைக் கடலிற்றிளைக்கும்; கட்டுப்படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முடியாத பெருமிதம் அடையும். திருக்குறளின் சிறப்பியல்புகளைத் திறம்பட நுணித்தாய்ந்து உரைத்த அல்பேட்டுச் சுவைச்சர் எனும் பேரறிஞர் "திருக்குறளுக்கு இணையான ஞான நூல்–வாழ்வு நூல் உலகில் இல்லை" என்று அறுதியிட்டுரைத்துளர்.

தமிழகம் உலகத்துக்குக் கொடுத்த ஈடிணையற்ற பெரும் செல்வம் திருக்குறளேயாகும். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பெருமிதத்துடன் பாடினார் பாரதியார். இன்று வள்ளுவர் தந்த வான்மறை உலகமெங்கும் பரவிவருகின்றது. திருக்குறளின் ஒப்புயர்விலாப் பெருஞ்சிறப்பை உணர்ந்த பிறநாட்டு மக்கள், தம்நாட்டு மக்களும் படித்துப் பயன் பெறுதற்காக அதனைத் தங்கள் மொழிகளில் மொழிபெயர்த்துளர். இம்மொழி பெயர்ப்புப் பணி தொடர்ந்து நடைபெறுவது பாரதியாரின் வாக்கை மெய்ப்பிக்கின்றது. இன்றுவரைசெய்யப்பட்ட திருக்குறள் மொழிபெயர்ப்புக்களின் விபரங்களை ஈண்டுத் தொகுத்து ஆராய்வோம்.

உலகத்திலுள்ள மொழிகளிலே மிகத் தொகையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் கிறித்தவ சமய நூலாகிய பைபிளேயாகும். இதற்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ள நூல் இசுலாமிய சமய நூலாகிய கோறான் ஆகும். இந்த இருநூல்களும் இருபெருஞ் சமயங்களின் முதனூல்களாகும்.

சமயச்சார்பற்ற நூல்களில் திருக்குறளே பெருந்தொகையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூலாகும். மேனாட்டு மொழிகளில் முதன் முதலாக மொழி பெயர்க்கப்பட்ட தமிழ்நூலும் திருக்குறளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யாகும். மேனாடுகளிலிருந்து கிறித்தவ சமயப் பணியாற்றுதற்குத் தமிழகத்துக்கு வந்த சமயத் தொண்டர்களே தொடக்கத்தில் திருக்குறளை மொழிபெயர்த்தார்கள்.

தமிழை முறையாகக் கற்றுப் புலமை பெற்றுத் தமிழ்த் தாய்க்குப் பல தொண்டுகள் செய்து புகழ் ஈட்டிய மேனாட்டு அறிஞர்களுள்ளே முன்னிலையில் விளங்குபவர் இத்தாலிய நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த தவத்திரு சி. சே. பெசுக்கி என்னும் சமயத் தொண்டராவர். வீரமாமுனிவர் எனுந் தமிழ்ப் பெயரைத் தன் பெயராகக் கொண்ட இப் பெரியார் தேம்பாவணி எனுந் தீந்தமிழ்க் காப்பியத்தை ஆக்கிய பெருஞ்சிறப்புக்கும் உரியவர். இவர் ஆயிரத்தெழுநூற்று முப்பதாம் ஆண்டில் திருக்குறளினை இலத்தின் மொழியில் மொழிபெயர்த்தார். ஐரோப்பிய மொழிகளில் முதலில் வெளிவந்த திருக்குறள் மொழிபெயர்ப்பு இவருடைய மொழி பெயர்ப்பேயாகும்.

ஆயிரத்தெழு நூற்றுத் தொண்ணூற்று நான்காம் ஆண்டில் என்.ஈ. கிண்டர்சிலி என்பவர் தெரிந்தெடுத்த சில குறள்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அறிவுக்கடல் எனும் பெயருடைய நூலில் இவை இலண்டனில் வெளியிடப்பட்டன. இவரின் மொழி பெயர்ப்பே ஆங்கிலத்திற் செய்யப்பட்ட முதலாவது மொழி பெயர்ப்பாகும். இவருக்குப் பின் ஆயிரத்து எண்ணூற்றுப் பன்னிரண்டில் இடபிள்யு. எல்லிசு என்பவர் திருக்குறளின் முதற் பதின்மூன்றதிகாரங்களிலுள்ள அறுபத்தொன்பது குறள்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தம் மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெயர்ப்புடன் இவர் விரிவுரையும் எழுதி வெளியிட்டார். திருக்குறளை மொழிபெயர்த்தவர்கள் எவரும் இத்தகைய விரிவுரையினை எழுதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய மொழிபெயர்ப்பையும் விரிவுரையினையும் சென்னைப் பல்கலைகழகம் வெளியிட்டுளது.

திருக்குறளை முப்பதுக்கு மேற்பட்ட மூதறிஞர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துளர். இவர்களுள் மேனாட்டவரும், தமிழ்நாட்டவரும், ஈழநாட்டவரும் உளர். மேனாட்டவர்கள் பெரும்பாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தம் மொழி பெயர்ப்புக்களைச் செய்துளர்.

ஆயிரத்தெண்ணூற்று நாற்பதில் இடபிள்யு. எச்சு. இடுறு என்பவர் திருக்குறளில் அறுபத்து மூன்று அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அரும்புகழ் பெற்றார். இவரை அடுத்து சி. ஈ. கவர் என்பவர் ஆயிரத்தெண்ணூற்றெழுபத் தொன்றில் செய்யுள் வடிவத்தில் மொழிபெயர்த்தார். இம் மொழி பெயர்ப்புடன் திருவள்ளுவரின் வரலாறும் வரையப்பட்டுளது. ஈ. சே. உறொபின்சன் ஆயிரத் தெண்ணூற்றெழுபத்து மூன்றாம் ஆண்டில் முதற் குறள் தொடக்கம் இருநூற்று நாற்பது குறள்களை ஆங்கிலத்தில் செய்யுளாக மொழிபெயர்த்தார். இம் மொழிபெயர்ப்பு ''தமிழ் மெய்யறிவு'' எனும் நூலில் வெளியிடப்பட்டுளது. பின்னர் இவர் ஆயிரத்தெண்ணூற்று எண்பத்தைந்தில் திருக்குறளின் முதலிரு பகுதிகளையும் மொழிபெயர்த்தார்; ''தெய்வப் பறையன்'' எனும் பெயருடன் திருவள்ளுவர் வரலாற்றினையும் எழுதினார். இம்மொழிபெயர்ப்பும் வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

லாறும் இலண்டனில் வெளியிடப்பட்ட "தென்னிந்திய கதைகளும் கவிதைகளும்" எனும் நூலிற் சேர்க்கப்பட்டுள.

திருக்குறள் முழுவதும் பரிமேலழகர் உரையுடனும், தெளிபொருள் விளக்கப் பதவுரையுடனும், ஆங்கில மொழிபெயர்ப்புடனும் ஆயிரத்தெண்ணூற்றெண்பத்தைந்தாம் ஆண்டில் வெளியிடப்பட்டது. திருக்குறள் முழுவதற்கும் ஆங்கிலமொழிபெயர்ப்பைக் கொண்ட முதல் வெளியீடு இதுவேயாகும். இந்நூல் திருமயிலை முருகேச முதலியாரால் பரிசோதிக்கப்பட்டு, புட்பரதச் செட்டியாரால் கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தில் பதித்து வெளியிடப் பட்டது. இந்த நூலில் முதல் அறுபத்து மூன்று அதிகாரங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்புப் பல மொழிபெயர்ப்புக்களிலிருந்து தொகுக்கப்பட்டது. ஏனைய எழுபது அதிகாரங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புசே. இலாசரசுஎன்பவரால்செய்யப்பட்டது.

தமிழ் மொழியினை நன்கு கற்று அதன் அருமை பெருமைகளில் ஈடுபட்டுத் திருவாசகத்தையும் திருக்குறளையும் நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பெருந்தகையாளர் சி. யு. போப் ஆவார். தம்முடைய கல்லறையிலே தம்மை "ஒரு தமிழ் மாணவன்" என்றெழுதுமாறு பணித்த இத்தமிழ்த் தொண்டரைத் தமிழ மக்கள் போப்பையர் என்று போற்றுகின்றனர். இவர் திருக்குறளைச் செய்யுள் வடிவத்திலே மொழிபெயர்த்த ஆண்டு 1886 ஆகும். இவருடைய மொழிபெயர்ப்பினைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் 1958 இல் சிறப்புறப் பதித்து வெளியிட்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எச். ஏ பொப்பிலி என்பவரும் 1931 இலே திருக்குறளை மொழிபெயர்க்கும் பணியிலீடுபட்டார். இவர் முதல் இருபது அதிகாரங்களையும் ஏனைய அதிகாரங்களிற் சில குறள்களையும் மொழிபெயர்த்துளர். இந்நூலின் ஆராய்ச்சி முன்னுரையும் விளக்கக் குறிப்புகளும் குறிப்பிடத்தக்கன. ஈ. உனவற்று எம்மஞ்சு என்பவரின் தேர்ந்தெடுத்த குறள்களின் மொழி பெயர்ப்பு நியூயோர்க்கில் 1968இல் வெளியிடப்பட்ட "இந்திய மெய்யறிவு" எனும் நூலிலும், 1975 இல் அச்சிடப்பட்ட "தமிழ் மக்களின் மெய்யறிவு" எனும் நூலிலும் வெளியிடப்பட்டுள.

தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் இருபதாம்நூற்றாண்டிலே திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் திருக்குறளிடத்துத் தாம் கொண்ட ஈடுபாட்டினைப் புலப்படுத்தினார்கள். திருக்குறள் முழுவதையும் சிறந்த முறையில் முதலில் மொழிபெயர்த்த பெருமகனார் வ. வெ. சு. ஐயர் ஆவார். பலருடைய பாராட்டைப் பெற்ற இவருடைய மொழிபெயர்ப்பிற் பல பதிப்புக்கள் வெளிவந்துள. முதற்பதிப்பு1915இல் வெளியிடப்பட்டது. திருமதி. திருநாவுக்கரசு ஒரு நாளைக்கு ஒரு மணி என 366 குறள்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1915இல் வெளியிட்டார்.

1920இல் ச. சபாரத்தின முதலியாரும், 1925 இல் மாதவையாவும், 1933 இல் அரங்கநாத முதலியாரும், 1937இல் இராசகோபாலாச்சாரியாரும், 1942இல் பூரணலிங்கம் பிள்ளையும், 1949 இல் இராமச்சந்திர தீட்சிதரும், 1950இல் இராசகோபால அயங்காரும், 1954 இல் ஐ. டி. தங்கசுவாமியும், 1965

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இல் ஆர். முத்துச்சாமியும், 1968 இல் யோகி சுத்தானந்த பாரதியாரும், 1969இல் சி. வான்மீக நாதன், கத்தூரி சிறீநிவாசன் என்போரும் திருக் குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்கள்.

எசு. எம். மைக்கேல் என்பவர் சில குறள்களை ஆங்கிலச் செய்யுளில் மொழிபெயர்த்து 1928 இல் வெளியிட்டார். ரி. வி. பரமேசுவரன் ஐயரின் நூற் றெட்டுக்குறள் மணிகளின் மொழி பெயர்ப்பும் இந்த ஆண்டிலேயே வெளியிடப்பட்டது. வி. சின்னராசன் தெரிந்தெடுத்த சில மணிக்குறள்களை மொழி பெயர்த்து 1967இல் வெளியிட்டார். வி. கே. பரமேசு வரன்பிள்ளையும் ஓர் ஆங்கில மொழிபெயர்ப்பினை ஆக்கியுளர்.

இந்த மொழி பெயர்ப்புக்களையெல்லாம் படித்து ஆராய்ந்து திரு. கே. எம் பாலசுப்பிரமணியம் தாம் செய்யுளுருவில் ஆக்கிய திருக்குறள் ஆங்கிலமொழி பெயர்ப்பினை 1973 இல் அழகுறப் பதித்து வெளி யிட்டுப் பெருந்தொண்டு செய்துளர். திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்களில் விலையாலும் அள வாலும் கூடிய இவருடைய நூல் பல சிறந்த இயல்புகளைக் கொண்டு மிளிர்கிறது. ஆசிரியரின் ஆராய்ச்சி முன்னுரை, பேரறிஞர்கள் பலரின் மதிப்பு ரைகள், திருக்குறளின் பெருமையைப் பற்றிப் பேரறி ஞர்கள் பலர் எழுதிய கருத்துரைகள் முதலியவற்றை யும் இஃது அடக்கியுளது.

திரு. கோ வடிவேலுச் செட்டியார் 1919 இல் பதிப்பித்த திருக்குறளில் ஆங்கில மொழிபெயர்ப்புஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சேர்க்கப்பட்டுள்ளது. திருக்குறள் மூலத்துடன் இடுறு . இலாசரசு என்போருடைய ஆங்கில மொழிபெயர்ப்பையும் சேர்த்து, சென்னை ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்தினர் 1949 இல் ஒரு நூலை வெளியிட்டனர்.

திருப்பனந்தாள் காசிமடத்தினர் தாம் வெளியிட்ட திருக்குறள் உரைக்கொத்தில் பூரணலிங்கம் பிள்ளை, மைக்கேல், இராமச்சந்திர தீட்சிதர், இராசகோபாலஐயங்கார், வ. வே. சுப்பிரமணிய ஐயர், இடிறு, இலாசரசு என்போருடைய ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் பொருத்தமானவற்றைத் தெரிந்தெடுத்துச் சேர்த்துளர். இந்த உரைக் கொத்தின் முதற்பதிப்பு 1957 இல் வெளியிடப்பட்டது. தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் திருக்குறள் மூலத்துடன் போப், இடிறு, இலாசரசு, எல்லிசு என்போரின் ஆங்கில மொழிபெயர்ப்புக்களைச் சேர்த்து 1958 இல் வெளியிட்டுளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே திருக்குறளைச் சேர்மன் மொழியிலும் பிரெஞ்சு மொழியிலும் மொழி பெயர்த்துளர். திருக்குறள் முதன் முதல் மொழி பெயர்க்கப்பட்ட பெருமையைப் பெற்ற மொழி இலத்தீன் எனக்கண்டோம். அடுத்து, பிரெஞ்சுமொழி இடம் பெறுகிறது. மூன்றாவதிடம் ஆங்கில மொழிக்குரியது. தெரிந்தெடுக்கப்பட்ட சில குறள்களின் பிரெஞ்சு மொழி பெயர்ப்பு 1767இல் பாரிசில் வெளியிடப்பட்டது; மொழிபெயர்த்தவரின் பெயரை அறிய முடியவில்லை. பிரெஞ்சு மொழி பெயர்ப்பினை 1848-இல் இ. ஏரியல் என்பவர் ஆக்கினார். இவரை அடுத்து எம். இலேமரேசு என்பவரும் 1867இல் திருக்

குறளைப் பிரெஞ்சில் மொழி பெயர்த்தார். 1854இல் பி.சி.உடுமாத்துஎன்பவரும்,1867இல்கூலூரயிசேகோலி யோ என்பவரும்,1889இல் சி. பாரிகோபான்டேனோ என்வரும் சில பகுதிகளை மொழி பெயர்த்தனர். நானோபியாகே என்பவரின் பிரெஞ்சு மொழி பெயர்ப்பு 1942 இல் வெளியிடப்பட்டது.

நான்காவதிடத்தைப் பெறும் ஐரோப்பியமொழி சேர்மன் மொழியாகும். 1803 ஆம் ஆண்டில் சேர்மன் மொழிபெயர்ப்பு ஒன்றாக்கப்பட்டது. இதன்ஆசிரியர் எ.எவ்.காமெசுஎன்பவராவர். 1847 இல் பிறெடெறிக் குத் நக்கேட்டு என்பவரும் சில குறள்களை மொழி பெயர்த்தார். உவில்லியம் என்பவரும் நேதேற்று என் பவரும் சேர்ந்து செய்த மொழிபெயர்ப்பு 1856 இல் இலண்டனில்வெளியிடபட்டது. கார்லகிரௌல் எனும் நல்லறிஞரின் மெழிபெயர்ப்பு 1854 இலும், 1865 இலும் வெளியிடப்பட்டது. இம்மொழி பெயர்ப்பி னைப் படித்தேதிருக்குறளின் செம்மையினையுஞ்சிறப் பினையுந் தாம் அறிந்ததாகப் பல்கலைப் பேரறிஞர் அல்பேட்டுச் சுவைச்சர் கூறியுளர். அல்பிறட்டு பென்சு என்பவரும் கே. லலிதாம்பாளும் செய்த மொழி பெயர்ப்பு 1977 இல் மதுரையில் வெளியிடப்பட்டது.

போலிசு மொழியிலும் உருசிய மொழியிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உரை நடையிலமைந்த உருசியமொழி பெயர்ப்பு 1963 இல் வெளியிடப்பட்டது. இதனை ஆக்கியவர் யூறி. கிளாசொவ்வு எனும் அறிஞராவர். இவருக்கு ஏ. கிருட்டினமூர்த்தி உதவி செய்தார். அலெவ் இப்ராகிமோவ் என்பவருடைய உருசிய மொழி பெயர்ப்பு 1974 இல் மொசுக்கோவில் வெளியிடப்

பட்டது. இது செய்யுணடையிலுளது. போலிசு மொழி பெயர்ப்பின் ஆசிரியர் வாண்டிடைநோவாகீவ் உமா தேவியாவார். இம்மொழி பெயர்ப்பு 1958 இல் சென்னையில் வெளியிடப்பட்டது. என்னுடைய நண்பர் இன்வே பிரிக்கோலம் திருக்குறளை சுவீடிசு மொழியில் மொழிபெயர்த்து 1971 இல் வெளி யிட்டார். 5—1—74 இல் அம்மொழி பெயர்ப்பு நூலை நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் எனக்குக் கொடுத்தார். இம்மொழி பெயர்ப்பைச் செய்யுமாறு முன்னர் யான் அவருக்கு விடுத்த வேண்டுகோளை நிறைவேற்றியமைக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுளேன்.

கலாநிதி கமில் சுவலபெல் எனும் அறிஞர் சில குறள்களைச் செக்கோசிலவக்கிய மொழியில் செய்யு ளுருவில் மொழிபெயர்த்து 1952-54 காலப்பகுதியில் நோவிஒறியன்று எனும் ஏட்டில் வெளியிட்டார். இடச்சு மொழியில் 1964 இல் டி. காற் என்பவர் மொழிபெயர்த்தார். ஆர்மீனியன் மொழியிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுளது.

கீழை நாட்டு மொழிகள் பலவற்றில் இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட் டுளது. சமக்கிருதத்தில் நான்கு மொழிபெயர்ப்புக்கள் வெளிவந்துள. அறத்துப்பாலை அப்பாவாசபேயர் என்பவர் 1922 இல் மொழிபெயர்த்தார். விளக்க வுரையுமடங்கிய இம்மொழி பெயர்ப்புக்குச் ''சுநீதி மாலா'' எனப்பெயரிடப்பட்டது. சங்கர சுப்பிரமணிய சாத்திரியின் மொழிபெயர்ப்பு 1937-40 இல் வெளி யிடப் பட்டுள்ள ''சகிருத்திய'' ஏட்டிதழ்களில் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெற்றுளது. 1961இல் சிறீராமதேசிகன் என்பவர் ஆக்கிய அறத்துப்பால் மொழி பெயர்ப்புக்குப் பெரிய தொரு வெளியீட்டு விழா நடத்தப்பட்டது. இவர் 1978 இல் பொருட்பாலையும் மொழிபெயர்த்து அதனு டன் ஆங்கில மொழிபெயர்ப்பையுஞ் சேர்த்து வெளி யிட்டார்.

சமக்கிருதத்தில் செய்யுளிலும் இந்தியில் உரை நடையிலும் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு நூல் 1956 இல் வெளிவந்துளது. ''குறள்காவ்ய'' எனும் பெயர் கொண்ட இந்த நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை. தியாகசமுத்திரம் சக்கரபாணி ஐய ரென்பவர் 1930 க்குமுன் திருக்குறளை வடமொழிச் சுலோகங்களாக மொழிபெயர்த்தார் என உ. வே. சாமிநாதையர் கூறியுளர். இந்நூல் 1983 இல் உ. வே. சாமி நாதையர் நூல் நிலைய வெளியீடாக வெளி யிடப்பட்டுளது. சிறீதிருக்குடந்தை ஆண்டவன் என்பவர் அற்புதவாமனன் எனும் பெயருடன் திருக்குறளைச் சமக்கிருதத்தில் மொழிபெயர்த் துளர் என 'சிறீமந்முனீத்திரய சித்தாந்தரும் அதன் தாபனாசார்ய சரித்திரமும்' எனும் நூல் கூறுகிறது. இந்த இரு சமக்கிருத மொழிபெயர்ப்புக்களும் அச்சிடப்படவில்லை.

இந்தி மொழியில் வெளியான திருக்குறள் மொழி பெயர்ப்புக்கள் ஐந்து. சேமானந்தராதத்து என்பவர் முதலில் மொழி பெயர்த்தார். தமிழ்வேதம் எனும் பெயருடன் இது வெளியிடப்பட்டது. 1945இல் கோவிந்தராய செயின் என்பவரும், 1952இல் பேராசிரியர் பி. டி. செயின் என்பவரும், 1958இல் சங்கரராசா நாயுடு என்பவரும் மொழிபெயர்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சங்கரராசா நாயுடு அவர்களின் மொழிபெயர்ப்புச் சென்னைப் பல்கலைக்கழகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. 1964இல் எம். சி. வேங்கடகிருட்டினன் செய்யுள் வடிவில் ''உத்தரவேதம்'' எனும் பெயருடன் மொழிபெயர்த்துளர்.

மலையாள மொழியில் பல பேரறிஞர்கள் திருக்குறளை மொழிபெயர்த்துளர். முதலில் 1595 இல் திருக்குறள் மலையாளத்தில் உரைநடையில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பு ஆசிரியரின் பெயரை அறிய முடியவில்லை. இம்மொழிபெயர்ப்பைப் பற்றிச் சென்னைப் பல்கலைக்கழக நூலகர் எசு. ஆர். இரங்கநாதன் கொச்சி அரசின் 1933—34, தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்கள அறிக்கையில் குறிப்பிட்டுளர். இம் மொழிபெயர்ப்பு பின்னர் 1938-41இல் இராமவர்ம ஆராய்ச்சிக் கழகத்தின் செய்தித்திரட்டில் வெளியிடப்பட்டுள்ளது. இம்மொழி பெயர்ப்புத் தான் பிற மொழிகளிலுள்ள மொழி பெயர்ப்புக்களில் காலத்தால் முந்தியது. வீரமாமுனிவர் 1730இல் செய்த இலத்தீன் மொழிபெயர்ப்பு இதற்கு அடுத்த மொழிபெயர்ப்பாகும். திவான் பகதூர் கோவிந்தபிள்ளையின் மொழிபெயர்ப்பு 1915 இல் வெளிவந்தது. சிறீபரமேசுவரன் பிள்ளை 'இரத்தின உத்தராகம்' எனும் பெயருடன் ஒருமொழி பெயர்ப்பை 1950 இல் வெளியிட்டார். வெண்ணிக்குளம் கோபாலகுறுப்பு முதலிருபாகங்களையும் 1957 இல் மொழி பெயர்த்து வெளியிட்டார். இராமகிருட்டினபிள்ளை செய்யுளில் மொழிபெயர்த்து 1957 இல் வெளியிட்டார். பி. தாமோதரன் பிள்ளை ''குழந்தைகளுக்குத் திருக்குறள் மணிகள்'' எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெயருடன் 1951 இல் ஒரு மொழிபெயர்ப்பை வெளியிட்டார். 1963 இல் பாக்கரன் நாயர் முதற்பகுதியின் மொழிபெயர்ப்பை விளக்க உரையுடன் வெளியிட்டார்.

தெலுங்கில் 1887 இல் 'திரிவர்க்கபிரதீபிகா' எனும் பெயருடன் கனுப்பார்த்தி வேங்கடராம சிறீ வைத்தியநாதநாதர் என்பவரும், 1892 இல் நரசிம்மாலுநாயுடு என்பவரும், தெரிந்தெடுத்த சில குறள்களை 1906 இல் சி. இலக்குமி நாராயணன் சாத்திரி என்பவரும் மொழி பெயர்த்தார்கள். 1948 இல் சிறீராமுலுரெட்டி என்பவரும், 1954 இல் கலாநிதி இராதாகிருட்டின சர்மாஎன்பவரும்மொழிபெயர்த்தனர். இவருடைய மொழிபெயர்ப்புக்குத் 'தமிழ் வேதம்' என்றுபெயர்சூட்டினார். 1952இல் சகன்னா சாத்திரி செய்யுளில் மொழிபெயர்த்தார். இம்மொழி பெயர்ப்பு 'திருவள்ளுவர் சூக்தம்' எனும் பெயரைக் கொண்டது. 1955 இல் சலையா என்பவரின் மொழி பெயர்ப்பு வெளியானது. சிறீபதிசாத்திரி 1966 இல் மொழிபெயர்த்தார்.

கன்னடத்தில் நீதிமஞ்சரி எனும் பெயருடன் நரசிம்மாச்சாரியார் திருக்குறளை மொழிபெயர்த்தார். எல். குண்டப்பாவின் அறத்துப்பால் மொழி பெயர்ப்பு 1955 இல் வெளியாயிற்று. 1939 இல் நளின்மோகன் சன்யால் என்பவர் தமது வங்காள மொழிபெயர்ப்பை வெளியிட்டார். ஈ.சி. சாத்திரியின் வங்காள மொழிபெயர்ப்பு 1947இல் வெளியிடப்பட்டது. இந்தியசாகித்திய மன்றஆதரவில் சிறீபோம்மன விசுவநாதம் என்பவரும் வங்காள மொழியில் பெயர்த்துளர். மராட்டிய மொழியில் 1948 இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சானே குருசி என்பவர் மொழிபெயர்த்தார். இந்திய சாகித்திய மன்றத்தின் ஆதரவில் க. சிறிசிறினிவாசாரியும் மராட்டி மொழியில் மொழி பெயர்த்தார்.

குசராத்திமொழியில் சோச்சி நச்சிங்லால் செய்த மொழி பெயர்ப்பு 1934 இல் வெளியிடப்பட்டது. எல். கலானி காந்திலால் 1971 இல் தமது மொழி பெயர்ப்பை வெளியிட்டார். சௌராட்டிரமொழியில் எஸ். எஸ். இராம் என்பவர் தமது மொழிபெயர்ப்பை 1980 இல் வெளியிட்டார். இந்திய சாகித்திய மன்றம் திருக்குறளை 1965 இல் கசரத்சுஃரவார்தி என்பவரைக் கொண்டு உருதுமொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டுளது. மொகமது யூசுவ்கோகன் என்பாருடைய உருது மொழிபெயர்ப்பையும் அராபிக்கு மொழி பெயர்ப்பையும் ஒன்றாகச் சேர்த்து 1976 இல் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுளது.

1961 இல் புஞ்சிகாமி எனும் பெண்மணி திருக்குறளைச்சிங்களமொழியில் மொழிபெயர்த்தார். இது தான் முதலாவது சிங்கள மொழிபெயர்ப்பாகும்.

இவரின் பின் இலங்கைச் சாகித்திய மண்டலச் சார்பில் 1964இல் சிறீசாள்சு த. சில்வா என்பவரும் மொழிபெயர்த்தார்.

பர்மா-கம்பைத்தனவைசிய கல்விக்கழகத்தின் பெருமுயற்சியால் யூமியோ தாண்டு ஆக்கிய பர்மிய மொழிபெயர்ப்பு 1964 இல் வெளியிடப்பட்டது. இக் கழகத்தினர் கேட்டுக் கொண்டபடி இம்மொழி பெயர்ப்புக்கு ஒரு முன்னுரை அனுப்பியுளேன். பீச் சித் தீவில் வெளியாகும் பசிபிக்கா எனும் வெளியீட்டின் ஆசிரியர் சாமுவேல் எல். பேர்விக்கு என்பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கைவித்திய மொழியில் திருக்குறளைமொழிபெயர்த்து 1964இல் வெளியிட்டுளர். இந்த இரு மொழிகளிலும் மொழி பெயர்ப்பிக்க எமது தமிழ்மறைக் கழகம் பெரு முயற்சி செய்தது.

மலாயாப் பல்கலைக் கழகத்திலும் கொங்கோங்கு பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராயிருந்தவரும் ஐயோவாப் பல்கலைக்கழகச் சீனமொழிப் பேராசிரியருமான கெஞ்சி என்பவர் திருக்குறளைச் சீனமொழியில் மொழி பெயர்த்தார். இந்நூலுக்குப் பேராசிரியர் தனிநாயகம் முன்னுரை எழுதியுளர். குசெயின் இகமயில் என்பவர் மலாய் மொழியில் மொழிபெயர்த்துளர். இவ்விரு மொழி பெயர்ப்புக் களையும் உருவாக்கி வெளியிடுதற்குத் தவத்திரு தனி நாயக அடிகளார் செய்த முயற்சி பாராட்டுக்குரியது. இந்த இரண்டு மொழிபெயர்ப்புக்களையும் மலாயாப் பல்கலைக்கழக இந்திய கல்வித்துறைத் திணைக்களம் வெளியிட்டுளது. வெளியீட்டுக்குரிய பணம் இப்பல் கலைக்கழக ஆட்சியிலுள்ள நாட்டுக் கோட்டைச் செட்டியார் அறக்கட்டளை நிதியிலிருந்து கொடுக் கப்பட்டது.

இன்றுவரை இருபத்தாறு மொழிகளில்திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுளது. இந்திய மொழிகளில் பத்து மொழிகளில் மட்டுமே மொழிபெயர்க்கப்பட்டு ளது. அசாம்மொழி, காசுமீர் மொழி, ஒறியமொழி. பஞ்சாபி மொழி முதலிய இந்திய மொழிகளில் இன்னும் திருக்குறள் மொழி பெயர்க்கப்படவில்லை. இந்த மொழிகளில் மொழிபெயர்ப்பித்தற்கு இந்திய சாகித்திய மன்றம் தொடர்ந்து முயலுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யப்பான், வியட்னாம் மொழிகளில் மொழி பெயர்ப்பிக்க நாம் செய்த முயற்சி இன்னும் பலனளிக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார நிறுவகத்தினூடாகப் பிறமொழிகளில் திருக்குறளை மொழி பெயர்ப்பதற்கு இந்திய சாகித்திய மன்றமும் தஞ்சாவூர்த்தமிழ்ப்பல்கலைக்கழகமும் முனைதல் இன்றியமையாதது. தமிழ்ப் பல்கலைக் கழகம் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பொன்றை உருவாக்கி மலிவு விலைப் பதிப்பாக உடனே வெளியிடல் வேண்டும். இப்பணி பிற மொழிகளில் திருக்குறளை மொழி பெயர்ப்பித்தற்கும் பெரிதும் உதவும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 17 | 20 | புலவர் | புலவர். |
| 21 | 16 | எனங் | எனுங் |
| 22 | 19 | அமையம் | அமயம் |
| 22 | 26 | நண்பற்றா | நண்பாற்றா |
| 29 | 25 | ஆற்றுஞ | ஆற்றுணா |
| 41 | 19 | ஏன்பது | என்பது |
| 46 | 7 | அவராக | அலராக |
| 57 | 14 | னுயாவையே | னுயர்வையே |
| 86 | 23 | வேலான் | வேவாள் |
| 88 | 15 | புசி | புலி |
| 89 | 13 | கட்டிச் | கூட்டிச் |
| 96 | 2 | னுங்கினிய | னூங்கினிய |
| 98 | 1 | எய்தினதால்" | எய்திஞல்" |
| 115 | கடைசி வரி | குறளிறனே.. | குறளிற்புனே |
| 120 | 5 | பின்ணே | பின்னே |
| 120 | 27 | கருத்துக்களேக் | கருத்துக்களே |
| 131 | 5 | நாட்டின் | நாட்டில் |
| 152 | 9 | மொழியின் | மொழியின்- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தமிழ்ச் சான்றோர் கா. பொ. இரத்தினம்

### எழுதிய நூல்கள்:

1. தமிழ்மறை விருந்து
2. தாவரம் இல்லை
3. இலங்கையில் இன்பத்தமிழ்
4. நூற்றாண்டுகளில் தமிழ்
5. இலக்கியம் கற்பித்தல்
6. மனப்பால்
7. அடிமைச் சாசனம்
8. தனி ஆட்சி
9. பச்சை மண்ணும் சுட்ட மண்ணும்
10. தடுப்புக்காவலில் பத்து நாள்கள்
11. இருபத்து நாலு மணி நேரத்தில் தமிழ் ஈழம்
12. தமிழ் உணர்ச்சி
13. கற்பக மலர்
14. உரைவண்ணம் (அச்சில்)
15. இமயத்து உச்சியில் (கவிதைகள்) (அச்சில்)

### வெளியிட விருப்பன :

1. காவிய மணம்
2. கன்னிப்போர்
3. கல்வியும் தமிழகமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF PERADENIYA
18-7-2001
★ LIBRARY ★

534281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF PERADENIYA
18-7-2001
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



பேராசிரியர் கா.பொ. இரத்தினம் யாழ்ப்பாண மாவட்டத்தில்வேலணை எனுமூரில் பிறந்தவர். 'பண்டிதர்' 'வித்துவான்' பட்டங்களுடன் இலண்டன் பல்கலைக் கழகத்தின் பி.ஏ., (ஆனர்சு) சென்னைப் பல்கலைக் கழகத்தின் பி.ஓ.எல்., எம்.ஏ.,பட்டங்களையும் பெற்றவர். தமிழகப் புலவர் குழு இவருக்குத் "தமிழ்ச்சான்றோர்" எனும் பட்டத்தை வழங்கிச் சிறப்புச் செய்தது. 'செந்தமிழ்க்கலைமணி', 'திருக்குறள் செல்வர்' எனும் பட்டங்களையும் பெற்றவர்.

கொழும்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியில் 12 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். இலங்கை அரச கருமத் திணைக்களத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராக ஆறாண்டுகளுக்கு மேல் பணியாற்றிப் பதினாயிரத்துக்கு மேற்பட்ட ஆட்சிச் சொற்களை வெளியிடுதற்குப் பொறுப்பாயிருந்தவர். மலேசியாப் பல்கலைக் கழகத்திலும் பணியாற்றியவர்.

1965ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைப் பாராளுமன்றத்தில் உறுப்பினராகப் 18 ஆண்டுகள் தொடர்ந்திருந்து தமிழ் மொழி உரிமைக்கும், தமிழின விடுதலைக்கும், தமிழ் ஈழக் குறிக்கோளுக்கும் அஞ்சாமலும் அசையாமலும் அயராமலும் போராடினவர்.

திருக்குறள் தமிழரின்மறை—தமிழ்மறை என்பதை நிலைநாட்டுதற்கு 1952இல் தமிழ்மறைக் கழகத்தை நிறுவி, அதன் ஆயுள் தலைவராக இருந்து பலதுறைகளிற் பகர்வரும் பணிகள் செய்துவருகிறார். உலகமெங்குமுள்ள தமிழருடன் தொடர்பு கொண்டு உலகத் தமிழ்மன்றத்தை 1963இல் கோலாலம்பூரில் நிறுவிப் பதிவுசெய்து அதன் தலைவராகப் பலஆண்டுகள் பணி செய்தவர்.

தமிழ் வழங்கும் நாடுகளிலுள்ள ஏடுகள் பலவற்றிலும் சிறப்பு மலர்களிலும் இவருடைய கட்டுரைகள் வெளிவந்துள. பல நாடுகளுக்குச் சென்று தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றியவர். பன்னிரண்டுக்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியராகிய இவருடைய கவிதைகளின் தொகுப்பு 'இமயத்து உச்சியில்' எனும் நூலாக வெளிவர உளது.

அச்சிட்டோர் : ஸ்ரீ கோமதி அச்சகம், சென்னை-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media